# திருக்கோயில்

மே 1975

ரூ. 1

TAMIL NADU ARCHIVES
LIBRARY
30 JUN 1975
MADRAS-8

100



R.R.No.1204-55/75
TAMIL NADU ARCHIVES LIBRARY 30 JUN 1975 MADRAS-8
TAMIL NADU ARCHIVES LIBRARY 2 JUL 1975 MADRAS-8

**முகப்பு :**

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிற் சிற்பம்.

# திருக்கோயில்

மாலை 17 | இராக்கத, சித்திரை — மே, 1975 | மணி 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் 'சந்தாதாரர்கள்' ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 12/-   தனி இதழ் ரூ. 1/-**

## பொருளடக்கம்

1. சிலப்பதிகாரக் கவிதை விருந்து
—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்
2. தமிழ் உணர்ச்சி தழைத்தோங்க வேண்டும்
—மாண்புமிகு மு. கண்ணப்பன்
3. திருவல்லிக்கேணித் திருக்குட நன்னீராட்டு விழா
—திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I.A.S.,
4. திருவித்துவக்கோட்டு அம்மான்
திரு. ந. சுப்புரெட்டியார், M.A., PH.D.
5. பஞ்சாமிர்தம்
—டி. என். சுகிசுப்பிரமணியன்
6. மழை வேண்டும்
கவிஞர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்
7. சுவாமி இராமதீர்த்தர்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
8. தாயுமானவர் சினம்
—டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., PH.D.
9. திருக்குறள் மாட்சி
—கவிஞர். சி. து. கன்னிசாமி
10. ஒன்பதுநகரக் கோயில்கள்
—திரு. வீர. நடராசச் செட்டியார்
11. பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்
—ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,
12. கந்த புராணம்
—திருமுருக கிருபானந்தவாரியார்
13. திருவாசகத்தின் பெருமை
—நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள். M.A., M.O.L.

துணை ஆசிரியர்: கே. எஸ். ஜெகன்நாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

# சிலப்பதிகாரக் கவிதை விருந்து

## மாண்புமிகு டாக்டர் கலைஞர்
## தமிழக முதல்வர்.

சென்னை-600 008.
158602
JL
O2m21, N58
N75-17.8

வணக்கம்.

வண்ணத் தமிழ் வடிவம் எங்கள் நாவலர்க்கும்
எண்ணக் கருவூலம் இனிய பேராசிரியர்க்கும்
கண்ணப்பன், மன்னை, சாதிக் அமைச்சருக்கும்
அண்ணன் வழிவந்த அனைவர்க்கும் வணக்கம்.
சிலம்பொலிக்கும் சிவஞானச் செல்வர்க்கும்,
செந்தமிழ்ப் பழஞானக் கணேச நல்லார்க்கும்,
சிரம் தாழ்ந்த வணக்கம்!
சீரழிந்த பூம்புகாரைச்
செம்மையுறச் செய்யும் பணி
ஆர்வமுடன் நடப்பதற்கு
அழைப்பேற்று வந்துள்ள
அன்புள்ளம் அத்தனைக்கும் அடியேனின் வணக்கம்.
சிலப்பதிகார விருந்து ஒன்றைத் தருவதற்குச்
சீலமிகு தமிழெடுத்து வந்துள்ள கவி நெஞ்சங்கட்கு
என் கனிவான வணக்கம்!
அருந்தமிழே! அமுதே!
நறுமலர் மணமே! தேனே!
அன்னையாய் வந்தென்னை ஆட்கொண்டவளே!
அண்ணனாய் வந்தென்னை ஆளாக்கியவளே!
காஞ்சி அண்ணன் கால்மலர் தொழுது
கவியரங்கம் தொடங்குகின்றேன்.

வாழ்ந்திடம்மா
தமிழர்கள் வாழ,
தமிழ் நிலம் வாழ!

குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் ''அணை'' என்றான்—அவன்
கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து,—தன்
கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்.
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழ மன்னன்
பூம்புகாரின் கடல்அலையைக் கணவனாய் ஆக்கிக் காத்தான்!
பிறந்த வீட்டை மறந்திடாமல்—என்றும்
புகுந்த வீட்டு வளம் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமை யென்றால்—நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே!

இவ்வாறு,

காவிரி புகுந்த பட்டினம் தான்,
காவிரி புகு பட்டினமாய்த் திரிந்து நின்று
காவிரிப்பூம் பட்டினமாய் மாறிற் றென்பேன்.

கரிகாலன் பெருவளத்தான் திருமாவளவன்
கனிவுமிகு நட்புக்கு அவன் உறையும் வாளாம்
கயமைமிகு பகைமைக்கோ உறை விட்டெழுந்த வாளாம்.
உறையூரைத் தலைநகராய்க் கொண்டு—பின்னும்
ஒரு ஊரை மணந்து கொண்டான் தலைநகராய், அந்த—
இரு தார மணத்தானுக்கு வாய்த்த இளையவளே
இனியவளாய் இங்குநமை வரவேற்கும் பூம்புகாராம்.
''நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்''—எனப்
பட்டினப்பாலை முழங்குகின்ற துறைமுகப்
பட்டினமாய் விளங்கிற்றந்நாள்!
மருவூர்ப்பாக்கம் உண்டு ஆங்கு மறங்கெழுவீரர் உண்டு.
மருவு பெண்ணாசையால் மயங்குகிற
மாநகர நம்பியர்கள் நடமாடும் பகுதியுண்டு.
நாளங்காடி உண்டு—அங்குப் பிற
நாட்டார்கள் நாள்தோறும் வருதல் உண்டு.
அரச வீதி, ஆடும் கொடித் தேர் வீதி,
வாணிகர் வீதி, வாய்மை நிறை வேளாளர் வாழும் வீதி,
மருத்துவர், சோதிடர், மாகதர், கூத்தர்,
மண்டிக்கிடக்கும் யானைகுதிரை சூழும் வீதி
சித்திரப் பாக்கமெனச் செப்பும்—சீர்மலி
பட்டினப் பாக்கமாய்த் திகழ்ந்த தந்நாள்.

வடநாட்டுப் படையெடுப்பில் சோழன் பெற்ற
புகழ்நாட்டும் பட்டி மன்றம், முத்துப்பந்தர்,
தோரண வாயில்—எனத் தொல் புவியில் தமிழன்—வெற்றி
நிலைநாட்டும் நெடுங்கல் மன்றம், இலஞ்சிமன்றம்,
கலைநாட்டம் கொண்டோரைக் கவர்ந்திழுக்கும் பாவை மன்றம்,
முருகன் கோட்டம், அதனருகே புத்தர் கோட்டம்,
முத்தமிழ் ஒலிக்கும் கோட்டம் நாள்தோறும்
சித்திரைத் திருநாள் கூட்டம்!
இதையெல்லாம் சித்தரிக்கும்
இளங்கோவின் குணவாயிற் கோட்டம்;
எல்லாமே அழிந்த தம்மா கடலாலும் காலத்தாலும்!
என்றாலும் சேரன் தந்த சிலம்புச் செல்வம்
அழியாத கருவூலம்—அணையாத திருவிளக்கு.

அந்த,
விளக்கொளியில் விழிப்புற்று
மறக்கவொண்ணா மொழிப்பற்றால்
விளைந்தது தான் புதிய புகார்—வெறும்
வீணர்கள் தினம்எழுப்புகின்ற புகார் அல்ல.
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் மூச்சால்
பொங்கிப் படைத்த புதிய புகார்—பூம்புகார்.
மனை விளக்குக் கண்ணகிக்கும்
மாதரசு மாதவிக்கும்
பணவைர மார்பன் கரிகாற் சோழனுக்கும்
பாவரசு இளங்கோவின் பண்பார்ந்த சிலம்புக்கும்
எழிலார்ந்த புத்துருவம் கொடுக்கச் செய்ய
எனைப் பெற்ற தமிழுக்கும், என் தாய்தந்தை
இருவர்க்கும் எவ்வாறு நன்றி சொல்வேன்?

நமக்கு,
சிறப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்கத்—தன்னாட்சி கோரி
இறப்பு வரினும் அதனை உவந்தேற்போம் என்றும்,—பதவித்
துறப்பு வரினும் பொருட்படுத்தோம் என்றும்,—இந்தச்
சிலப்பதிகாரம் அன்றோ உணர்வூட்டல் கண்டோம்.
வஞ்சகர் வந்தார் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தார் நம் வரலாற்றை அழித்தார்

இன்று,
கொஞ்சுகின்ற சிலம்பன்றோ நம் சரித்திரத்தைக்
கொஞ்சமேனும் காட்டுகின்ற கோபுரத்துத் தீபம்;
''சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஒரு பாட்டுடைச் செய்யுள்என

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது.
அடிகள் நீரே அருளுக'' என்றிட
எழுந்த காப்பியம் எழுச்சிக் காப்பியம்!—அந்த
இலக்கியத்தில் விருந்தொன்றை அளிப்பதற்கு
இணையற்ற கவிஞர் எண்மர் இங்குள்ளார்
''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப''
இலக்கணக் கிழவர் இயம்பிய வழியில்
எட்டுச் சுவை இங்கே படைப்பர்!

நகை அழுகை இழிவு வியப்பு
அச்சம் வீரம் வெகுளி உவகை எனப்
பகை நோக்கமின்றிப் பாடுகின்ற போட்டி.

அழுகையினால் நகை கேட்டு அடையக் கூடும்
அச்சத்தால் அடங்குகின்ற அத்தானை மணந்து விட்டால்!
இழிவு வந்தும் வெகுளாதார் நிலை கண்டு
வீரர்க்கு நெஞ்சில் வியப்புத் தோன்றும்.
உவகையும் அழுகையும் ஒருதாய் மக்கள்,
ஒருவரை ஒருவர் நிழல்போல் தொடர்வர்!
இந்த,
எட்டுச் சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக் கொடி
கொற்றக்குடை
முத்துச்சரச்
சோழனூர் வருவீரரே!
சுவை விளக்கம் தருவீரே!
என அழைத்தோம், எண்மர் இதோ வந்துள்ளார்!
எட்டெழுத்துச் ''சிலப்பதிகாரம்'' இயற்றியவர்—சுவை
எட்டெடுத்துச் சேர்க்காமல் விடுவாரோ?
''எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்—மண்ணின் மேற்
போக்கிய பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்து மயங்கி,
விடுத லறியா விருப்பினனாகிய கோவலன்''
கெடுதலறியாக் கண்ணகியுடன் பகிர்ந்த இன்பம் கணக்கிலதே!

தும்பை மலர்க் கண்ணகியும் கோவலனும்
''தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவார்
காமர் மனைவியெனக் கை கலந்து—நாமந்
தொலையாத இன்ப மெலாம் துன்னினர்—மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று . . .''
உவகையில் மட்டுமல்ல;
அழுகையிலும்—கோவலன் தாள் பற்றித்
தொழுகையிலும் மாதவி, கண்ணகி பாத்திரங்கள் போட்டி போடும்!

காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமிழாற்றல் அறிந்திலராகிச்
செப்பிய மொழிகளைச் சேரன் கேட்டு,
கொட்டுக முரசெனக் கூறிய சொல்லும்
கொடியவர் முடித்தலை ஏறிய கல்லும்
வீரச்சுவை விளக்குகிற காட்சி—தமிழன்
வெற்றிக் கொடி பறக்க விட்ட மாட்சி!

தித்திக்கும் தேன்பாகைத் தெவிட்டாத தெள்ளமுதக் கோவலனை
எத்திக்கும் புகழ் பாண்டியனே திருடனாக்கிக் கொன்றுவிட,
தீச்சுழலாய்ப் பெருகி வந்த கண்ணகியோ;

தீர்ப்பளித்த மன்னவனைத் தலைகுனிய வைப்பதற்குச்
சிலம்பெடுத்து உடைத்தபோது—தன்
எலும்பெடுத்து உடைத்தது போல் வியப்புற்றான் மதுரை வேந்தன்!
உடன் வீழ்ந்திறந்தான்!

நீதி வழுவா நெறிமுறைப் பாண்டியன் நான்!—அந்த
நெடுஞ்செழிய மன்னவனா நீதி தவறிவிட்டேன்?
என்ற கேள்வியில் தான் எத்துணை வியப்பு?
எத்துணை பதைப்பு?

வியப்புறுதல், நகைத்தல், அழுதல், வெகுளல்,
வீரம், இழிவு, அச்சம், உவகை என்னும்
எட்டுவகைச் சுவையினிலே எதிலும்
ஒட்டுறவு இல்லாத பிறவிகளும் உலகிலுண்டு.

இடிமுழக்கம் கேட்பது போல் அரங்கில்
வெடிச் சிரிப்பு நகைச் சுவையைக் கலைவாணர்
படித்தவர்க்கும் பாமரர்க்கும் வழங்கும் போதும்
இடித்து வைத்த புளிபோல் சிலபேர்
இளித்திடவும் விரும்பாமல் இருப்பதுண்டு!

அடுக்கடுக்காய்ச் சிறைவாசம்
அடக்குமுறை வனவாசம் என்றே
அருமைமிகு கொள்கைக்குத் தியாகம் ஏற்ற
பெருமைமிகு தலைவர்களும் மறைந்துவிட்டார்!
அழுகை நின்ற அகத்தினராய் முகத்தினராய்
ஆயிரம் பதினாயிரம் லட்சமென மக்கள் கூட்டம்
இடுகாட்டுப் பொட்டலிலே ஏங்கி நிற்கும்—
இறந்தவர்க்கு இறுதிவணக்கம் செய்வதற்கு;—அப்போது
கோமாளிக் கூத்தாடும் ஓர் மனிதன் அங்குவந்தால்
ஏமாளிக் கூட்டமொன்று கூச்சல் போடும்—
கைதட்டு—ஆரவாரம்—களிப்புக்கூத்து—நம்
காதுகளும் கண்களும் தானாக மூடிக் கொள்ளும்!
அழுகைக்கும் உவகைக்கும் இடம் பொருள் தெரியாதோர்
கழுதைக்கும் கீழானோர் எனச் சொல்வேன்!

நூற்றிரண்டு மெய்ப்பாடாம் சுவை பிரித்து—பழ
நூற்புலவர் தொல்காப்பியர் கருத்து நெய்தார்!
அவற்றில் தலையான எண்சுவையும் கிளையான பல்சுவையும்
கவிநயத்தில் காட்டுதற்கு இங்கே கவிஞருண்டு.
அவிநயத்தில் காட்டுதற்கும் அணங்கு உண்டு.
ஆனாலும் சில பெண்கள் ஆட்டம் கண்டால்—நம்
வாழ்நாளில் பெரும்பாவம் செய்தோர் ஆவோம்!
தீப்போலத் தகிக்கின்ற காமத்துக்கும்,
தேள்போலக் கொட்டுகின்ற கோபத்துக்கும்,
சினங்கொண்ட நாகமெனச் சீறுகின்ற ''பாவ''த்துக்கும்
செம்மாதுளைக் கன்னங்கள் குவிக்கின்ற நாணத்துக்கும்
சிறிதளவு வேறுபாடும் ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை.
அரிதாரப் பூச்சு முகத் தசைவிலோர் அசைவுமில்லை.
அங்கங்களின் சேட்டையன்றித் தங்கமகள் சில முகத்தில்
அணுவளவு மாற்றமேனும் அவிநயத்தால் கண்டதுண்டோ?

'திமி திமி' என ஆடுகின்றார்—அவை அதிர
'மிதி மிதி' எனச் சேறு மிதிக்கின்றார்
அவரெல்லாம் தொடர்ந்து ஆடிவந்தால்—குட்டிச்
சுவராகும் நடன மேடை! கொலையாகும் கலை என்பேன்.

இறுதியிலே 'உவகை' வைத்து எட்டு வகை மெய்ப்பாட்டை
அறுதியிட்டு மாலை செய்தார் காப்பியனார்—இன்றோ
உவகையுடன் தொடங்கிடுவோம் கவியரங்கம்!
உறுதி மிகு வீரத்தைக் கடையில் கேட்போம்!
கடைச் சரக்கா வீரமெனக்

கண்மணியே கேட்காதே—சில
கட்சித் தலைவர்க்கு—விலை கேட்கும்
பொருளாய்த் தான் போயிற்று வீரம்!
போர் என்ருல் நான் முந்தி நீ முந்தி
எனும் கூட்டம் நம் கூட்டம்—அக்கப்
போர்ப் பேர் வழிகள் கூட்டமல்ல; வைக்கம்
போர் வீரர் வழி வந்தவர் நாம்! வைக்கோல்
போர்—இந்தத் தீயுடனே விளையாடலாமா?
எதற்காக நல்லரங்கில் பிறர் நினைவு!

உவகையிலே தொடங்கி நம் கவியரங்கு
உலகு புகழ் வீரமுடன் முடியட்டும்!
கடையில் வீரம் கேட்கலாம் என நானிங்குக்
கழறியதின் விளக்கம் புரிகிறதா நன்கு?
இடையழகு மணிமேகலையில் காட்டி—சிலம்பில்
நடையழகு காட்டுகின்ற தமிழணங்கே!—இதோ, கவிஞர்
படை வரிசை கிளம்பிற்றம்மா—உனக்குப்
பா வரிசை வைப்பதற்கு—நடக்கட்டும்
கை வரிசை நானழைக்கின்றேன்—கவிஞர்களை

கவிஞர்களை அறிமுகப்படுத்தியது :

முதலில் வைரமுத்துக் கவிஞர் சிலம்புப்
பரலில் உவகை பற்றிப் பாடிடுவார்.
உவகையைத் தொடர்ந்து அழுகை வரல் காண்பீர்!
உருவிலே பெருந்தேவன் வயதிலே இளந்தேவன்
சிலம்பிலே 'அழுகை' எனும் அமுதைச்
செந்தமிழில் அள்ளி அள்ளித் தருவார்.

அழுகை கண்டு நகைப்பவரும் உண்டு
அந்தக் கல்நெஞ்சுக் கவி கண்ணப்பன்
நகையோடு வருகின்ருர் . . கோவலன்போல்
சிலம்பென்னும் நகையோடு மதுரைக்கு வரவில்லை
சிலம்பினிலே செழிக்கின்ற நகை காட்டப் பூம்புகார்க் கவியரங்கிற்கு
வருகின்ருர்.

வீணுக நகைப்பவர் மேல் வெகுளியால் பாய்ந்திடுவார் உண்டு.
சீராகக் கால்தூக்கி ஆடுகின்ற நடராசன் தில்லையிலே
இங்கு,
நேராகக் கவிதூக்கி வருகின்ருர்
தி.கு. நடராசன் தமிழ்க் கொல்லையிலே . . .
வெகுளி பற்றி வெகுளாமல் பாடுமய்யா!

வெகுண்டவரைக் கண்டாலே அச்சம் வரும்
தகுந்தவரைக் கொண்டதனைப் போக்கிடவே
தமிழன்பக் கவிஞரை நாம் அழைத்துள்ளோம்.
அவை அச்சமின்றிச் சொல்லாடும் அருந்தமிழ!
சுவைசொட்டும் மொழியாலே கவிதை பொழி!

'அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்' எனினும்
வெஞ்சமர் முடுக்கிக் கொள்கையில் வென்றிட
அஞ்சுதல் தீதே! ஆண்மையும் இலதே!
அச்சம் வரின் ''இழிவு'' வருமென்று
ஆண்ட தமிழ் இனத்துக்கு
அறிவுறுத்த வருகின்ருர் அப்துர் ரகுமான்.
அவர் பாடுகின்ற சுவை ''இழிவு''
ஆனல் அது தமிழ்ப் பொழிவு!

இழிவு வரின் இறப்பது தான் தமிழர் மாண்பு!
இது வந்தும் பலபேர் உயிரோடு இருப்பது பற்றி
வியக்கின்றார் குருவிக்கரம்பையார்.
குத்தூசி குருசாமியை பெற்றெடுத்த சிற்றூர்
முத்தான சண்முகத்தை நமக்களித்துத்
தமிழகத்தை வியப்பினிலே ஆழ்த்துதம்மா!

வீரம் பற்றிப் பாடுதற்குச்—செயலில்
வீரம் காட்டும் கவிஞருண்டு—நெஞ்சில்
ஈரம் என்றும் எனக்குண்டு—இந்தப்
பொன்னிப் பயிரை வளர்ப்பதற்கே!
வளவன் வாழ்ந்த மாநகரில்—பொன்னி
வளவன் பாடும் கவி கேட்போம்.

முடிவுரை :

காலைமுதல் இந்தக் கவியரங்குவரை
கன்னல் நிகர் தமிழோசை கேட்டு
மகரந்தம் உண்டு மகிழ் வண்டாகக் கிடக்கின்றேன்.
மனம்பெற்ற 'ஓர்பொழுது நிம்மதி'யால் களிக்கின்றேன்.
முடிமன்னர் முதுபுலவர் வளர்த்த தமிழ்த்—தேனைப்
படிபடியாய்க் குடித்த பின்னர்
முடிவுரையும் கூறுதற்கு முடியுமோ என்னால்?
பூம்புகார் வந்தோரே!
புத்துணர்ச்சி பெற்றோரே!
சென்று வருக என வாழ்த்துதற்கு முன்
சித்திரை முழு நிலா இன்று கண்டிடுக—
முத்திரைப் பொன்னும் குழந்தைகட்கு
முத்தம் ஈந்திடுக கடற்கரையில் . . .
குழந்தைக்கு மட்டுந்தானா எனக் கேட்காதீர். . .
மடந்தைக்கும் காளைக்கும் இடையிலுள்ள விவகாரம்.

பூம்புகார் நிலாப் பார்த்திடுவீர்—தமிழ்ப்
புவியாண்ட சோழ மன்னன் கொற்றக்குடை போல அது
இருப்பதையும் எண்ணிடுவீர்—நம்
இலட்சியத்தை எய்திடவே—சிலம்பு
இலக்கியத்தைச் சிந்தையிலே பதித்திடுவீர் . . .
அலைபாயும் கடலோரம் நிற்கும்போது
அண்ணாவழி நடக்கின்ற அரசுக்கும்

வாழ்த்துச் சொல்வீர்!

வணக்கம்.

[சித்திரை முழுநிலா நாளில், பூம்புகார் நகரில் "சிலப்பதிகாரக் கவிதை விருந்து" கவியரங்கிற்குத் தலைமை தாங்கி, நமது முதல்வர்—தமிழவேள்—மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பாடிய தலைமைக் கவிதை, இங்குப் போற்றி எடுத்து வெளியிடப்படுகிறது. —ஆசிரியர்]

# அருள்திரு
# கொழுந்தீசுவரசுவாமி
# திருக்கோயில்

## கோட்டூர்—மன்னார்குடி வட்டம்
## தஞ்சாவூர் மாவட்டம்

### கோயில் சிறப்பு விவரம்

மேற்படி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கோட்டூரில், மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் நெடுஞ்சாலையில் 9 கல் தொலைவில் அமைந்துள்ளது.

சுவாமி பெயர் : அருள்திரு கொழுந்தீசுவரர்

அம்பாள் பெயர் : அருள்திரு தேனம்பிகை

தல விருட்சம் : வன்னிமரம்

தீர்த்தங்கள் : இத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன

சிவாலயமும், தெய்வ மூர்த்தமும், மேற்கு நோக்கிய சந்நிதி.

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது.

இத்தலம் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் ஒன்றுடையது. சிவத்தலக் கோவையிலும் பாடல்களுள்ளன. உமாபதி சிவாச்சாரியர் அருளிய திருப்பதிக் கோவையுமுண்டு. பெரியபுராணம் அருளிச் செய்த சேக்கிழார், ஞானசம்பந்தர் ''கோட்டூரும், வணங்கியேத்தி, திருவெண்டுறை தொழச் சென்றார்'' என்று கூறியுள்ளார்.

திரு. எஸ். கோவிந்தநாத மால்தத்தியார்,
திரு. மா. அண்ணாமலை,
திரு. வீ. நடராஜன்,
திரு. இரா: கிருட்டிணமூர்த்தி,
அறங்காவலர்கள்.

திரு. கு. பாலகிருட்டிணன், எம்.எல்.ஏ.,
நிர்வாக அறங்காவலர்,
திரு. எம். இரா. கிருஷ்ணன், பி.ஏ.,
நிர்வாக அதிகாரி.



# தமிழ் உணர்ச்சி தழைத்தோங்க வேண்டும்


## மாண்புமிகு மு. கண்ணப்பன்

அறநிலையத்துறை அமைச்சர்


அண்மையில் திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர்த் திருக்கோயில் திருப்பணித் துவக்க விழா ஒன்றிற்குச் செல்ல வேண்டி நேரிட்டது. அவ்விழாவில் பல்வேறு கட்சியைச் சார்ந்த நண்பர்களும் பொதுமக்களும் பெருமளவில் கூடியிருந்தார்கள். அத்திருக்கோயிலில் உறையும் இறைவியின் பெயரைக் குறிப்பிடும்போது அங்கே பேசிய பலரும் ''ஸ்ரீ தர்மசம்வர்த்தினி'' என்றே தங்கள் பேச்சில் குறிப்பிட்டார்கள். நான் அருகிலிருந்த அறநிலையத்துறை அதிகாரிகளைக் கேட்டபோது தமிழில் அழகாக 'அறம் வளர்த்த நாயகி' என்று வழங்கிடும் அதனையே வட மொழியில் 'ஸ்ரீ தர்மசம்வர்த்தினி' என்று குறிப்பிடுவதாக விளக்கினார்கள்.

எவ்வளவு அழகான தமிழ்ச் சொல்! இன்றைய தினம் வழக்கொழிந்து போய் விட்டதே என்று, நான் வருத்தப்பட்ட போது, அருகில் இருந்த பிறிதோர் கட்சி நண்பர் ஒருவர் ''அறம் வளர்த்த நாயகி'' என்று சொல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறதே என்று, அங்கலாய்த்தார். அவர் நிலை கண்டு வெட்கினேன். ஆனால் அவரோ அதைப் பற்றிக் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை! இது தமிழகத்தில் இன்று பரவலாகக் காணக்கிடக்கும் அவல நிலை.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்க்குடி' என்ற பெருமைக்குரிய தமிழ்ப் பெருமக்கள் சிறந்த பண்பிற்கும், கலாச்சாரத்திற்கும், நாகரிகத்திற்கும் உரியவர்கள். தங்கள் உயிரினும் மேலாகத் தங்கள் தாய்மொழியாம் தமிழினைக் காத்தவர்கள். இதனைக் கருதித்தான் பிற்காலத்துப் புலவரான பாரதியாரும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். காலத்தால் பல்வேறு மொழிகள் வழக்கொழிந்து சிதைவுற்றுப் போன நிலையிலும், தமிழ் மொழியொன்றே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு இன்றும் மிளிருகின்றது. வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் தமிழ் தன்னேரில்லாத ஆட்சி செய்து வந்தது.

தமிழ்ப் பெருமக்கள் தாங்கள் வாழும் நிலத்தை நான்கு வகையிலே பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயரினைப் பொருள் பொதிந்த முறையில் வைத்தார்கள். அதே போல, காலத்தை ஆறு வகையாகப் பிரித்தார்கள். இப்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இலக்கண வரம்பிற்குள் கொண்டு வந்தார்கள். தாங்கள் வாழும் ஊருக்குப் பெயர் வைப்பதிலே கூட, மிகுந்த அறிவு முதிர்ச்சியைக் காட்டினார்கள். ஒவ்வோர் ஊரும் ஒரு காரணத்தின் அடிப்படையிலேயே பெயர் அமைக்கப்பட்டது. காரணமின்றித் தமிழ்ப் பெருமக்கள் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை. அந்த அளவுக்கு மிகச் சிறந்த வாழ்க்கை முறைக்குத் தங்களை உரியவர்களாக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் என்ன காரணத்தாலோ தமிழ் மொழியைக் காப்பதிலும், வழக்கில் மொழி சிதைவுறாது காப்பதிலும், பிறமொழி ஆதிக்கம் தமிழ் மொழி மீது ஏற்படாவண்ணம் காப்பதிலும், இடைக்காலத்தில் ஒரு வகையான தொய்வு ஏற்பட்டது. இதன் காரணமாகத்தான் நாம் இன்றைய தினம் காணும் ஓர் அவல நிலை உருவானது. அதிலும் குறிப்பாக, சோழர்கள் காலத்தின் பிற்பகுதி தொடங்கி, விசயநகர மன்னர்களின் காரணமாகச் சமயத்துறையில் ஒரு பெரும் மாற்றத்தைக் காணமுடிகிறது. தமிழ்ப் பெருமக்கள் சமயத் துறையில் அந்தக் காலத்தில் மிகச் சிறந்தோங்கி வளர்ந்திருந்தாலும், பிற மொழி ஆதிக்கம், மற்றும் பிற சமயச் சடங்குகள், தமிழ்ப் பெருமக்களிடத்தும் பரவலாக ஊடுருவத் தொடங்கியதைக் காண முடிகிறது. இதன் காரணமாகவே தமிழகத்தில் வழங்கி வந்த பல்வேறு தமிழ்ச் சொற்கள் வடமொழிச் சொற்களின் திரிபு பெற்றோ, அல்லது வடமொழிச் சொற்களின் ஏற்றத்தின் காரணமாகத் தாழ்வுற்றோ போகும் நிலை ஏற்பட்டது.

இந்தக் காலத்திலே தான், தமிழகத்துச் சமயத் துறையில் வடமொழியும், வடபுலத்தார் சமயச் சடங்குகளும் காலூன்றத் தொடங்கின. தமிழ்ச் சமய குரவர்கள் என்று போற்றிப் புகழப்படும் ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய அனைவரும் பாடித் துதித்த பல்வேறு இறையுறை தலங்கள் எல்லாம் கூடத் தங்களின் அழகான தமிழ்ப் பெயர்களை இழந்து வடமொழிச் சொற்களின் ஆளுகைக்கு உட்பட்டன. இதன் காரணமாகத்தான் அவர்கள் பாடிய தேவார, திருவாசகத் திருமுறைகள் அனைத்திலும் இறைவனையும் இறைவியையும் குறிக்க அழகான தூய தமிழ்ச் சொற்கள் எடுத்தாளப் பட்டிருந்தும், இக்காலத்தில் ஓர் ஊரில் சென்று இவ்வூர்த் திருக்கோயிலில் உள்ள இறைவனின் பெயர் என்னவென்றால், உடனே வடமொழியில் அவ்விறைவனின் பெயரைச் சொல்ல

முன் வருகிறார்கள். இதற்கு இன்னுமோர் காரணம், தமிழ்ப் பெருமக்களிலேயே சிலரிடம் வடமொழி ''மந்திரம்'', ''சடங்கு'' ஆகியவற்றிற்கு அடிமைப்பட்டுத் தாமும் அவ்வாறு கைக்கொள்வதைப் பிறருக்குக் காட்டுவதன் மூலம் சமுதாயத்தில் தாங்கள் சிறந்த ஆத்திகப் பெருமக்களாகக் கருதப்படுவோம் என்ற தவறான எண்ணத்தில் எழுந்த துணிவேயாகும். ஆகையினாலேதான் நம்மில் பலர் இன்றும் சிற்றுண்டி விடுதிக்குச் சென்றால் கூட ''சாமி ஜலம் கொடுங்கள். சாதம் போடுங்கள்'' என்று கேட்கிறார்கள். அவ்வாறு அந்த மொழி பேசிவிடுவதாலேயே ஓர் உயர்வு கிடைத்துவிட்டதாக நினைத்துப் போலிப் பெருமையை அடைகிறார்கள்.

வடஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் மிகப் பெரிய சிவத்தலம் திருவண்ணாமலை. அவ்வூரில் பொதுவாக யாரையேனும் பார்த்து, இவ்வூர்த் திருக்கோயில் இறைவனின் பெயர் என்னவென்றால் உடனே ''அபீத குஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர்'' என்றுதான் கூறுவார்கள். தேவாரம் பாடிய அப்பர் அடிகள் 'உண்ணாமுலையாள் உடனுறை அண்ணாமலையான்' என்று இறைவனை அழகுத் தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்டிருந்தாலும், இந்த அழகுத் தமிழ்ச் சொல், வடமொழி ஆதிக்கம் சமயத் துறையில் மிகுந்ததன் காரணமாக வழக்கு ஒழிந்து, இன்று ''அபீத குஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர்'' ஆக வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நல்ல வேளையாக ஊர்ப் பெயரை மாற்றாமல் விட்டுவிட்டார்கள். இதைப் போலவே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வதியும் இறை இல்லங்களில் உள்ள இறைவன் இறைவி ஆகியோரின் பெயர்கள் எல்லாம் வடமொழி ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. இதை எதிர்த்து ஒழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏனோ அன்றைய தினம் நம் தமிழ் மக்களிடத்து உருவாகாதது வியப்பை அளிக்கிறது. இதன் காரணமாகத்தான் தஞ்சை மண்ணின் ஒரு பகுதியான ''திருமறைக்காடு'' இன்றைய தினம் வேதாரண்யமாகக் காட்சியளிக்கிறது. அங்கே உள்ள இறைவன் பெயர் ''மறைக்காட்டு உறையும் மணாளன்''. இறைவியின் பெயர் ''யாழைப்பழித்த மொழி மங்கை'' ஆனால் தேவாரத்தில் காணப்படும் இப்பெயர்கள் இன்றைய தினம் வழக்கொழிந்து வடமொழியில் ''வேதாரண்யேஸ்வரர்'' என்றும் ''வீணகான விதூஷிணி'' என்றும் வழங்கப்படுகிறது. திருமறைக்காடு என்னும் அழகிய தமிழ்ப் பெயர் மறைந்து வேதாரண்யம் என்று இன்று குறிப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைப் போலவே பல இடங்களில் தலங்களின் பெயர்கள் கூட, வடமொழி ஆதிக்கத்திற்குட்பட்டு, தங்கள் இயற்கையான அழகிய தமிழ்ப் பெயர்களை இழந்துஇன்றுபொலிவற்றுவிளங்குகின்றன.

தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் என்றோர் அழகிய தலம் உண்டு. இதன் பண்டைத் தமிழ்ப் பெயர் ''திருமுதுகுன்றம்'' என்பதாம். இங்கே உள்ள இறைவனின் பெயர் ''பழமலைநாதர்''. ஆனால் இறைவனின் பெயர் பழமலைநாதர் என்றிருந்ததை ''விருத்தகிரீசுவரர்'' என்று வடமொழியில் மாற்றியதன் காரணமாக அவ்வூரையும் ''திருமுதுகுன்றம்'' என்றிருந்ததை ''விருத்தாசலம்'' என்றே வடமொழியில் மாற்றியுள்ளார்கள். அதுதான் இன்றைய தினம் வழக்கில் இருந்து வருகிறது. இதில் உள்ள கொடுமை என்னவென்றால், இவ்வளவு தமிழ் உணர்ச்சி மிகுந்துள்ள இக்காலத்தும் கூட, திருக்கோயில் நிர்வாகிகள் தாங்கள் விடுக்கும் திருக்கோயில் நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களிலும், திருக்கோயில் பெயர்ப் பலகைகளிலும் நல்ல தமிழ்ப் பெயரை விடுத்து, வடமொழியிலேயே இறைவனையும் இறைவியையும் குறிப்பிடுவதுதான்! இந்த மொழியுணர்ச்சி மங்கியதன் காரணமாகத்தான் தமிழ் ''வழிபாட்டு முறை'' மாறி வடமொழி ''அர்ச்சனை'' முறை வழக்கில் வேரூன்றி விட்டது. இந்நிலையைப் போக்கி, பழைய முறையைக் கொண்டு வருவோம் என்று நாம் எடுக்கும் நல்ல முயற்சிகளை இந்தியத் தலைமை நீதிமன்றம் வரை சென்று எதிர்ப்பதற்கு நம்மிலேயும் பலர் முன் நிற்கின்றனர், அல்லது ஒத்துழைப்புத் தருகின்றனர் என்ற அவல நிலையினைக் கண்ணுறும் போது, மெத்தவும் வேதனை ஏற்படுகிறது. இவர்கள் மனத்திலெல்லாம் என்றைக்குத்தான் தமிழ் உணர்வு முழுமையாக இடம் பெறப் போகிறதோ தெரியவில்லை.

எனவே, தமிழ் மண்ணில் உள்ள தலங்களைத் தமிழ்ப் பெயராலேயே குறிப்பிடுவதும், தமிழகத்து இறைவன் இறைவியின் பெயர்களையெல்லாம் தூய தமிழில், அதிலும் குறிப்பாக ஆத்திகப் பெருமக்கள் பெரிதும் போற்றும் சமய குரவர்களின் சொற்களாலேயே குறிப்பிடுவதும், இனியாவது பெரும் ஆர்வத்தோடு கைக்கொள்ளப்பட வேண்டும். இந்த உணர்வுகளெல்லாம் ஒருவராலே ஊட்டி வளர்க்கப்பட வேண்டியதன்று. இயற்கையாகவே எந்தத் தமிழ் மகனிடத்தும் இந்த உணர்ச்சி உந்தி உருவாகிச் செயல்வடிவம் பெறல் வேண்டும்.

''திருமயிலாடுதுறை'' கேட்பதற்கே எவ்வளவு இனிமையாக இருக்கிறது. ஆம்! தஞ்சை மாவட்டத்தில் தற்போது ''மாயவரம்'' என்று குறிப்பிடப்படும் ஊர்தான் ''திருமயிலாடுதுறையாகும்''. மயில்கள் கூட்டமாக வந்து ஆடி மகிழும் துறை! தஞ்சை மண்ணில் காவிரி பாய்ந்து வளம் கொழிக்கும் மயிலாடும் துறையை ''மயிலாடுதுறை'' என்றே அழைத்தனர். ஆம்! வலம் வந்த மடவார்கள் நடமாட, முழவதிர, மழையென்றஞ்சிச் சிலமந்தி அலமந்து மரமேறிமுகில் பார்க்கும்'' பதிகளும், ''அன்னம் வைகும் வயற்பழனங்களும்'', ''கயல்களும் வயல்களும்'' நிறைந்த தஞ்சைத் தரணியில் மந்திகளும் ஆடும், மாதரும் ஆடுவர், மயில்களும் ஆடும்.

அப்படிப்பட்ட பெரும்பதியாகிய ''மயிலாடுதுறை'' மீண்டும் பொலிவு பெற்று, அவ்வாறே அழைக்கப்படவும், வடமொழியில் இம்மயிலாடுதுறை''மாயூரமாகி''வழக்கில்''மாயவரமாகக்'' காட்சியளிக்கும் நிலை மாறவும், எடுக்கப்படும் முயற்சிகள் எவ்வகையாலும் பாராட்டுக்குரியனவாகும். இது போன்றே தமிழகத்தின் பல்வேறு ஊர்களும் தங்களின் உரிய தமிழ்ப் பெயர்களாலே வழங்கும் நிலை எய்திட வேண்டும். இந்தத் துறையில் தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை இங்கு விரிக்கின் பெருகும் என்றஞ்சி, இந்நல்ல முயற்சிகள் அனைத்தும் வெல்க! வெல்க! என்று வாழ்த்துகிறேன்.

*

# திருவல்லிக்கேணித் திருக்குட நன்னீராட்டு விழா

திரு கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.
அறநிலையத்துறை ஆணையர்.

தருமமிகு சென்னையைச் சார்ந்த தலங்களுள், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்த தொன்றாகச் சிறந்து திகழ்வது, திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் ஆகும். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 108 திவ்விய தேசங்களுள், திருவல்லிக்கேணியும் ஒன்று. இத்தலத்தினைப் பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவர் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளனர்.

ஒரு சமயம் திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டுள்ள திருமாலிடம், மகாலட்சுமி ஆகிய திருமகள் ஊடல் கொண்டு பிரிந்து, பூவுலகத்திற்குப் போந்து வேதவல்லி என்னும் பெயருடன், அல்லிக்கேணி என்னும் கயிரவிணி தீர்த்தத்தில் தோன்றியருளினாள். இந்த அல்லிக்கேணி என்னும் திருக்குளத்தின் பெயரே, ஊருக்கு அமைந்து திருவல்லிக்கேணி என வழங்கி வருகின்றது. அல்லிக்கேணியில் தோன்றிய வேதவல்லித் தாயாரை இங்குத் தவம் புரிந்து கொண்டிருந்த பிருகு முனிவர் எடுத்து வளர்த்து வந்தார். பின்னர்த் திருவரங்கநாதர் ஓர் அழகிய இளவரசர் வடிவத்தில், மன்னாதர் என்னும் பெயருடன் போந்து, சுத்தமகா துவாதசி நாளில் திருமணம் புரிந்து கொண்டு, இங்கேயே தங்கிப் பக்தர்களுக்கு எல்லா வரங்களும் அளித்து வருகின்றார். மன்னாதர் என்னும் திருவரங்கநாதருக்கு, இக்கோயிலில் தனியே சந்நிதி உள்ளமை காணலாம். இந்தக் கோயிலில் மன்னாதரின் சந்நிதியே, மிகவும் பழமை வாய்ந்ததாகும். பிருகு, அத்திரி, மரீசி, மார்க்கண்டேயர், சுமதி, ஜாபாலி, சப்தரோமர் என்னும் ஏழு முனிவர்கள் இங்கே தவம் புரிந்து, அருள் பெற்றனர்.

முன்னொரு காலத்தில் சுமதி என்னும் முனிவர், திருப்பதி என்னும் திருவேங்கடமலையிலுள்ள பெருமாளை நோக்கித் தவம் புரிந்து, அவர் துவாபர யுகத்தில் கிருஷ்ணனாக அவதரித்துக் குருச்சேத்திரத்தில் நிகழ்ந்த மகா பாரதப் போரினில் பார்த்தன் என்னும் அருச்சுனனுக்குத் தேர்ச் சாரதியாக விளங்கியும், கீதோபதேசம் புரிந்தும், அருள் புரிந்த திருவுருவத்தைக் காட்டியருளுமாறு வேண்டிக் கொண்டார். அவருக்குத் திருவேங்கடவன் வெளிப்பட்டுப் பிருந்தாரணியம் என்னும் திருவல்லிக்கேணியில் சென்று தவம் புரிந்தால், பின்னர் அத்திருவுருவத்தைக் காட்டியருளுவதாகப் பணித்தார். அதன்படியே சுமதி முனிவர் திருவல்லிக்கேணி வந்து தவம் புரிந்து கொண்டிருந்தார்.

அதே சமயத்தில், ஆத்திரேயர் என்னும் மாமுனிவர் வேதவியாசரிடம் சென்று, தாம் தவம் புரிவதற்குரிய தகுந்த இடம் ஒன்றை ஆராய்ந்து கூறுமாறு பணிந்து வேண்டிக் கொண்டார். அப்போது வேதவியாசர், ''தென்னாட்டில் திருவல்லிக்கேணி என்னும் தலம் ஒன்று உள்ளது. அங்கே சுமதி என்னும் முனிவர் ஒருவர், பெருமாளைப் பார்த்தசாரதி வடிவில் காண விரும்பித் தவம் புரிந்து கொண்டிருக்கின்றார். நீரும் அங்கே சென்று தவம் புரிக'' என்று கூறிப் பார்த்தசாரதிப் பெருமாளின் திவ்விய மங்கள விக்கிரகம் ஒன்றைக் கொடுத்து அனுப்பினார். ஆத்திரேய முனிவர் திருவல்லிக்கேணியை அடைந்து, சுமதி முனிவரிடம் அத்திருவுருவத்தைக் கொடுத்து, நட்புக் கொண்டு அளவளாவி மகிழ்ந்தார். சுமதி முனிவர் அத்திருவுருவத்தைத் திருவல்லிக்கேணியில் பிரதிட்டை செய்து, சித்திரைப் பெருவிழாக் கொண்டாடி மகிழ்ந்தார். எனவே பார்த்தசாரதியை வியாசர் பிரதிட்டித்த மூர்த்தி, ஆத்திரேயர் ஆராதித்த மூர்த்தி என்று பெரியோர்கள் போற்றுவர்.

இங்ஙனம் திருவேங்கடமலையிலுள்ள பெருமாளே கிருஷ்ணனாகக் காட்சி தந்தமையால் பார்த்தசாரதிப் பெருமாளுக்கு வேங்கடகிருஷ்ணன் என்ற ஒரு பெயர் வழங்கும். பார்த்தசாரதிப் பெருமாள் வலக் கையில் சங்கும், இடக் கையில் வரத அஸ்தம் என்னும் ஞான முத்திரையும் கொண்டு விளங்குகின்றார். அவருடைய இடக்கையானது பக்தர்களுக்குத் தன்னுடைய பாதங்களைச் சுட்டிக் காட்டும் நிலையில் அமைந்திருக்கின்றது. கிருஷ்ணன் பகவத் கீதையில் ''எல்லாத் தருமங்களையும் அடியோடு கைவிட்டு, என்னுடைய சரணங்களையே உபாயமாகப் பற்று; நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன், வருந்தாதே'' என்று அருளிச் செய்த கருத்தை இக்குறிப்பு உணர்த்துகின்றது. பார்த்தனுக்குச் சாரதியாக விளங்கிய கண்ணபிரான், கீதையை உபதேசித்த திறனையும் இத்திருவுருவிற் காட்டியருளுதலால், இவருக்குக் கீதாச்சாரியன் என்றும் ஒரு பெயர் உண்டு.

இவ்வாறு வேங்கடகிருஷ்ணன் எனவும், கீதாச்சாரியன் எனவும் பெயர் பெற்று விளங்கு

கின்ற பார்த்தசாரதிப் பெருமாள், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள நிலை, பக்தர்களின் உள்ளத்தைப் பெரிதும் பரவசப் படுத்துவதாகும்.

''பற்றலர் வீயக் கோல் கையிற் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றான்''

எனத் திருமங்கையாழ்வார் பாடியபடி, பார்த்தனுக்குச் சாரதியாக விளங்கிய கண்ணபிரான், இங்கே பக்தர்களின் பொருட்டுத் தன் குடும்பத்தினர் அனைவருடனும் எழுந்தருளிக் காட்சி தரும் நிலையில் விளங்குகின்றான். பார்த்தசாரதிக்கு வலப் பக்கத்தில் உருக்குமிணித் தாயார் விளங்குகின்றார். அருகில் பலராமர் ஆகிய தமையனும், சாத்தகி என்னும் தம்பியும் உள்ளனர். மற்றும் பிரத்யும்நன் என்னும் மகனும், அநிருத்தன் என்னும் பேரனும், அக்ரூரர் என்னும் தோழரும் உள்ளனர். இங்ஙனம் கண்ணபிரான் தன் குடும்பத்தினர் அனைவருடனும் ஒரு சேர விளங்கிக் காட்சி தரும் நிலையைத் திருவல்லிக்கேணியிலன்றி வேறு எங்கும் காண்டல் இயலாது.

பார்த்தசாரதிப் பெருமாளின் உற்சவ மூர்த்தம் என்னும் திருவுருவத்தின் முகத்தில், அம்புத் தழும்புகள் பல அமைந்திருப்பதைக் காணலாம். குருச்சேத்திரத்தில் நிகழ்ந்த பாரதப் போரில், பீஷ்மருக்கும் பார்த்தனுக்கும் கடும் போர் நிகழ்ந்த போது, பரசுராமரிடம் விற் பயிற்சி பெற்ற பெரு வீரராகிய பீஷ்மாச்சாரியரின் கணைகள் பார்த்தன் மேல் பட்டு, அவனுக்குக் கேடு நிகழாதபடி செய்வதற்காக, அவற்றைக் கண்ணபிரான் தாமே தம் கருணையினால் தம்மேல் ஏற்றுக்கொண்டு காப்பாற்றியருளிய பெருந் தகைமையை, அத்தழும்புகள் குறிப்பிடுகின்றன.

ஒவ்வொரு நாளும் நிகழும் அபிடேகத்திற்குப் பின்னர்ச் சிறிது நேரத்திலேயே இத்திருவுருவின் பொன்னிற விளக்கம் மாறி, பெருமாளுக்கே இயல்பாக உரிய அழகிய கருநீல நிறத்தை அடையும் திறம், தரிசித்து வியந்து மகிழ்தற்பாலதாகத் திகழ்கின்றது. பார்த்தசாரதிப் பெருமாளின் திருமார்பில், விலையுயர்ந்த மணிகள் பதித்த பிரபை சூழப் பொன்னால் இயன்ற மகாலட்சுமியின் திருவுருவம் அமைந்து திகழும் காட்சி, ''எந்தை ஒரு வல்லித் தாமரையாள் ஒன்றிய சீர்மார்பன் திருவல்லிக்கேணியான்'' என்று பேயாழ்வார் பாடியதனை மெய்ப்பிக்கின்றது.

பார்த்த சாரதிப் பெருமாள் கோயிலில், அவருக்குப் பின்புறம், மேற்கு நோக்கிய சந்நிதி ஒன்று உள்ளது. அங்கே தெள்ளிய (அழகிய) சிங்கர் என்னும் நரசிங்கப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். ஆத்திரேய முனிவரின் தவ நலத்திற்கு மகிழ்ச்சியுற்ற பெருமாள், இங்கு அவருக்கு அவர் விரும்பியபடி வைகாசி சுத்த சதுர்த்தசி நாளில் நரசிங்கப் பெருமாளாகக் காட்சியளித்தார். இச்சந்நிதியிலுள்ள மூலவரின் பெயர் யோக நரசிம்மர். உற்சவரின் பெயர் தெள்ளிய சிங்கர்.

பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில் ஓர் ஆயிர நாமம்
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கு அதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகிப்,
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே

என வரும் திருமங்கையாழ்வாரின் பாசுரத்தில், தெள்ளிய சிங்கப்பெருமாள் பற்றிய குறிப்பு வந்திருத்தல் அறியற்பாலது.

இக்கோயிலிலேயே தெற்கு நோக்கிய மற்றொரு சந்நிதி உள்ளது. இங்கே மதுமன் மகரிஷியின் வேண்டுகோளுக்கு இணங்கி, இராமபிரான் இலக்குவன் பரதன், சத்துருக்கன் சீதை அனுமான் ஆகியோருடன் எழுந்தருளிக் காட்சி தந்து விளங்குகின்றார். இராமர் சந்நிதிக்கு எதிரில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. இராமபிரான் இங்குத் தன் தம்பியருடனும், பிராட்டியுடனும் காட்சி தருதலை,

பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு
மைதிலியும்
இரவும் நன் பகலும் துதிசெய்ய நின்ற இராவணந்
தகனை எம்மானைக்
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு குயிலொடு
மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

என்று திருமங்கையாழ்வார் தமது பதிகத்தில் குறிப்பிட்டிருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

சப்தரோம மகரிஷியின் தவத்திற்கு மகிழ்ந்து, அவர் தம்வேண்டுகோளுக்கு இணங்கிப் பெருமாள், கசேந்திர வரதராசசுவாமி ஆகவும் இங்குக் காட்சி தருகின்றார். ''ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானைத் தேனமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே'' என்று, கசேந்திர வரதராச சுவாமி பற்றிய குறிப்பும், திருமங்கையாழ்வார் பாசுரத்தில் வந்திருக்கக் காண்கிறோம்.

இவ்வாறு, திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில், பற்பல சிறப்புக்களை உடையதாகத் திகழ்கின்றது. வைணவ ஆழ்வார்களுக்கும், ஆசாரியர்களுக்கும், இங்கே பல சந்நிதிகளும் திருவுருவங்களும் அமைந்துள்ளன. வேதமும் திருவாய்மொழியும் ஆண்டு முழுவதும் ஓதப்படுகின்றன. எல்லா ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்களுக்கும் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஆண்டில் ஒவ்வொரு மாதமும் இங்கே விழாக்கள் நடைபெறுவதைக் காணலாம். கோயில்—திருமலை—பெருமாள் கோயில்—அயோத்தி—அகோபிலம் என்னும் ஐந்து தலத்து எம்பெருமான்களும் ஒரு சேர இங்கே எழுந்தருளிக் காட்சி தருகின்றனர். கோயில் மன்னாதர்; திருமலை வேங்கட கிருஷ்ணர் (பார்த்த சாரதி); பெருமாள்கோயில்

கஜேந்திரவரதர்; அயோத்தி இராமபிரான்; அகோபிலம் நரசிம்மர் என்னும் ஐந்து மூர்த்திகளின் தரிசனமும் ஒருங்கே கிடைப்பது, வேறு எங்கும் பெறமுடியாத தனிச் சிறப்பாகும்.

அன்றியும் போகமூர்த்தம், யோகமூர்த்தம், வீரமூர்த்தம் என இறைவனின் திருவுருவங்களை மூன்றுகக் குறிப்பிடுவார்கள். ஒவ்வொரு கோயிலில் ஒவ்வொரு மூர்த்தம் மட்டுமே அமைந்திருக்கும். ஆனல் இக்கோயிலிலோ மூன்று மூர்த்தங்களுமே ஒரு சேர அமைந்திருக்கின்றன. போகமூர்த்தம்—மன்னுதர்; யோக மூர்த்தம்—நரசிம்மர்; வீரமூர்த்தம்—பார்த்தசாரதி. இவ்வாறு மூன்று மூர்த்தங்களையும் ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் தரிசிக்கப் பெறுவதும் பக்தர்களின் பேறேயாகும். இது மட்டுமல்லாமல் இறைவனின் திருவுருவங்கள் ஆசனம், ஸ்தானகம், சயனம் என மூன்று வகையான நிலைகளில் கோயில்களில் அமைந்திருக்கும். திருவல்லிக்கேணியில் ஸ்தானக நிலையில் பார்த்தசாரதியும், ஆசன நிலையில் நரசிம்மரும், சயன நிலையில் மன்னுதர் என்னும் அரங்கநாதரும் விளங்குவதை, நாம் தரிசித்து மகிழலாம்.

இவ்வாறு எத்தனையோ பல சிறப்புக்களையுடைய திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்த ஒரு கோயிலாகும். ''தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி நின்ருன்'' என்று திருமங்கையாழ்வார் பாடியிருத்தலால், இக்கோயில் மிகப் பழங்காலத்தில் தொண்டைமான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதெனத் தெரிகிறது. அது பின்னர்ப் பல்லவ அரசர்களால் புதுப்பித்துத் திருப்பணி செய்யப் பெற்றது என்னும் செய்தி இங்குக் காணப்படும் நந்திவர்ம பல்லவன் (கி.பி. 800—830) கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. சோழர்களும் பாண்டியர்களும் கூட இக்கோயிலில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தனர். பற்பல தானங்களை வழங்கினர். மூன்றும் குலோத்துங்கச் சோழன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. பிற்காலத்தில் விசய நகர அரசர்களும் இக்கோயிலுக்குப் பற்பல திருப்பணிகள் செய்து நிபந்தங்கள் அளித்துள்ளனர். இங்குள்ள திருவாய்மொழிப் பிரபந்த மண்டபத்தின்கண் அழகிய பல சிற்பங்கள் உள்ளன. அவைகள் பல்லவர் காலத்தினவாய் இருக்கக் கூடுமென்று கருதப்படுகின்றன.

இவ்வளவு பழமையும் பெருமையும் மிக்க இக்கோவில், சுமார் 3.5 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் பல செய்யப் பெற்று, மிகவும் சிறப்புற நிகழ்கின்ற திருக்குட நன்னீராட்டு விழாவில் கலந்து கொண்டு தரிசித்து, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்கள் பலவும் எய்தி மகிழ்வோமாக!



அருள்திரு பால தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சுக்கிரவாரப்பேட்டை, கோவை. 1. 1975-ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவின் போது வருகை தந்த (28-1-75) முக்கியப் பிரமுகர்கள்.

# திருவித்துவக்கோட்டு அம்மான்

திரு. ந. சுப்புரெட்டியார் M.A., Ph.D.

பயிர்த் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள், பெரும்பாலும் பயிர்த் தலையிலேயே சிறுகுடில் அமைத்து, அதில் குடியிருந்து கொண்டு, அப் பயிரைத் தம் உயிர் போல் பாதுகாப்பது வழக்கம். இதுதான் உண்மையாக உழவுத் தொழிலில் ஈடுபடுபவர்களின் அறிகுறி. இது கருதித் தான் வள்ளுவப் பெருந்தகை,

''செல்லான் கிழவன்
இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்''

என்று சொல்லி வைத்தனர் போலும். உழவுத் தொழிலே பெரும்பான்மையாக நடைபெறும் நம் நாட்டில், பொதுவாக உழவர்கள் நிலத்தின் தலைமாட்டிலேயே குடிலை அமைத்துக்கொண்டு வாழ்வதைக் காணலாமாயினும், மலை நாட்டில் (மலையாளத்தில்) இந்நிலையைச் சிறப்பாகக் காணலாம். நீர் வளம், நிலவளம் மிக்க அந் நாட்டின் மக்கள் தொகைக் கேற்ப, நிலப்பரப்பு அமையவில்லை. ஒரு சில பெரு நிலக்கிழார்களைத் தவிர, பெரும்பாலோருக்குச் சிறு சிறு பகுதி களே சொந்த நிலமாக அமைந்துள்ளன. இந்தச் சிறு பகுதியாக உள்ள 'காணி நிலத்திலே' 'தூணில் அழகியதாய் . .நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய் . .ஓர் மாளிகை', 'பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள்' பாக்குமரங் கள், பனை மரங்கள் முதலியவையும், பல்வேறு வகைப் பயிர்த் தொழில்களும் நாம் நாடோறும் காணும் காட்சிகள். பெரும்பாலும் வீடுகள் அமையாத நிலங்களைக் காண்டல் அரிது. அவ் வளவு கண்ணுங்கருத்துமாக அங்கு 'உழவு' நடைபெற்று வருகின்றது.

இங்ஙனமே திருமகள் கேள்வனை பரம பதநாதன், தனக்கு அடிமை செய்து உய்தற் காகவே பிறந்த ஆன்மாக்களை யெல்லாம் ஆட் கொண்டு உய்விக்கும் பொருட்டுப் பெருங் கருணையால், பயிர்த்தலையிலே குடில் அமைத்துக் கொண்டு பயிர்களைப் புரக்கும் உழவனைப் போலவே, இந்நில உலகத்தில் 108 திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தரு ளியிருந்து, ஆன்மாக்களை உய்விக்கின்றான் என்பது, வைணவ உலகின் நம்பிக்கை. இங்ங னம் ஆன்மப் பயிர்களைப் புரக்கும் எம்பெருமா னுக்குப் 'பக்தி உழவன்' என்று திருநாமம் இட்டு மகிழ்வர் பக்திசாரர் என்ற திருமழிசைப் பிரான்.

''வித்தும் இடவேண்டும்
கொல்லோ விடை அடர்த்த
பத்தி உழவன்
பழம் புனத்து''

(விடை—காளை; அடர்த்த—அடக்கின.)

என்று கூறுவதைக் காண்மின். இந்த 108 திருப்பதிகளுள் மலை நாட்டிலுள்ளவை மட்டி லும் பதின்மூன்று. இந்தப் பதின்மூன்று திவ்விய தேசங்களும் நீர்வளம் நில வளம் நிறைந்த இடங்களில் அமைந்து ''மாயோன்மேய காடுறை உலகமாகத்'' திகழ்கின்றன. திவ்விய தேச யாத்திரை செய்யும் பக்தர்கள் இந்தத் தனிச் சிறப்பை நன்கு அறிவர்.

இங்ஙனம் 108 திவ்விய தேசங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுள், மூவர் பேரில் மிகவும் ஈடுபட்டு மங்களாசாசனம் செய்துள்ளார், கோழிக்கோன் குலசேகரப் பெருமாள்! திருவரங்கம் பெரிய கோயிலில் அர வணையில் பள்ளி கொண்டுள்ள அழகிய மண வாளன் பேரில் மால் கொண்டு பாடியவை முதல் மூன்று திருமொழிகள் ; வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து நெடியோன் பேரில் அருளியது நான்காவது திருமொழி; 'மீன் நோக்கு நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டு அம் மான்' மீது திருவாய் மலர்ந்தருளியது ஐந்தாவது திருமொழி.

மூன்றாவதாகக் குறிப்பிட்ட 'வித்துவக் கோடு' என்ற திவ்விய தேசம் மலை நாட்டிலுள் ளது. இதனை 'திருமிற்றக்காடு' என்று வழங்கு வர் அப்பகுதி மக்கள். தென்னிந்திய இருப்புப் பாதையில் சோரனூர் சந்திப்பிலிருந்து இவ் வூருக்கு எளிதாகப் போகலாம். சோரனூர் — குருவாயூர் நெடுஞ்சாலையில் சோரனூரிலிருந்து இவ்வூர் பத்துக் கல் தொலைவிலுள்ளது ; அடிக்கடி பேருந்து (பஸ்) வசதி உண்டு. ஐம்பது காசு தந்து இவ்வூரை அடையலாம், சாலையின் மேலேயே இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்தில்

செல்பவர்கள், திருமலைப் பேருந்துப் பயணிகள் கொண்டை ஊசி வளைவுப் பாதையில் செல்லும் போது, மலையின் இயற்கைக்காட்சிகளை நுகர்ந்த வண்ணம் செல்வதைப் போலவே, சோரனூருக்கும் வித்துவக் கோட்டிற்கும் இடையிலுள்ள ஒரு பெருங் குன்றினை இத்தகைய வளைவுப் பாதையில் கடந்து செல்லுங்கால், மலையின் இயற்கைக் காட்சியில் தோய்ந்த வண்ணம் செல்லலாம். எங்கோ பிறந்து வளர்ந்த பாரதப் புழா என்ற ஆறு வளைந்து வளைந்து சென்று, வித்துவக் கோட்டு அம்மானை நாடி, அவன் திருவடிகளை வருடிச் செல்லும் அற்புதக் காட்சியினைக் கண்டு களிக்கலாம் ; நாம் மலைப்பாதையில் வளைந்து வளைந்து செல்லும் போதெல்லாம் வளைந்து வளைந்து செல்லும் ஆற்றையும் பல முறை அனுபவிக்கலாம். இங்ஙனம் போய்க் கொண்டிருக்கும்போது,

''தெளிதுஆக உள்ளத்தைச்
செந்நிறீஇ ஞானத்து
எளிதுஆக நன்கு உணர்வார்
சிந்தை எளிதுஆகத்
தாய்நாடு கன்றேபோல்
தண்துழா யான்அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து''

(செந்நிறீஇ—செவ்வனே நிறுத்தி; ஞானம் — பகவத் விஷய பக்தி; சிந்தை—மனம்; புரிந்து — விரும்பி.)

என்ற பொய்கை யாழ்வாரின் வாக்கு, பண்பட்ட நம் உள்ளத்தில் குமிழியிட்டு எழலாம். பல்லாயிரம் பசுத் திரளினுள் ஒரு சிறிய கன்று தன் தாயைக் கண்டறிந்து ஆவலுடன் அதனை அடைவது போலவே, பரமான்மா—சீவான்மா உறவை நன்கறிந்த நம் மனம் பதறிக் கொண்டு அவ்வெம் பெருமானையே எண்ணிய வண்ணம் மிக்க ஆவலுடன் செல்லும் உணர்ச்சியைப் பெறுவதைக் காணலாம். அல்லது, இன்னொரு வழியாகவும் இவ்வூரை அடையலாம். சோரனூர்—கள்ளிக்கோட்டை இருப்புப் பாதையில் உள்ள பட்டாம்பி என்ற நிலையத்தில் (சோரனூரிலிருந்து மூன்றாவது நிலையம்) இறங்கி, ஆற்றில் வெள்ளம் இருப்பின், படகின் மூலம் அதனைக் கடந்து கோயிலின் அருகிலேயே இறங்கலாம்.

சோரனூரிலிருந்து பேருந்தில் நாம் வித்துவக்கோடு என்ற ஊரில் குறிப்பிட்ட இடத்தில் இறங்குகின்றோம். இடப்புறமாக நோக்கினால் (மேல் திசை), கம்பன் வருணிக்கும் தேரை தாலாட்டும் பண்ணைகளையும், தென்னை—கமுகந் தோப்புகளையும் கண்டு களிக்கலாம். வலப்புறத்திலும் தோப்புக்களே நிரம்பியுள்ளன. ஆனால் தோப்புக்களினூடே ஒரு சிறு சாலை வழியாக நான்கு ஃபர்லாங்கு தொலைவு நடந்து வித்துவக் கோட்டு அம்மான் எழுந்தருளியிருக்கும் திருக் கோயிலை அடைகின்றோம். கோயில் மிகப் பெரிய கோயில் அன்று; ஒரே ஒரு பிராகாரத்தைக் கொண்டது. பெரும்பாலும் மலைநாட்டுக் கோயில்களின் அர்த்த மண்டபத்தோடு கட்டியுள்ள கரு அறையின் அமைப்பு, வட்ட வடிவமாக இருப்பது போலவே, இக்கோயிலின் அமைப்பும் அவ்வடிவிலேயே இருப்பதைக் காண்கின்றோம்; கோயிலின் மேற்கூரை செப்புத் தகட்டினால் வேயப் பெற்றிருப்பதையும் பார்க்கின்றோம்.

தமிழகத்திலுள்ள திருமால் ஆலயங்களில் மேற்கொள்ளப்பெறும் வைணவ சம்பிரதாய முறையில் (பாஞ்சராத்திரம் அல்லது வைகானச முறையில்) வழிபாட்டு முறை அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் பக்தர்கட்குத் தீர்த்தம் சாதிப்பதில்லை; 'சடகோபன்' சாத்துவதில்லை. சந்தனம், துளபம் இவற்றையே இறைவனுடைய பிரசாதமாக வழங்குகின்றனர். இன்னொரு சிறப்பான கூறு என்னவெனில், கோயிலில் முக்கியமான அர்ச்சகர் போத்தி என வழங்கும் அந்தணர் ஆவர். தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கோயில்களில் அர்ச்சகர்கட்கு ஆழ்ந்த சாத்திர ஞானம், ஆகமங்களில் நல்ல பயிற்சி இவை இல்லாதிருப்பது போலவே, அங்குள்ள போத்திகளிடமும் இவை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் மிகத் தூய்மையாக நீராடி, தூய்மையான ஆடைகளை அணிந்து காணப்பெறுகின்றனர். ஆற்றில் நீராடிய பின்னர் இல்லத்திற்கு ஏகாது ஈர ஆடையுடன் கைங்கர்யத்திற்காக நேரே கோயிலுக்கு வருகின்றனர். திருக்கோயில்களில் கைங்கர்யம் செய்யும் எல்லா நிலையினரிடமும் தூய்மை சிறந்த கூறாகத் திகழ்கின்றது. எல்லோருமே வழிபாட்டுக்காகப் போகும் பக்தர்களிடம் மிக உயர்ந்த பண்பாட்டுடன் நடந்து கொள்கின்றனர். அருக்கன் உதயத்திலிருந்து பகல் பன்னிரண்டு மணி வரையிலும், மாலை ஐந்தரை மணி முதல் இரவு எட்டு மணி வரையிலும், எல்லாக் கோயில்களிலும் தரிசன காலமாக வழக்கத்திலிருந்து வருகின்றது. வேறு நேரங்களில் கோயில் திறக்கப் பெறுவதில்லை. காரணம், தலைமை அர்ச்சகராகவுள்ள போத்தி நீராடிய நிலையில் தூய்மையாக இருக்க வேண்டியமையே யாகும் எனக் கருத இடம் உண்டு. நாள் முழுவதும் ஒருவர் இங்ஙனம் இருக்க முடியாதல்லவா?

கோயிலைப் பற்றிப் பேசிக் கொண்டு எங்கேயோ போய் விட்டோம். திருக்கோயிலில் கிடந்த கோலத்தில் தெற்கு நோக்கிக் காட்சி அளிக்கும் உய்ய வந்த பெருமாளாகிய வித்துவக் கோட்டம்மானைச் சேவிக்கின்றோம். சயனக் கோலத்தில் திகழும் மூர்த்தியுடன் ஆழங்கால் பட்டு விடுகின்றோம். குலசேகரப் பெருமாள் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள், நம் நினைவிற்கு வருகின்றன. அருள்திரு நாராயணனைப்பற்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை ஆழ்வார் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்திக் கூறியுள்ளமையை நினைந்து போற்றுகின்றோம். நம்மையும் அறியாமல் பாசுரங்கள் நம்மிடற்று ஒலியாக வெளிவருகின்றன.

''தருதுயரம் தடாயேல்உன்
சரண்அல்லால் சரண்இல்லை;
விரைகமழும் மலர்ப்பொழில்சூழ்
வித்துவக்கோட்டு அம்மானே''

[தடாயேல்—களைந்திடாவிடில்; விரை—மணம்].

என்ற ஆழ்வாரின் வாக்காலேயே இறைவனை விளிக்கின்றோம். எம்பெருமானைத் தாயாகப் பாவித்து நாம் குழந்தை நிலைக்கு வந்து விடுகின்றோம்.

''அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி
அதுவேபோன்று இருந்தேனே''

[அரிசினம்—மிக்க சினம்; அகற்றிடினும்—வெறுத்துத் தள்ளினாலும்.]

என்று முறையிடுகின்றோம். கோபத்தினால் ஒரு தாய் தான் பெற்ற குழவியை ஒரு சமயம் வெறுத்துத் தள்ளினாலும், தாயின் கருணையையே கருதி குழந்தை அழுது அழுது அவள் கருணைக்குப் பாத்திரமாகின்றது. ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்றபடி அழுது அடி அடைந்த மணிவாசகரைப் போலவே, கண்களில் நீர் மல்க அழுகின்றோம். இந்நிலையில் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவுமுறை, தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்ற உணர்வில் ஆழ்ந்து நிற்கின்றோம்.

இந்நிலையில் நம் சிந்தையில் குறுந்தொகைப் பாடல் 'பளிச்' என்று ஒளிவிடுகின்றது. தோழியின் கூற்றாக வரும் அப்பாடலின் பகுதி வருமாறு :

.................................
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
தான்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்(டு)
'அன்னாய்!' என்னும் குழவிபோல
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே''

[ஊதை—குளிர்காற்று; உரவுநீர்—வன்மையுடைய கடல் நீர் ; உடன்று—மாறுபட்டு; அலைக்கும்காலையும்—வருத்தியபொழுதும்; தலை அளித்தல்—அன்பு செய்தல்; வரைப்பினள்—புரக்கப்படும் எல்லைக்கு உட்பட்டவள்; விழுமம்—துன்பம்; களைஞர்—நீக்குவார்; இலள்—பெற்றிலள்.]

'அன்னை அலைப்பினும், அணைப்பார் பிறரின்றி அவள் மாட்டே செல்லும் குழவிபோல, நீ அருளின்றிப் பிரியினும் நின்மாட்டே நின்று நின் தண்ணளியால் வாழும் நிலையினள்' என்று தோழி கூறும் கருத்தினையே, ஆழ்வார் தன்னைக் குழந்தை நிலையிலும் இறைவனைத் தாய் நிலையிலும் வைத்துப் பேசுகின்றார். குழந்தையைக் காட்டிய குறுந்தொகைப் பாடலைப் படித்து விட்டு, ஆழ்வார் பாசுரத்தைப் படித்தால் பொருள் மேலும் தெளிவுறுகின்றது. ''தாய் உடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு 'அன்னாய்!' என்று அழைக்கும் குழவி போல'' என்ற சங்கப் பாடலின் உவமை, ஆழ்வாரின் இறைமைப் பாடலில் புது முறையில் அமைந்து புத்தொளி வீசி நின்று நயமுறுகின்றது. பாட்டின்பம் பக்தி உணர்வாக மாறி நம்மை மேலும் நெகிழ்விக்கின்றது.

கணவன் ஒருவன், தான் தீ முன் வலம் வந்து கைபிடித்துத் துணைவியாகக் கொண்ட குலமகளைக் கண்டவர்கள் இகழும் வண்ணம் மிகக் கேவலமாக நடத்துகின்றான். எனினும், அக்குல மகள் கணவனையன்றி வேறு ஒருவரையும் புகலிடமாக நினைப்பதில்லை. இந்த உணர்ச்சியுடன்,

''கண்டார் இகழ்வனவே
காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால்
அறியாக் குலமகள்போல்
கொண்டுஆளாய் ஆகிலும்
உன்குரைகழலே கூறுவனே''

[காதலன்—கணவன்; குரைகழல்—ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய திருவடிகள்.]

என்று பாடுகின்றோம். ''உலகில் எத்தனையோ அல்லல்கள் பட்டாலும் அவற்றினைத் தீர்ப்பதற்கு உன்னையன்றி வேறு யாருளர்?'' என்று கூறி அவன் திருவடிகளையே சரணமாகக் கொள்ளுகின்றோம். கணவன் நிலையில் எம் பெருமானையும், மனைவி நிலையில் நம்மையும் வைத்துப் போற்றுகின்றோம். இங்குப் பரமான்மாவின் தலைமை, சீவான்மாவின் அடிமை, சீவான்மா பரமான்மாவுக்கு உரித்தாயிருக்கை, சீவான்மா பரமான்மாவின் கூட்டுறவால் இன்பத்தை அடைதல், பிரிவினால் துன்புறல், சீவான்மா பரமான்மாவைக் கரணங்கள் எல்லாவற்றாலும் அனுபவித்துக் களிப்புறுதல்—போன்ற எண்ண அலைகள் விரைவாக நம் உள்ளத்தில் குமிழியிட்ட வண்ணம் உள்ளதை உணர்கின்றோம்.

நம்மிடையே அடுத்த உணர்ச்சி தலைக் காட்டத் தொடங்குகின்றது. குடிகளைக் காப்பதென்று மாலையணிந்துள்ள மன்னன் ஒருவன் குடிமக்களிடம் அருள் நோக்கம் செய்யாது, அவர்கட்கு எப்படிப்பட்ட துன்பங்களை விளைவித்தாலும், குடிமக்கள் அவனுடைய செங்கோலையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இந்தக் குடிகளின் நிலையில் நாம் நிற்கின்றோம்.

''தான் நோக்காது எத்துயரம்
செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும்
குடிபோன்று இருந்தேனே''

[தார்—மாலை; கோல்—செங்கோல்.]

என்ற பாசுரத்தின் மூலம் ''நீ அருள் நோக்கம் செய்யாவிடினும் உன்னையன்றி வேறொருவரைச் சரண் அடையேன்'' என்று மனங் கரைகின்றோம். எம்பெருமானை அரசன் நிலையிலும், நம்மைக் குடிகள் நிலையிலும் வைத்து எண்ணிக் 'காப்பவன் காக்கப்படுபவன்' என்னும் உணர்வில் திளைக்கின்றோம், இதில்.

—தொடரும்

# பஞ்சாமிர்தம்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

### உலக இயல்

உலக இயல்புகள் பல.

கலங்குவது வேறு.

கலக்குவது வேறு.

கலங்கிக் கிடக்கும் பொருள் தெளிவடைவது உண்டு.

தாஞகத் தெளிவடைகிறவனும், பிறரால் தெளிவுண்டாக்கப்படுபவனும் வேறு.

அறிவில்லாதவன் கலக்கத்திலேயே ஆழ்ந்து கிடக்கிருன்.

அவனது அறியாமை மேலும் மேலும் கலங்கிக் கிடக்கிறது.

குடும்பத்தில் இருப்பவர்களுக்கு அடிக்கடி கலக்கம் ஏற்படும்.

அவன் தெளிவடைய முடியும்.

அவனுக்குத் தெளிவு உண்டாக்குபவன் ஆச்சாரியன்.

எப்போதும் தெளிவுள்ள ஒன்று ஈசுவரன்.

இதனுல் கலங்குகிற தன்னை அறிவது முதற்படி.

கலக்குகிற பொருள் எது என்னவென்று அறிவது இரண்டாவது படி.

யார் நம்மைத் தெளிவிக்கும் ஆசான் என்று தேடுவது மூன்ரும் படி.

தெளிந்த கடவுளை அறிவது நான்காவது நிலை.

இதுதான் மத நம்பிக்கையின் அடிப்படைத் தத்துவம்.

### சான்ருேன்

பந்தியிலே அதிகமாக நாக்கை நீட்டாதவன் உயர்ந்தவன். லஞ்சம் வரும்போது கையை நீட்டாதவன் நீதிமான்; வம்பு வரும்போது காதைத் தீட்டாதவன் உத்தமன்; ரூபங்கள் வரும் போது கண்ணை மூடுபவன் சிறந்தோன்; உண்மைக்காக வாய் திறப்போன் சான்ருேன்.

### கடற்கரை லிங்கம்

கிராமத்திலிருந்து கடலாட வந்தவன் ஒரு கிராமத்தான். அவன் கையில் மோதிரம் கிடந்தது. அது இரவல் மோதிரம். கடலில் குளிக்கும் போது அலையடித்துக் கொண்டு போய் விடுமோ என்ற பயம் பிறந்தது.

எனவே,

அவன் தன் மோதிரத்தை மணலில் ஒளித்து வைக்க வேண்டும். வைத்த இடமும் தெரிய வேண்டும். கொஞ்சம் தண்ணீர் எடுத்து மணலைப் பிசைந்து அதனை ஒரு லிங்கம் போல் உருட்டிக் கரையில் வைத்து, அதற்குள் மோதிரத்தை ஒளித்து வைத்தான்.

ஆசைதீரக் கடலில் இறங்கி அலையுடன் விளையாடினுன்.

அந்த வேளையில் கடற்கரைக்குக் குளிக்கப் பலர் வந்தார்கள். கடற்கரையில் லிங்கம் இருப்பதைப் பார்த்ததும் ''இது இந்த ஊர் வளமை'' என்று எண்ணினுர்கள். ஒவ்வொருவரும் ஒரு லிங்கத்தைப் பிடித்து விட்டுக் கடலுக்குக் குளிக்கப் போனுர்கள். அரை மணி நேரம் சென்ற பிறகு கிராமத்தான் வந்து பார்த்தான். நூற்றுக்கணக்கான லிங்கங்கள் இருந்தன.

எந்த லிங்கத்தைப் போய்த் தொடுவது?

தொடப் போனுல் ''நான் பிடித்த லிங்கத்தை யார் கலைப்பது?'' என்று சண்டை வந்தது.

மோதிரம் போனுல் போகட்டும். சண்டை வேண்டாமென்று வீடு திரும்பினுன்.

லிங்கம் பிடிக்கப் போய் மோதிரம் தொலைந்த கதையாயிற்று.

அகங்காரமாகிறது ஒரு சர்ப்பம் ; மமதை என்பது சர்ப்பத்தினுடைய உடல்; துவேஷங்கள் என்பன சர்ப்பத்தினுடைய பற்கள். நம்மை விட்டு மமதையும் அகங்காரமும் ஒழிய வேண்டுமானல், சர்ப்பத்திற்குப் பற்களைப் பிடுங்குமாப் போல, துவேஷம் என்னும் பற்களை முறித்து விட்டால் போதும். மமதைக்கும் இடமில்லை. அகங்காரத்திற்கும் உருவம் இல்லை.

—ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்த வார்த்தா மாலை.

**நட்பு**

சேரமான் பெருமாள்நாயனுர் பரமபக்தர். தமது இல்லத்திலிருந்து பூசை செய்வார். இவர் செய்த பூசையை ஏற்றுக்கொண்டதாகத் தில்லை நடராசர் கோயில் மணி ஒன்று ஒலிக்கும்.

அந்த மணி ஒலித்தால்தான் பூசை முற்றுப் பெற்றது. ஆண்டவன் தமது பூசையை ஏற்றுக் கொண்டார் என்று சேரமான் பெருமாள் எண்ணி வந்தார்.

ஒரு நாள், சேரமான் பெருமாள் நாயனுர் பூசை செய்து முடித்தார். மணியோசையை எதிர் பார்த்தார். மணியோசை வரவில்லை!

தாம் ஏதோ தவறு செய்து விட்டதாக எண்ணி உயிரை மாய்க்கத் துணிந்தார். உடனே மணியோசை கேட்டது.

''இறைவா! இன்று ஏன் தாமதம்?''

''பக்தனே! என்னை இன்று சுந்தரன் என்ருெரு பக்தன் வந்து தொழுதான். பாடினுன். அவன் என்னை நினைத்தான். நான் அவனையே நினைத்தேன். உன்னைச் சற்றே மறந்தேன்'' என்ருர் தில்லை நடராசர்.

''அப்படியானல் அச்சிறந்த பக்தரை நானும் காண்டல் வேண்டும்'' என்று சேரமான் பெருமாள் எண்ணத் தொடங்கினுர்.

அன்று முதல் ''என்று காண்போம் சுந்தர மூர்த்தி சுவாமிகளை, என்று காண்போம் சுந்தரரை'' என்று எண்ணி ஏங்கத் தொடங்கினுர். கண்டிராத நண்பன் மீது காதல் பிறந்தது.

பிறகு,

என்ருே இருவரும் சந்தித்தார்கள்.

சத் விஷயங்களில் ஈடுபடுகிறவர்கள் ஒருவரை அறியாது மற்றவர்களைக் காணத் துடிப்பார்கள்.

**இந்திர லோகத்தில்**

அன்னப்பறவை யொன்று நீண்ட காலமாகத் தவம் செய்தது. தாமரை மலர் மீது ஒற்றைக் காலை ஊன்றித் தவம் செய்தது.

இந்திரன் இதன் தவ வலிமையை உணர்ந்தான்.

''அன்னமே! உன் தவத்தைப் பார்த்தேன். உன் விருப்பம் எதுவோ அதனைக் கேள்.''

''ஆண்டவனே! நீ யார்?''

''நான் இந்திரன்''.

''உன்னுடைய இந்திர லோகத்தைப் பார்க்க வேண்டும். அதற்கு அனுமதி தருக.''

''தந்தோம்''.

மறுகணம் பூலோகத்து அன்னப் பறவை இந்திர உலகம் புகுந்தது. சில காலம் வாழ்ந்தது.

மீண்டும் பூலோக ஆசை ஏற்பட்டு அதே தாமரைத் தடாகத்தினை அடைந்தது. இந்திர லோகம் போய் வந்த செய்தி காட்டுக்குள் பரவியது. பல பறவைகளும் பட்சி வகைகளும் இந்திர லோகத்தின் இன்பம் தெரிய வேண்டி அன்னத்தை நாடி வந்தன.

பறவைகள் கூட்டத்தில் அன்னம் பேசிற்று:

நான் இந்திரனுடைய கிருபையால் இந்திர லோகம் பார்த்தேன்.

அந்த உலகத்தில் பாலும் தேனும் கலந்து ஓடுகிறது. மழை பெய்கிறது. உடல் நனைய வில்லை. வெய்யில் அடிக்கிறது, வெப்பமில்லை.

எங்கும் பூந்தோட்டங்கள். வண்ண வண்ண மலர்கள். மலர் நிறமென மணமென மங்கை மார்கள். அழகு மயமாக ஆண்கள்.

வண்ண வண்ணப் பறவைகள்!

இந்திர லோகத்தில் நறுமணம். எங்கும் எதிலும் நறுமணம். நாற்றம் என்ற பேச்சும் வீச்சும் காணுேம்.

எங்கே பார்த்தாலும் சொப்பன சுந்தரிகள் நடனமாடுகிருர்கள்.

அவர்கள்தம் குரல் புல்லாங்குழல் போல் இனிமையாக, ஒலிக்கிறது.

அவர்கள் நடை ஜலதரங்கம் போல் சுவரத்துடன் இசைகிறது.

அவர்கள் அழகு, கண்ணுடி போல அத்தனை தெளிவு.

எங்கும் ஆடல் பாடல். பாலும் தேனும். பழமும் உணவும். குடிநீர் யாவும் பன்னீர் ஊற்றுக்கள்.

இந்திர லோகத்தில் உணவு உடை யாவும் பஞ்சுபோல மென்மை. கருப்பஞ்சாறு போல ருசி.

அங்கு இல்லாத பொருள் எதுவும் இல்லை. அங்கு இல்லாதன இல்லை. இந்திர லோகம் என்றால் பூமியைவிட ஆயிரம் கோடி, பதினாயிரம் கோடி இனிமை வாய்ந்த சொர்க்கம். எனக்குச் சொல்லும் ஆற்றல் இல்லை. நீங்களே போய்க் காண வேண்டும். இவ்வாறு சொல்லிற்று அன்னம்.

மறுவிநாடி பறவைக் கூட்டத்தில் ஒரு குரல் எழுந்தது. அன்னம் பார்த்தது. குரலை எழுப்பியவர் கொக்கு!

''அன்னமே! இந்திர லோகம் போய்வந்த அன்னமே! அங்கே நண்டு, நத்தை, மீன் உண்டா? இதைச் சொல்.''

கொக்கு கேட்ட கேள்வியை அன்னம் யோசித்தது.

இது போன்ற கொக்கு மதியுடையவர்கள் சமய உலகில் இருக்கிறார்கள். சகல சௌபாக்கியங்களையும், நற்போதனைகளையும் செவி மடுத்தாலும் கொக்குப் போன்ற மதியுடையவர்கள் தங்கள் வயிற்றுக்குத் தேவையான பழக்கவாசமுடைய நாற்றப் பொருளை மறக்க இயலாதவர்கள்.

நாற்ற உணவைத்தான் அவர்களது பழகிய நாக்கும் பண்பும் நினைத்துக் கொண்டிருக்கும்.

இறைவனைப் பற்றிப் பிறர் பேசும்போது இரைப் பொருளைப் பற்றியே சிந்திப்பார்கள்.

இறைவழிபாடு செய்யும்போது இரையையே நினைத்துக் கிடப்பார்கள்.

இறைவன் திருக்கோயிலில் வலம் வரும் போதும் ஐம்புலன்களுக்குத் தீனி தருவார்கள்.

வேஷம் கட்டியவனுக்கு பகவத் விஷயத்தில் நாட்டமில்லை. பகவத் விஷயத்தில் நாட்டமுள்ளவனுக்கு வேஷம் கட்டியவன் மீது நாட்டமில்லை. *



தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள், சீரணித் தலைவர் திரு. முத்துராமலிங்கம் ஆகியோர் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தில் தூர்வாரும் திருப்பணியைத் தொடங்கி வைத்தல்.

# மழை வேண்டும்

## கவிஞர் திரு கு. மா. பாலசுப்பிரமணியம்

*(14—3—75 மாலை, மயிலைக் கபாலி கோவிலில் நிகழ்ந்த மழை வேண்டல் கவியரங்கில் பாடியது)*

விழிமூன்று கொண்டிங்கு வீற்றுள கபாலியெனும்
வேதாந்த வித்து மணியே!
அழியாத தமிழ் எங்கள் மொழியாகத் தந்தவன்
ஆதியில் நீயல்லவோ?
மழை வேண்டித் தமிழ்பாடி மயிலைநகர் மாளிகை
வாசலில் கைஏந்தினேம்.
தழைகாயும் நிலைமாறித் தளிர்தோன்றத் தமிழ் மண்ணில்
மழை வேண்டும் மாதேவனே! (1)

கற்பகம் வளர்கின்ற அற்புதக் குளிர்சோலை
காயவும் ஞாயமுண்டோ?
நெற்பயிர் கருகவும் பற்பலர் மடியவும்
நிகழ்விக்க நீதியுண்டோ?
பொற்பதம் கதியென்று புகல்பெறும் நம்பிக்கை
பொய்யாகிப் போவதுண்டோ?
வற்கடம் மறையவும் வாரிகள் நிறையவும்
மழைவேண்டும் மாதேவனே! (2)

கவிபாடித் தமிழ் மண்ணில் கார்மேகம் பொழிவிக்கக்
காளமேகங்கள் இல்லை
சுவையான தமிழ்பாடிச் சோலைகள் வளமாக்கச்
சொல்வேந்தன் கம்பன் இல்லை
தவியாகத் தவிக்கின்ற எளியோரின் நிலைகண்டு
தாங்கவும் இயலவில்லை
நவையேனும் எம் கவிதை செவியேற்கும் கருணையால்
மழைவேண்டும் மாதேவனே! (3)

பஞ்சம் இருப்பினும் பணமுள்ள சிலருக்குப்
பசுமையே குறையவில்லை
நெஞ்சம் இருப்பினும் எளியவர்க் குதவ என்
நிலையிலே வசதியில்லை.
கொஞ்சம் தயங்கினும் குற்றுயிர்ப் பஞ்சையர்கள்
கூண்டோடு மாண்டு விடுவார்.
வஞ்சம் மறக்க நீ மனம் வைக்கவேண்டும்; இனி
மழைவேண்டும் மாதேவனே! (4)

தமிழரின் உரிமையை வடவர்கள் மறுப்பதைத்
தாங்காமலோ கொதித்தாய்?
சமயமே தெரியாமல் தலைமீது வரி ஏற்றும்
தன்மையோ மனம் வெறுத்தாய்?
அமைதியைத் தமிழ் நாட்டில் அழிக்கவே சதிசெய்யும்
அன்னியரையோ பகைத்தாய்?
மமதையோர் வீழவும் மற்றவர்கள் வாழவும்
மழைவேண்டும் மாதேவனே! (5)


கருப்பிலே நிதி சேர்க்கும் கயவரை எண்ணியோ
காய்ந்தனை தமிழகத்தை?
இருப்பிலே வரிஏய்க்கும் எத்தர்கள் சிலபேரை
எண்ணியோ சினமடைந்தாய்?
தரப்பிலே பலகட்சி தாவிடும் கொடியோரைத்
தண்டிக்கும் எண்ணமிதுவோ?
மறுப்பிலேன்; ஆயினும் மனித குலம்வாழவே
மழைவேண்டும் மாதேவனே! (6)


ஒரு மூட்டைப் பண்டத்தில் உறுதியுள்ள நடுவரசு
ஒருகாசு வரி ஏற்றினல்,
உரிமையுடன் வணிகரோ ஒரு சிறிய படியிலும்
ஒருகாசு விலை ஏற்றுவார்!
ஒரு படியில் செய்கின்ற பலநூறு பண்டத்தும்
ஒருகாசு விலை ஏறும்!
வறுமை இப்படியாய் வளர்ப்பவர்கள் அழியப் பெரு
மழைவேண்டும் மாதேவனே! (7)



மிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், சிரணித் தலைவர் திரு. முத்துராமலிங்கம் ஆகியோர் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தில் தூர்வாரும் திருப்பணியைத் தொடங்கி வைத்தல்.

# சுவாமி இராமதீர்த்தர்





கவியோகி சுத்தானந்த பாரதியார்

**இந்திய நாடே என் உடல்**

இந்திய நாடெங்கள் உடலே—வெள்ளி
இமயமலை எங்கள் முடியே
விந்திய மலை எங்கள் இடையே—மேல்
கீழ்த்தொடர் எம் திருக்கைகள்

கங்கையும் சிந்துவும் சபைகள்
கன்னிமுனை எங்கள் அடிகள்
பொங்கிடும் காவிரி விமலை—எங்கள்
பொன்னொளிர் பூமணியாரம்.

ஒவ்வொரு மனிதனும் நாமே—நாம்
ஒவ்வொரு மனிதனும் ஆவோம்
இவ்வுரு ஆலயமாமே—அதில்
இன்னுயிர்ப் பணி வழிபாடே.

இவ்வாறு நாமும் உலகும் நாமே என்று ஒருமை முழக்கம் செய்தவர் இராமதீர்த்தர்.

**கல்விப் பயிற்சி**

அவர் குஜரன் வாலா அருகே முரணி வாலா என்ற சிற்றூரில் ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தார் (1873). கைக் குழந்தையாயிருந்தபோதே தாயை யிழந்தார். தகப்பன் இராமானந்தர் பிள்ளையைக் கவனிக்கவில்லை. அண்ணன் ரூதாஸே இராம தீர்த்தரை வளர்த்தார். இராமர் தமது அன்பை யெல்லாம் இறைவனிடமே உய்த்தார். முரணிவாலாவில் தொடக்கக் கல்வி கற்று, குஜரன் வாலாவில் உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்று, லூதர் ஃபோர்மான் கல்லூரியில் பயின்று எம். ஏ. பட்டம்பெற்றார் இராமர். கணக்கில் முதன்மை பெற்ற அவருக்கு லண்டன் சென்று பெரும் புலமைச் சிறப்புப் பட்டம் பெறவும் அழைப்பு வந்தது. ஆனால் இராமர் உள்ளம் வேதாந்தத்தில் ஈடுபட்டது.

இளமையில் வறுமை அவரைப் பற்றிக் கொண்டது. பத்து வயதில் திருமணமும் நடந்தது. இளம் மனைவியை அவரே காப்பாற்ற வேண்டியிருந்தது. மனைவி சிவாம்பிகை தூய நல்லாள். வள்ளுவருக்கு அமைந்த வாசுகி போன்றவள். கல்லூரித் தலைவர் மிஸ்டர் பெல், கணக்காயர் மிஸ்டர் கில்பர்ட்டன் ஆகிய இருவரும் இராமதீர்த்தரிடம் பேரன்பு கொண்டுதவினர். ஐந்துமால் என்பவர் உணவு தந்தார். இராமருக்கு மாதம் அறுபது ரூபாய் சிறப்புப் பரிசு கிடைத்தது. அதில் ஒரு பங்கு மனைவிக்கும், ஒரு பங்கு தனது அறிவாசான் பக்த தன்யராம் அவர்களுக்கும் அனுப்பி, மீதியில் சிக்கனமாக வாழ்ந்தார் இராமர்.

**நூல்களைக் காத்தாயே**

அவர் ஊருக்கு வெளியே ஏழைக் குப்பத்தில் ஒரு சிறு இடத்தில் வசித்தார். வயிற்றுக்கு ரொட்டியை விட வாழ்வுக்கு நன்னூல்களை வாங்கிப் படிப்பதும், இரவில் படி விளக்கிற்கு எண்ணெய் வாங்குவதும், படிப்பதைச் சிந்திப்பதுமானார் இராமர். ஒரு நாள் இருட்டில் கரு நாகம் படமெடுத்து வந்தது. இன்னொரு நாள் அவரது துணிமணிகள் களவு போயின. "கடவுளே எனது நூல்கள் களவு போகாமல் காத்தாயே; நன்றி" என்று வேண்டினார்.

**தன்ய ராம்**

பக்த தன்யராமர் பொற்கொல்லர்; யோகி, ஞானவாசிட்டம், பாகவதம், பகவத் கீதை ஆகிய மதிநூற் புலவர். அவரே இளம் இராமனுக்கு யோக வேதாந்த பக்திஞானமார்க்கங்களைப் பயிற்றியவர். இராமர் அவருக்கு எழுதிய ஆயிரம் கடிதங்கள் படிக்கப் படிக்க இனிப்பனவாம். தன்ய ராமே இராமரின் அறிவாசிரியரானார்.

**பேராசிரியர்**

இராமர் கணக்கில் முதன்மையாகி, எம்.ஏ பட்டமும் பெற்றார். மிஸ்டர் பெல் தமது கல்லூரியிலேயே அவரைக் கணக்குப் புலவராக்கிப் போற்றினார். மிஸ்டர் கில்பர்ட்டன் அவருக்கொரு போது காட்டியை (Watch) அன்பளித்தார். மாதச் சம்பளம் நூறு ரூபாய். இப்போது அவரை அருளறிவு பற்றிக் கொண்டது. கிறித்துவக் கல்லூரியிலிருந்து இந்து மதத் தொண்டு செய்ய இயலாது. ஆதலால் ஓர் இந்துக் கல்லூரியில் எண்பதே ரூபாய்ச் சம்பளத்தில் அமர்ந்தார். வேத வேதாந்த ஆராய்ச்சியும் விளக்கமுமாயிருந்தார்.

## விவேகானந்தர் ஆசி

1897-ஆம் ஆண்டு விவேகானந்தர் லக்னோவுக்கு எழுந்தருளி இராமரின் விருந்தாளியானார். ஓர் சர்க்கஸ் கொட்டகையில் அவரது வேதாந்தச் சொற்பொழிவு நடந்தது. ''தாமும் காவியணிந்து உலகமெல்லாம் வேதாந்த முழக்கம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. இராமர் தனது போதுகாட்டியை விவேகானந்தருக்குப் பரிசளித்தார். அதை விவேகானந்தர் மீண்டும் இராமர் சட்டைப் பையிலேயே போட்டு, ''இது இந்த என்பையிலே துடிக்கட்டும்'' என்று ஆசி கூறினார். விவேகர் இராமர் உள்ளத்தைத் தொட்டார். வேதாந்த வெறி பற்றிக் கொண்டது. அதுகாறும் பாகவதம் படித்துக் கண்ணனை அன்பு செய்தார். துவாரக சங்கராச்சாரியரிடம் உபநிடதம் கற்றுத் தத்துவமணி உபதேசம் பெற்றதும் இராமர் வேதாந்த சிங்கமானார். இமாலயம் சென்று தவம் புரியத் துடித்தார். அவருக்கு நாராயண சாமி மாணவராகி அரிய பெரிய அருட்பணி புரிந்தார்.

## முழுத் துறவு

இப்போது அவருக்கு இரண்டு புதல்வர். மோகனம், பிரம்மானந்தம் சிறு குழந்தைகள். இளம் மனைவிக்கு மனவுறுதி வர, மானிட வாழ்வின் பயன் ஆன்ம நல்லறிவே என்று உணர்த்தினார். வீடு, வேலை, ஆடை, அணி அனைத்தையும் துவரத் துறந்தார். இமாலயத்தை நோக்கினார். மனைவி இரண்டு குழந்தைகளுடன் தொடர்ந்தார்.

''நில் அங்கே.''

''தங்களைப் பிரியேன். நானும் வருவேன்''

''நான் உன் கணவன் அல்ல என்றுசொல்''

''இரண்டு குழந்தைகளையும் கடைத் தெருவில் விட்டுவிடு.''

''அப்படியே.''

''வீட்டுச் சாமான், துணி மணி எல்லாம் ஊருக்கு வாரி வழங்கு. எல்லாம்ஏழைகளுக்குத் தா.''

''உத்தரவு''.

## குழந்தையைக் கங்கையில்

இவ்வாறு துறவறம் பூண்டு வண்டியேறினார் இராமர். மோகன் மெல்ல அதே வண்டியில் தம்பியுடனே ஏறிக் குளிப்பறையில் ஒளிந்தான். குப் குப் என்று வண்டி புறப்பட்டது. ஒளிந்த குழந்தை வெளி வந்தான். அவன் தம்பிக்குக் கடுமையான காய்ச்சலடித்தது. அரித்துவாரத்தில் இராமர் குடும்பத்துடன் படகிற் செல்லும்போது ''பிரம்மானந்தக் குழந்தையைக் கங்கைக்கு அளிப்பேன்'' என்று தூக்கி அலை வீசும் கங்கையில் அமுக்கி எடுத்தார். சிவாம்பிகை குழந்தையைத் துடைத்துக் ''காய்ச்சல் ஓடிப் போனதே'' என்றாள். ''ஞான கங்கையாடினால் நான் என்ற ஆணவக் காய்ச்சல் அற்றுப் போகும்'' என்றார் இராமர். இரண்டொரு மாதம் இருந்து சிவாம்பாளும் இரண்டு குழந்தைகளும் லக்னோவுக்கே சென்றனர். ஆண்டவனே அவர்களைக் காத்தான். தேரி மன்னர் குழந்தைகளைப் படிக்க வைத்து ஆளாக்கினார். அவர்கள் மரபு இப்போது வளர்ந்து நல்ல நிலைமையில் உள்ளது. ''கடவுள் துணையென்று கைவிட்ட மக்களைக் கடவுளே காத்தான்.''

## வேதாந்த வெறி

1900-ஆம் ஆண்டு தாமே காவியுடுத்துத் தீர்த்த இராமர் இராம தீர்த்தரானார். யோக இருக்கைகளுடன், உயிர்ப்படக்கமும் (பிராணயாமம்) பயின்று தியானத்தில் ஊன்றினார். கங்கை பொழியும் இமயத்தில் இராமதீர்த்தர் சிவபக்தி செய்தார். கவி மழை பொழிந்தார்.

சிவசிவஓம் ஹர பம்பம்பம்பம்
அமுத கங்கை அவிழும் சடையில் ஜம்ஜம்
ஓசை பொங்கும் தூமணியாறே—சலசலசலசல
இன்பச் சிவமே ஜயஜயஜயஜய
தடதடத்தோடும் ஜானவி ஜயஜய

சிவசிவ அரகர தடதட ஜம்ரம்ஜம் என்று கங்கை பொழிவதைப் பாடி இன்பத்திருக் கூத்து ஆடினார் வேதாந்த வெறி பிடித்த ராமர். கபீர்தாஸ் சொல்லுகிறார் :

மனஏ ஸி நிர்மல பாயோ
ஜைஸே கங்காரநீர
பீசே பீசே ஹரம்பிரை
கஹத கபீர கபீர.

மனம் கங்கை போலத் தெளிந்தது. என்பின்னே ''கபீர் கபீர்'' என்று அன்பு கூறி அரனே வந்து வழி நடத்தி வருகிறார்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்'' என்ற வள்ளுவர் மொழி தெள்ளறிஞர் வாழ்வில் திகழ்ந்தது.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

என்பதே யோகத் தெளிவாகும். ''உள்ளம் பெருங் கோயில்''. அதன் கருவறையில் உறைவதே கடவுளாம்.

## எல்லாம் துன்பம்

இராமதீர்த்தர் பிராணயாமத்தால் மனத்தை அடக்கித் தியானத்தால் உள்ளம் மலர்ந்து, உள்ளத்தான் ஆகிய ஜீவாசிவனை உணர்ந்தார். பேரின்பச் சிலிர்ப்பெடுத்தது. பேரின்ப வெறியில் பாடினார் ஆடினார்.

உடலும் இல்லை மனமும் இல்லை
உள்ளான்மாவே நான்
கடலும் நானே காற்றும் நானே
கதிரவனும் நானே
நானே யாரோ அவனே நீயும்
அவளும் அவனும் ஆன்மா!
தேனுக்குள்ளே தித்திப்பதுவே
தெய்வத்திருவருளான்மா
இன்பம் இன்பம் உள்ளும் புறமும்
இன்பம்—இல்லை—துன்பம்

அன்பும் அருளும் அழகும் பழகும்
அமைதி அமைதி அமைதி!
சிவசிவசிவவும் ஹரஹரஹரவும்
சிவசிவஹரஹரவும்

சர்க்கரை இனிப்பது போலக் கடவுளுணர்வு உள்ளந்தோறும் இனிக்கிறது. அந்த இனிப்பை உணர்ந்த வாழ்வே இன்பம். மற்றது கசப்புத் தான். ஆன்ம நிறைவு பெறுக! இவ்வாறு ஆன்ம சித்தி பெற்ற மகானைத் தேரி மன்னர் மிக்க மகிழ்ச்சியுடன் ஜப்பானுக்கு அனுப்பினர். நாராயண சாமியும் உடன் சென்றார்.

**ஜப்பானிய இராமர்**

ஜப்பானில் அனைத்துச் சமய மாநாடு நடப்பதாக நினைத்தே தேரி மன்னர் அனுப்பினர். தோகியோ சென்றதும் மாநாடு இல்லை. ''நானே மாநாடு நடத்துவேன்'' என முனைந்தார் ராமதீர்த்தர். அவருக்குப் பூரண சிங் என்பவர் துணை செய்தார். ''வெற்றி வழி'' என்ற பொருள் பற்றி இராமர் அழகாகப் பேசினர். ஜப்பானியர் அவரை வியந்து போற்றினர். ''நீர் ஏன் மனை வாழ்வை நீத்தீர்'' என்று கேட்டனர். ''உலகிற்குஉதவவே'' என்றார் இராமர். சத்ரே சர்க்கஸ்காரர் கப்பலில் அமெரிக்கா சென்றனர். அதே கப்பலில் இராமரும் ஏறி அமெரிக்கா சென்றார்.

**அமெரிக்காவில் இராமர்**

''உமது மூட்டை எங்கே! எத்தனை பவுண்டு நிறை?''

''உடலே மூட்டை. 99 பவுண்டு!''

''அமெரிக்காவில் உமது நண்பர் யார்?''

''ஒருவர் உண்டு. நீரே!''

இராமரின் துறவும் துணிவும், அறிவும் ஒளியும் டாக்டர் ஹில்லரைக் கவர்ந்தன. இராமரை அவரே தமது விருந்தினராக ஏற்று, எல்லா வசதியும் கொடுத்து ஆதரித்தார்.

கலிஃபோர்னியா அருகே சாஸ்தா மலை உள்ளது; 14,444 அடி உயரம். அதிலிருந்து சாக்ரமெண்டோ (Sacramento) ஆறு சல சலத்துப் பொங்கி ஒலமிட்டுப் பொழிகிறது. இயற்கையழகும், பொலிவான சூழலும் இராமர் உள்ளத்தை அள்ளின. அங்கே ஒரு கூடாரத்தில் இராமர் இனிதிருந்தார். ஹில்லர் இல்லத்தில் உண்டார். அவர் ஒரு தூளி கட்டினர். அதில் இராமர் ஆடியசைந்து பாடி மகிழ்ந்தார். நாளெல்லாம் நல்ல நூல்களைப் படிப்பது. கவி எழுதுவது. அன்பருடன் பேசுவது. மாலையில் பல சங்கங்களில் சொற்பொழிவது. இவை இராமர் வழக்கமானது. எமர்சன், விட்மான், தோரோ, வில்லியம் ஜேம்ஸ் ஆகிய அறிஞர் நூல்களை அவர் அள்ளிப் பருகினர். எங்கும் இறையருள் கண்டார். அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் அவரைப் பார்த்துப் பேசி மகிழ்ந்தார். இராமர் அவரிடம் ஒரு நீண்ட விண்ணப்பம் அளித்தார். ''அமெரிக்காவில் தொழிற் செல்வம் பொலிகிறது. இந்தியா வறுமையில் வாடுகிறது. இந்திய ஞானமும் அமெரிக்க விஞ்ஞானமும் இணைந்து புது வாழ்வு மலர வேண்டும்'' என்றார். தோரோவின் வால்டன், துசுக்கியில் புக்கர் வாஷிங்டனின் பல்கலைக் கழகம், நியூயார்க் சிகாகோ முதலிய மாபெரும் நகரங்களைக் கண்டு பல சங்கங்களில் சொற்பொழிந்தார் இராமர். அவரை வியக்காதவரில்லை. சில மாதர் அவருக்கு அடியாரானர். விட்மன் என்ற மாதரசி கமலானந்தா என்ற பெயர் பெற்றுச் சுவாமி இராம தீர்த்தரின் சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில் எழுதித் தந்தார். சூரியானந்தா என்ற மாது இந்தியாவுக்கு வந்து இராம தரிசனம் செய்தாள். ஆன்ம ஒருமை, உலக ஒருமை, வாழும் வேதாந்தம், வாழ்க்கை நிலையம் முதலிய சொற்பொழிவு செய்து ஏழை யெளியாருக்கு உதவி செய்யப் பல செல்வரைத் துணைக் கொண்டு அரிய பணிகளைச் செய்தார் இராமர். இந்திய வாலிபர் அமெரிக்க உதவியுடன் தொழில்—விஞ்ஞானத்துறையில் மேல் ஓங்கச் செய்தார். இராமர் அமெரிக்கரின் அருஞ் செல்வப் பிள்ளையாகி இரண்டாண்டுகள் பணி நலம் புரிந்து, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, எகிப்து நாடுகளிற் சொற்பொழிவாற்றினர். சுவாமி இராமதீர்த்தர் இந்தியா வந்து நாட்டு விடுதலைக்கும், வளமைக்கும் அரிய பணி செய்தார். நாடெங்கும் அவர் ஒலி பரவியது. சுவாமி நாராயணர் அவரது எழுத்தோவியங்களைச் சேர்த்து வெளியிட்டார்.

**கங்கையில் மூழ்கினர்**

பேரின்ப எக்களிப்பில் வாழ்ந்த இராம தீர்த்தர், தீபாவளிக்கு மறுநாள், 1906-ஆம் ஆண்டு கங்கையின் சண்டவேகச் சுழியில் லும் என்று பாய்ந்து தோய்ந்து மாய்ந்தார். உடல் பதுமாசனத்தில் இருந்தது. வாய் லும் என்று திறந்தது. ஏழு நாளைக்குப் பிறகு அவர் உடல் கிடைத்தது. அவரது சமாதியில் இப்போது பெரிய கட்டிடம் எழுப்பியுள்ளனர்.

என் இறுதி நாட்களை அங்கேயே கழிக்க உறுதி பூண்டுள்ளேன். ஆதி சங்கரர் போல இராமதீர்த்தரும் முப்பத்து மூன்றாண்டுகள் வாழ்ந்தார். ஆராய வேண்டிய நல்லறிவுச் செல்வத்தை நமக்கு அளித்தார்.

**உலகத் தாயே**

''உலகத் தாயே, வானத் தந்தையே, தண்ணீர் அண்ணலே, காற்றக்கா, ஒளிக் காதலியே—இதோ என் உடல்—எடுத்துக் கொள்வீர். எத்தனையோ உடல்களில் நான் வாழ்வேன். ஆத்மா—நான் சாவதில்லை.

இந்தியர்களே, சாதி சமய வேறுபாடுகளை ஒதுக்கி ஒன்றுபட்டு முன்னேறுங்கள்.

மனித சமுதாயம் ஒன்றே—அதனில்
மன்னவனும் மனச்சாட்சி ஒன்றே
இனிய உலகமும் ஒன்றே—உல
கெங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே.
எல்லோரும் இன்புறவாரீர்—நாம்
எல்லாரும் எல்லாரும் இன்புறவாழ்வோம்.

இதுவே இராமதீர்த்தரின் இன்சொல் முழக்கமாகும். ஞானச் செய்தியாகும்!



# தாயுமானவர் சினம்

டாக்டர் வ.சுப.மாணிக்கம் M.A., Ph.D.

158602 -600 008.

ஆழ்வார் நாயன்மார்கட்குப் பின் தோன்றிய சமயப் பெரியார்களை நினைக்கும் போது, பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க வள்ளலார் என்ற மூவர் நினைவு நமக்கு இயல்பாக வருகின்றது. பட்டினத்தார் கடுந் துறவு என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தவர். தாயுமானவர் பொது நெறி என்ற இயக்கத்திற்கு வித்திட்டவர். வள்ளலார் சமயத்திடைச் சமூகத்தொண்டு என்னும் இயக்கத்தைக் கலந்தவர். இம் மூவர்தம் பாடல்களில், படி முறை வளர்ச்சியைக் காண்கின்றோம். பட்டினத்து அடிகள் பாடலில் துறவு வேகம் உண்டு. தாயுமானவர் பாடலில் துறவின் அமைதி யுண்டு. இராமலிங்கர் பாடலில் துறவு நலம் உண்டு. இக்கட்டுரைக்கண் தாயுமானவரின் உள்ளுணர்ச்சிகளில் ஓர் உணர்ச்சியை விளங்கிக் கொள்வோம்.

தாயுமானவர் 17-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர். முறையாகத் திருமணஞ் செய்து கொண்டு இல்லறம் நடத்தி ஓர் ஆண் மகவுக்குத் தந்தையானவர். மனைவி இறந்த பின் அக்குழந்தைக்குத் தாயும் ஆனவர். சாரமாமுனிவர் மடத்தைச் சார்ந்த மௌன குரு தேசிகரை அருட் குருவாகக் கொண்டவர். இவர்க்குத் தமிழ் மொழியிற்போல், வட மொழி அறிவும் நிரம்ப உண்டு என்பதனை அவர் செய்யுட்கள் காட்டுகின்றன. வட மொழிக் கலப்பு மிகுதியாயிருப்பினும், பாடல் நடை வானப் பறவையின் பறப்புப் போல் உயர்ந்து செல்கின்றது. வட சொற் குறைந்த செய்யுட்களும் பல இல்லாமல் இல்லை. 'மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ்' என்ற இடத்துத் தமிழ் என்னும் சொல் இனிமைப் பொருள் உடையது என்பதனைக் கரும்போடு உவமித்துக் காட்டியுள்ளார்.

தாயுமானவர் செய்யுட்கள் நெஞ்சைத் திருத்தும் அடிப்படை நோக்கமுடையவை. மனவொழுங்கே அவர் காட்டும் மதவொழுங்கு. நல்லவை கெட்டவைக் கெல்லாம் மனமே மூலம் என்று கண்ட அப்பெருந் தவர், அதனை அடக்கவும் ஒடுக்கவுமே பாடுபட்டுள்ளார் என்பதனை, அவர்தம் பாட்டுக்கள் வெளிப்படையாகக் காட்டுகின்றன.

''பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கருமையோ'' (பரி-9)

''நானென்று நீயென்று இரண்டில்லை என்னவே
நடுவே முளைத்த மனதைக்
கட்டவறி யாமலே வாடினேன் எப்போது
கருணைக் குரித்தா வனே'' (கருணா4)

'கள்ளமனக் கப்பலெங்கே காணும் பராபரமே
(பரா-212)

இவ்வாறு மனத்தைப் பலகாலும் சாடுவர் தாயுமானவர். சிந்தையற நில் எனவும், சும்மா இரு எனவும், மௌன குரு வழங்கிய நிறைமொழியைக் கடந்து நெஞ்சம் எங்கெங்கே ஓடித் திரிகின்றது. இறைவனைக் கும்பிடும் போது மனம் முழுதும் ஈடுபடவில்லை. எதனையோ நினைத்துக் கொண்டு அரைக் கும்பிடு செய்கின்றது. மனம் குவியாதபோது மலர்ப் பூசை செய்தல் முறையா? ஆதலின் எத்தனையோவல்ல சித்தர் கணத்தைப் பார்த்து, 'சித்து என்ற அனலால் என் மனக் கவலை மெழுகாக்கி வைக்கக் கூடாதா?' என்று வேண்டுவர் அடிகள். நல்லவர் யார்? கற்றோர் எல்லாம் நல்லவர் ஆகார்; கல்லாதவர் எல்லாம் கெட்டவரும் ஆகார். மனத்தை அடக்கியவர் யாரோ, மனத்திலிருந்து உணர்ச்சியைக் கிளர்ச்சியை அடக்கிக் கொண்டவர் யாரோ, அவரே நல்லவர் என்பது அடிகளின் விளக்கம்.

இறைவனை அடையப் பெறுமையினால் தாயுமானவர் படும் அவல வுணர்வுக்கு எல்லையில்லை. தம்மைத் தாமே நொந்து கொள்ளும் தற்சிறுமைக்கும் எல்லையில்லை. ''ஆணிலே பெண்ணிலே என்போல் ஒரு பேதை அனைத்துலகிலும் உண்டா? ஆடவர் வடிவு பெற்றுளேனேயன்றிக் கனவிலும் ஆண்மைப் பொருள் இல்லேனே? நான் இது வரை கற்றதும் கேட்டதும் எல்லாம் மனம் போன போக்கிலே போக விட்டுப் பொய்யனாகவும் கடைப் புலையனாகவும் ஆகி விட்டேனே? பகற் பொழுதிலே கண்ணை மூடிக் கொண்டு பொய்த் துயில் கொள்பவனை எழுப்ப முடியுமோ? மருந்துக்காவது ஓர் உண்மை சொன்னது உண்டா? ஈகை இரக்கம் என்பன என் பிறப்பில் என்றைக்காவது இருந்த சுவடு உண்டா? பிறருக்குப் போதிப்பது தவிர, நான் செய்தது உண்டா? போதிப்பதை நிறுத்திச் சும்மாவும் இருந்திலேனே. என்னைப் போல் குணக் கேடனை யாரும் கண்டோ கேட்டோ இருக்க மாட்டார். என் செய்வேன்! எத்தனை விதங்கள் தான் கற்பினும் கேட்கினும் என் இதயம் ஒடுங்கிய பாடில்லை. என் கொடுமை முறையற்ற கொடுமை, தீய கொடுமை, இதனை யாரிடம் சொல்வேன், கேட்பவர் யார்?''

''ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ''

என இவ்வாறெல்லாம் பன்னிப் புலம்பி நெஞ்சோடு போராடுவர் அடிகள்!

மத யானையை வணக்கலாம், கரடி புலிகளின் வாயைக் கட்டலாம், சிங்க முதுகின் மேல் ஏறியிருந்து செலுத்தலாம், படம் எடுக்

கும் பாம்பைக் கையிற் பிடித்து ஆட்டலாம். உலோகங்களைப் பொன்னாக்கலாம், ஒருவரும் காணாமல் உலகத்துத் திரியலாம், தேவரையும் ஏவல் கொள்ளலாம், என்றும் இளமையோடு இருக்கலாம், கூடுவிட்டுக் கூடு பாயலாம், நீர் மேல் நடக்கலாம், நெருப்பின் மேல் இருக்க லாம். இங்ஙனம் எத்தனையோ சித்தி விளை யாட்டுக்களைச் செய்பவர்கட்குச் சிந்தையையும் அடக்கலாம் என்ற இன்னொன்று செய்ய முடியுமா? சித்தியிற் பெரிது சிந்தையை அடக் குதல். சித்தத்தை அடக்குவதுதானே, மெய் யான சித்தி.

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது; சத்தாகியென்
சித்தமிசைக் குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே'' (தேசோ-9)

என்று சிந்தையடக்கம் அடக்கங்களுள் அரியது என ஒப்புமை காட்டி விளக்குபவர் அடிகளார். ஆடாமல் ஒய்ந்திட்ட பம்பரம்போல் விசை யடங்கி மனம் வீழ வேண்டும் என்பது அவர் வாழ்வின் நோக்கம். ஆனால் நிலை என்ன? தான் இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கு இடையூறாக நிற்பது எது? தன் மனமே தன் மேல் வாழ்விற்குக் குறுக்கீடு எனவும், உட்பகை யாய் உடனாக இருந்து கேடு செய்வது மனமே எனவும் கண்டார், என்றுமில்லாத சினங்கொண் டார் அடிகள்.

சினம் என்ற சொல்லைக் கேட்டவுடன், அது தீது என எண்ணி விட வேண்டா. அகப் பொருளில் களவு என்ற ஒரு கைகோள் உண்டு. இவ்வின்பக் களவினைக் குற்றம் எனக் கொள்வ தில்லை. அன்பொடும் அறத்தொடும் கூடிய கள வொழுக்கமாகவே அதனைக் கருதுகின்றோம். இக்களவினைப் பாடிய சங்கப் புலவோர் சான் றோர் எனப்படுவர். திருக்குறள் ''அறஞ்சாரா நல்குரவு'' (வறுமை—1047) என்று கூறுவதி லிருந்து, அறஞ்சார்ந்த நல்குரவும் ஒன்று உண்டு என்பதும், வறுமை இரு வகைப்படும் என்பதும் அறியத் தகும். அதுபோல் சினத்தையும் பண் படுத்தும் சினம் எனவும், புண்படுத்தும் சினம் எனவும் இரு வகைப்படுத்தலாம். கற்பாக முடியும் களவு போற்றப் பெறுவது போல, கொடையால் வரும் வறுமை புகழப்பெறுவது போல, மனத்தை இடித்துரைக்கும் சினமும் வரவேற்புக்கு உரியது. தன் மனம் அடங்காது உணர்ச்சி வயப்படும்போது அதனைக் கடிந்து முனியும் காரணத்தால் அன்றோ முனிவர்கள் என்ற பெயர் தவத்தோர்களுக்கு வந்தது. ஆதலின் தாயுமானவர்க்கு எழுந்த சினம் தவச் சினமேயன்றி அவச்சினம் அன்று. அச்சினத் தின் ஆற்றலையும் அதனை வெளிப்படுத்தும் அவர் வேகச் சொற்களையும் காண்போம்.

'வாராய் நெஞ்சே உன்தன் துன்மார்க்கம் யாவை
யும் வைத்துக்கட்டு, இங்கு
ஆராய்; அடிக்கடி சுற்றுகின்றாய்; உன் அவலமதிக்கு
ஒராயிரம் புத்தி சொன்னாலும் ஓர்கிலையோ? கெடு
வாய்;
பாராய் உனைக்கொல்லுவேன் வெல்லுவேன் அருட்
பாங்கு கொண்டே' (பாய-50)

நெஞ்சு என்னும் உட்பகையை அருகில் அழைத்து ''என் உடன் வாழ் நெஞ்சே! உன் கெடு நெறிக்கு மூட்டை கட்டு. நான் சொல்வதை நன்றாக எண்ணிப்பார். இறைவன் ஒருவனிடத்துச் சும்மா இரு என்று நான் சொல்லவும் அதனை விட்டு அடிக்கடி எங்கோ சுற்றுகிறாய். எவ் வளவு அறிவுரை புகன்றாலும் கெடுமதி உண ருமா? உணராது கெடப் போகின்றாய். நான் இறைவனை அடைய வேண்டி உன்னைக் கொல்லு வேன்; கொன்று என் குறிக்கோளில் வெற்றி யுறுவேன். கொன்ற எனக்குப் பாவமன்றோ சாரும் என்று நீ எண்ண வேண்டாம். உன்னைக் கொல்ல நான் கொள்ளும் கருவி அருள் என்னும் வாள்.'' இங்ஙனம் அடிகள் தன்னெஞ்சோடு போர் தொடுக்க முனைவதைப் பார்க்கிறோம். போருணர்ச்சி சினவுணர்ச்சி இன்றித் தோன்றா தல்லவா?

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன்
பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே'
(சத-20)

இத் திருவாசகம் மணிவாசகர் தன் நெஞ்சை விளித்துக் கூறியது. இச் செய்யுள் முழுதும் சினவுணர்வு உடையதன்று. சினத்தொடு இகழ் வும் இரக்கமும் அறிவுரையும் கலந்துள. தன் நெஞ்சு திருந்தும் என்ற நம்பிக்கை இன்னும் மணிவாசகர்க்கு இருந்தது போலும். தாயு மானார் தன் மனத்திடத்து நம்பிக்கையை இழந்துவிட்டார். பல முறை இடித்துரைத்தும் திருந்தும் போக்கை அதனிடத்து அவர் காண வில்லை. மாறான கெடுதற் போக்கே வளர்ந்து வரக் கண்டார். கையோ காலோ உறுப்பு அழு கினால் துண்டாக வெட்டவில்லையா? நோய் மிக்காரைப் பெருந்தூக்க மருந்து கொடுத்து மூச்சு ஒடுக்குவதில்லையா? தீய பெருமனத்தை வேறென் செய்வது? அடிகளார்க்கு ஒரே சினம். அதனை ஒரு கை பார்க்கும் முழுச் சினம். உன்னைச் சாகடித்து நான் வாழ முடியுமேயன்றி இனி உன்னோடு உடன் வாழ்தல் அரிது என நெஞ்சு நோக்கி வஞ்சினம் கூறுவர் தாயுமானார். அவர் வஞ்சினக் கூற்றில் ஒரு முரண் உண்டு என்று அறிய வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முப்பது ஆண்டுகட்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி. மறை மலையடிகளார் பல்கலைக் கழகப் பேரவையில் ஆயிரக் கணக்கான மாணவர் முன்னும் ஆசிரி யர் முன்னும் தமிழர் நாகரிகம் குறித்துத் தமக்கே உரிய இனிய குரலில் சொற்பொழிவு ஆற்றினர். ஆற்றி வரும்போது அயல் நாகரிகக் கலப்பினை எடுத்துக் காட்டினர். காட்டி வரும் போது உள்ளம் கொதித்துச் சினம் தோன்றி, தமிழர்க்கு 'ரோஷம்' வேண்டாமா என்று கேட்டனர். ரோஷம் என்ற வட சொல்லை அச்சமயத்துப் பயன்படுத்தியவர் யார்? தனித் தமிழ் இலக்கியத் தந்தை மறைமலையடிகள். தமிழுக்கு வந்த கேட்டினை நினைக்கும்போது உள்ளத்துச் சினம் பொங்கிக் குறிக்கோளுக்குப் புறம்பான சொல் வந்துவிடப் பார்க்கின்றோம்.

'கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்
(ஆனந்த...1)


'கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே'
(பரா.54)

'கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே (பரா பரா. 192)

மேலைச் செய்யுட்கள் கொல்லா நோன்பினைக் குறிக்கோளாகக் கொண்டவர் தாயுமானவர் என்பதனைத் தெளிவாகக் காட்டும். கொல்லா விரதம் ஒருவன் கொண்டானேல் ஏனைய கெடு குணங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்பதும், உலகமெங்கும் அவர் பறைசாற்ற விரும்பும் இயக்கம் கொல்லாமையே என்பதும் தெளிவாகும். எத்துணை நோன்புகள் கொள்ளாவிட்டாலும், கொல்லா நோன்பு ஒன்று கடைப்பிடிப்பவரே 'நல்லோர்' எனத் தம் பாராட்டுதலையும், கொல்லுதலைச் செய்து கொண்டு பிற எத்தனை நோன்பு கொண்டிருந்தாலும் அவரைத் தீயரென்று சொல்லலாமா என்றால் அவரைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குச் சொல்லில்லை என்று காட்ட 'யாரோஅறியேன்' எனத் தம் வெறுப்பையும் அடிகள் வெளிப்படுத்துவர். 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்ற வள்ளுவர் குறிக்கோளே அடிகளின் கோளாகும். வள்ளுவர் கொல்லாமையை நல்லது எனப் பண்பின் மேல் வைத்து மொழிந்ததையே, அடிகள் கொல்லாமையுடையவரே நல்லோர் எனப் பண்புடையார் மேல் வைத்துப் பாடிய ஒற்றுமை நினையத் தகும்.

கொல்லாக் குறிக்கோள் கொண்ட தாயுமானவர் தன் மனம் குவியாதபோது, சும்மா இராதபோது, எங்கும் சுற்றி அலைந்தபோது, எவ்வளவு கற்றும் கேட்டும் ஒடுங்காதபோது, மௌன குரு வந்து போதித்தும் மடங்காத போது, கவர்ந்து எழுந்து ஓங்கிப் பொங்கும் சினங் கொண்டார். உன்னை விடுவேனா பார் என்று உருத்தெழுந்தார். தன் குறிக்கோளையும் மறந்து, சற்றே தள்ளி வைத்து, 'கெடுவாய் பாராய் உனைக் கொல்லுவேன்' என்று மனக் கொலை செய்ய எண்ணினார் என்று பார்க்கின்றோம். இது கொள்கை முரணா? களவைக் கற்புக் களவு, கள்ளக் களவு என இரண்டாகக் கொள்ளலாம் எனின், வறுமையை அறவறுமை, புறவறுமை என இரண்டாகக் கொள்ளலாம் எனின், சினத்தைப் பண்படுசினம், புண்படு சினம் என இரண்டாகவும், கொலையையும் ஏன், வாழ்வுக்கொலை, தாழ்வுக்கொலை என இரண்டாகவும் கொள்ளல் கூடாது?

'சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே (169)



அருள்திரு பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சுக்கிரவாரப்பேட்டை, கோவை-1.
26-1-75-ல் நடைபெற்ற திருக்கல்யாண உற்சவம்.

# திருக்குறள் மாட்சி

கவிஞர் சி.து. கன்னிசாமி.

என்னதவம் செய்திட்டோம்! இவ்வுலகில்
வேறுபிறர் எய்தற் கில்லாத்
தன்னிகரில் புகழ்வாய்த்தோம்! தனியறநூல்
இதுவென்றே சாற்றும் மாட்சி
மன்னுபெரும் திருக்குறளை வாய்த்திட்டோம்!
வாழ்வியலை வகுத்துக் கூறும்
இன்னபழ நூலிதுபோல் எங்கணுமே
கண்டதிலை! ஈதே உண்மை! (1)

மொழிபெயரும் தேயத்தார், மூதுலகில்
பேரறிவால் மூத்தோர் எல்லாம்,
மொழிபெயர்த்துத் திருக்குறளின் முழுநலனும்
துய்க்கின்றார்; முற்றும் ஆய்ந்தே
செழுமரபில் திறனாய்வு செய்கின்றார்;
சிந்தைநலம் சிறந்தார்! நாமோ
கழிவழக்குப் பேசுதற்கே காலமெலாம்
கழிக்கின்றோம். கருதல் எங்கே! (2)

தங்கருத்தை நிலைநாட்டத் தனிக்குறளைத்
துணைதேடும் தன்மை யாளர்
புங்கநெறிச் செய்யுளுக்கே புத்துரைகள்
கண்டிடுவார் புரட்சி என்பார்
அங்கவர்கள் திருக்குறளின் அரியகருத்
தவை தெளியார் ஆழம் காணார்
மங்கும்அறி வாளரிவர் மாநிலத்தில்
குறள்பரப்பும் மார்க்கம் ஈதாம். (3)

''கற்குமவை கசடறவே கற்றுயர்க
கற்றாலவ் வழியில் என்றும்
நிற்பதுவே சால்பாகும் நினைமின்கள்''
என்றுகுறள் நேயத் தோடும்
உற்றுரைத்தல் உணராதார் ஒன்றுநினைந்
தொன்றினையே ஓதி நாளும்
கற்றவழி நில்லாதார் காசினிக்கே
பகையாவர் கருத்தில் ஓர்மின்! (4)

பிறநாட்டு நல்லறிஞர் பெற்றபெரு
நூன்மாட்சி பேணிக் காக்கும்
திறனெல்லாம் காண்கின்றோம்! திருக்குறளை
அவர்போற்றும் செய்கை காண்பேம்!

அறிவாரும் தன்குழவி அயலாள்கை
வளர்வதனை அறிந்தும், நெஞ்சம்
சிறிதேனும் துளங்காமல் செருக்கியுளம்
மகிழ்ந்திடுவாள் செய்கை போன்றேம். (5)

சமயங்கள் அறிந்திட்டார் தத்துவங்கள்
வழிநில்லாச் சால்பு காட்டி
அமையும்சீர்ச் சமயங்கள் அறிவுறுக்கும்
கொள்கைகளும் அறிவித் திங்கே
சமையும்சீர் வாழ்வுக்குச் சாற்றுநெறி
ஈதென்று சலியா உண்மை
இமையம்போல் தந்துதவும் இனியகுறள்
மாட்சியிதற் கிணையும் உண்டோ! (6)


அன்புநெறி வளர்ந்தோங்க ஆன்மநெறி
தழைத்ததனில் அகிலத் துள்ளார்
இன்பமுடன் சோதரராய் இணைந்தொருமைப்
பாட்டினிலே என்றும் வாழ
முன்பெவரும் காணாத முறையினிலே
இல்லறத்தின் முயற்சி ஓங்க
மன்பதைச்சீர் ஞாலமிசை வளர்ந்திடவே
திருக்குறளின் வழியில் வாழ்வோம். (7)

எல்லாரும் பின்பற்றி ஈடேறும்
செய்யமறை இதனைக் கற்றால்
பொல்லாங்கு புறங்காட்டும்; போர்வெறியும்
மறைந்தொழியும்; புன்மை ஓயும்;
நல்லாரே ஞாலத்தில் நிறைந்திடுவர்;
மற்றையர்க்கு வாழ்வே இல்லை.
எல்லாரும் ஒருகுலமாய் இவ்வுலகே
துறக்கமென இணைந்து வாழ்வார். (8)

சொல்லாத பொருளில்லை தூயதிருக்
குறள்இதனில்; சொற்ற வண்ணம்
நில்லாதார் இலையென்ற நிலைமையது
ஞாலத்தில் நீங்கல் வேண்டும்;
செல்லாத பழங்காசாம் சிறுநூல்கள்
ஆய்வதினிச் செல்க இன்றே
பொல்லாத நெறிகளையாம் புறம்காண்போம்
குறள்நெறியே போற்றி வாழ்வோம். (9)

உடலாரை வளர்த்தற்கே உள்ளபெரு
நாளெல்லாம் உழைத்தோம் அல்லால்
உடல்வாழும் உயிர்ஞானம் உயர்ந்தேறும்
மாட்சியினை உணர்ந்தோம் இல்லை
உடனுகை மனங்கொள்வோம், உயர்ந்ததிருக்
குறள்மாட்சி ஊன்றிஆய்ந்து
திடனுகைச் செயற்பட்டால் திருவருளும்
எளிதாகும் திண்ணம் திண்ணம்! (10)

# ஒன்பது நகரக் கோயில்கள்



**திரு. வீர. நடராசச் செட்டியார்**

சோழ நாட்டின் தலைநகரமாகிய காவிரிப் பூம்பட்டினம் முற்காலத்தில் உலகம் எல்லாம் புகழப்பெற்றிருந்தது. அக் காலத்தில் அங்கே வாழ்ந்திருந்த மகுடதன வைசியர்களாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் குபேரனும் பொருமை கொள்ளத் தக்க பெருஞ் செல்வ வளத்துடன், அரசாங்க முன் மரியாதைக்கு உரியவர்களாகிச் சிவபக்தி, சிவனடியார் பக்தியில் சிறந்து, அறத்தின் வழிப்பொருள் ஈட்டிச் சிவ புண்ணியங்களைச் செய்து வாழ்ந்து வந்தார்கள்.

பாண்டிய மன்னன் தனது நாட்டிற்கு நற்குடி மக்கள் வேண்டும் என்று விரும்பிச் சோழ நாட்டில் வாழ்ந்து வந்த நகரத்தார்களை அழைத்துக் கொண்டு வந்து, கடற்கரைக்கு மேற்கு, வையை ஆற்றிற்கு வடக்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு ஆகிய நான்கு எல்லைகட்கு உட்பட்ட ஊர்களில் குடியேற்றியதுடன், அவர்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப, மிகப் பழைய ஒன்பது சிவாலயங்களைப் பரிபாலன உரிமையோடு அவர்களுக்கு அளித்தான். அத்திருக்கோயில்கள்,

1. இளையாற்றக்குடி
2. மாற்றூர்
3. வயிரவன் கோயில்
4. இரணியூர்
5. பிள்ளையார்பட்டி
6. நேமம்
7. இலுப்பைக்குடி
8. சூரைக்குடி
9. வேலன்குடி

என்பவை ஆகும்.

இவற்றுள், இளையாற்றக்குடிக் கோயில் மரபினர், ஒக்கூர் உடையார், பட்டனசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசற்குடியார், கிண்கிணிக்கூருடையார், பேரசெந்தூருடையார், சிறுசேற்றூர் உடையார் என்னும் ஏழு பிரிவினராகவும்,

மாற்றூர்க் கோயில் மரபினர், உறையூர் உடையார், அரும்பாக்கூர் உடையார், மணலூர் உடையார், மண்ணூர் உடையார், கண்ணூர் உடையார், கருப்பூர் உடையார், குளத்தூர் உடையார் என்னும் ஏழு பிரிவினராகவும்,

வயிரவன் கோயில் மரபினர், சிறுகுளத்தூருடையார், கழனிவாசல் உடையார், மருகேந்திரபுரம் உடையார் என்னும் மூன்று பிரிவினராகவும் உள்ளனர்.

ஒன்பது கோயில்களின் சுவாமி, அம்மை திருப்பெயர்கள் வருமாறு :

1. இளையாற்றக்குடி — கைலாசநாதர், நித்திய கல்யாணி.

2. மாற்றூர் — ஐந்நூற்றீசர், பெரிய நாயகி.

3. வயிரவன் கோயில் — வளரொலி நாதர், வடிவுடை அம்மை.

4. இரணியூர்—ஆட்கொண்ட நாதர், சிவபுரந்தேவி.

5. பிள்ளையார்பட்டி—கற்பக விநாயகர்; திருவீசர், சிவகாமவல்லி; மருதீசர், வாடாமலர் மங்கை.

6. நேமம்— செயங்கொண்டசோழேசர், சௌந்தர நாயகி.

7. இலுப்பைக்குடி—தான்தோன்றியீசர், சௌந்திர நாயகி.

8. சூரைக்குடி—தேசிகநாதர், ஆவுடை நாயகி.

9. வேலன்குடி—கண்டீசர், காமாட்சி.

பிள்ளையார்பட்டிக் கோயிலில் ஆவணித் திங்களில் விநாயக சதுர்த்தித் திருவிழா 10 நாட்களும், இலுப்பைக்குடிக் கோயிலில் சித்திரைத் திங்களில் பிரும்மோத்சவம், தெப்பத் திருவிழாவுடன் 10 நாட்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இளையாற்றக்குடிக் கோயில் மரபினர்,

''கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில்...உடையார்''

என்றும்;

மாற்றூர்க் கோயில் மரபினர்,
''கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டிய புரத்தில்...உடையார்''
என்றும்;

வயிரவன் கோயில் மரபினர்,
''கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்தெருவான
வீரபாண்டிய புரத்தில் . . . உடையார்''
என்றும்,

இரணியூர்க் கோயில் மரபினர்,
''கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்ககுடியான இராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட்பூர் உடையார்''
என்றும்;

பிள்ளையார்பட்டிக் கோயில் மரபினர்,
''கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகர புரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயண புரத்தில், பிள்ளையார் பட்டியான திருவேட்பூர் உடையார்''
என்றும்;

நேமங்கோயில் மரபினர்,
''கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகர [புரத்தில்
தேனுறு பாயும் இளநிலமுடையார்''
என்றும்;

இலுப்பைக்குடிக் கோயில் மரபினர்,
''கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக் குடியான புகழிடம் கொடுத்தபட்டினத் [தில்
சூடாமணி புரம் உடையார்''
என்றும்;

சூரைக்குடிக் கோயில் மரபினர்,
''கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக [நாராயண
புரத்தில் புகழ்வேண்டிய பாக்கம் உடையார்''
என்றும்,

வேலன்குடிக் கோயில் மரபினர்,

''கேரளசிங்க வளநாட்டில் பாலையூர் நாட்டில் [வேலன்குடியான
தேசிக நாராயணபுரத்தில், கழனிநல்லூர் உடை [யார்''
என்றும்;

திருமண முறி முதலிய ஆவணங்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

ஒன்பது கோயில் நகரத்தார்களும் அவரவர்களுக்கு உரிய கோயில்களில் பாக்கு வைத்து, சுவாமிக்குச் சாத்திய மாலை விபூதிப் பிரசாதம் பெற்றே தம் வீட்டுத் திருமணங்களை நடத்தி வருகிறார்கள். அரசினர் வைத்துள்ள பதிவு முறையைவிட இது சிறந்ததாகஅமைந்துள்ளது.

பாரத நாட்டில் பல்வேறு சமூகத்தினர்களாக வாழும் மக்கள், தத்தம் குடிகளை மூல புருடர்களின் பெயர்களால் அமைந்த கோத்திர முறையில் கொண்டிருக்கின்றார்கள். நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் மட்டுமேயாவருக்கும் குடி முதல்வராகிய சிவபரம்பொருளைத் தம் குடி முதல்வராகக் கொண்டு, தம்மைச் சிவ கோத்திரத்தார் என்று குறித்து, மேற்கூறிய ஒன்பது கோயில்களின் மூலத்தானச் சிவலிங்க மூர்த்திகளால் தம் குடிப் பிரிவுகளை விளங்கச் செய்து வாழ்ந்து வருகிறார்கள்.



சென்னை மாவட்ட சிரணியினர் மயிலாப்பூர் திரு கபாலீசுவரர் திருக்குளம் தூர் எடுக்கும் பணியில் பெண்கள் பங்கு கொள்ளும் காட்சி.

# அருள்மிகு

# பாலசார்த்துலீசுவரர் ஆலயம்

நல்லூர்ப்பேட்டை, குடியேற்றம் (வடாற்காடு)

## <u>மகா கும்பாபிஷேகம் அழைப்பு</u>

## 6—6—1975

வடாற்காடு மாவட்டம் குடியேற்றத்தில் சுயம்பு மூர்த்தியாய் அருள்திரு சிவகாமி சமேத பாலசார்த்துலீசுவரர் ஆலயத்தில், 106 அடி உயரமுள்ள புதிய ராசு கோபுரம் கட்டி ஆலயத்தில், 7 விமானங்கள் புதுப்பித்துப் பிராகாரங்கள் செப்பம் செய்து வண்ணங்கள் தீட்டி, சுமார் 4 லட்ச ரூபாயில் திருப்பணி நடந்துள்ளது.

இராட்சச வருடம் வைகாசி மாதம் 23-ந் தேதி (6—6—'75) வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்குக் கடக லக்கினத்தில், திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறும்.

**யாவரும் வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

இங்ஙனம்,

பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
தக்கார்

டி. எஸ். ஆதிமூலம்,
செயலாளர்

எம். வி. சாமிநாதன்,
பொருளாளர்

திருப்பணிக்குழு,
அருள்திரு பாலசார்த்துலீசுவரர் ஆலயம்
நல்லூர்ப்பேட்டை,
குடியேற்றம், வ. ஆ. மாவட்டம்

# பரஞ்சோதிமுனிவர் பாடற்றிறன்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

நம் தமிழ் நாடு, நல்ல பல கவிஞர்களை ஈன்றெடுத்த சிறப்புடையது. தமிழ் நாட்டிற் றோன்றியருளிய புகழ்மிக்க சிறந்த பெருங் கவிஞர்கள் பற்பலருள், பரஞ்சோதி முனிவரும் ஒருவர் ஆவர். அவர் பாடிய நூல்கள் பல. எனினும், அவற்றுள் அறிஞர் பெருமக்களாற் பெரிதும் மகிழ்ந்து போற்றப் பெற்று வருவது, திருவிளையாடற் புராணம் ஆகும். உலக நாடுகள் பலப்பல அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த மிகப் பழைய காலத்திலேயே, சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமாட்சிமை யுடைய பாண்டிய வேந்தர்களின் தலைநகர மாகத் திகழ்ந்து விளங்கியது, அருள்மிகு மதுரை மாநகரம். அந்நகரில், தமிழின்பால் தணியாப் பெருங் காதல் கொண்ட மீனாட்சி சுந்தரேசுவரப் பெருமான் நிகழ்த்தியருளிய 64 திருவிளையாடல் களைச் சுவைமிகு செஞ்சொற் கவிதைகளால் விளக்கிப் பரஞ்சோதி முனிவர் பாடியுதவிய நூலே, திருவிளையாடற் புராணம் என்னும் பெயர் பெற்றுப் புகழ் மிக்குத் திகழ்கின்றது.

சிவபெருமானின் மூன்று கண்களைப் போன்று, சிவநெறிப் புராணங்களுள் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்னும் மூன்றும் சிறப்புடையன என்பர். செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி, இலம்பூர் வீமநாத பண்டிதர், வாயற்பதி அநதாரியப்பர் என்னும் வேறு பிறர் பலரும் கூட, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரப் பெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை, வியந்து புகழ்ந்து நூல்கள் இயற்றியுள்ளனர். ஆயினும், இன்று, 'திருவிளையாடற் புராணம்' எனக் கேட்ட துணையானே எவரும் நினைவு கூரச் சிறந்து நிற்பது, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணமேயாகும். இதனால், அதனை இயற்றியருளிய பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறன் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதனை எவரும் இனிதுணரலாம். பிற திருவிளையாடல் நூல்கள் எதுவும் பெருத சிறப்பினை இந்நூல் பெற்றிருப்பதற்கு, வேறு பிறிதெதனையும் விடப் பரஞ்சோதி முனிவரின் சிறந்துயர்ந்த பாடற்றிறனே காரணம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

**பாடற்றிறன் :**

பரஞ்சோதியாரின் பாடற்றிறன், தனிப் பெருஞ் சிறப்பும் சுவையும் வாய்ந்து, பயில்வார் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் பான் மையிற் சிறந்து திகழ்கின்றது. பயில்வார்மனங் கவரும் பான்மைத்தாய்த் திகழ்தலே, சிறந்த பாடற்றிறனுக்குச் செவ்விய இலக்கணமாகும். இவ்வுண்மையினைப் பின்வரும் 'தண்டியலங் காரச் செய்யுள் இரட்டுற மொழிதலாற் சுவை மிக விளக்குதல் உணர்ந்தின்புறற் பாலது.

''செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச்—செந்தமிழ்
கற்றோர் இயற்றும் கவிபோல், மனம் கவரும்
முற்று நலத்தாள் முகம்.''

பரஞ்சோதி முனிவரின் பாடல்களிற் சொல் வளமும், கற்பனை நலமும், ஓசை நலமும் செறிந் தொன்றித் திகழ்கின்றன. தமக்கு முன்னர் விளங்கிய பண்டைப் பெருஞ் சான்றோர்களின் நூல்களை யெல்லாம் முறையாகத் துறைபோகக் கற்றுணர்ந்து, அவ்வுணர்வில் தோய்ந்து ஒன்றிய அருங் கலையுள்ளத்தினராக நின்று, தாம் கற்றுத் தேர்ந்து சுவைத்து மகிழ்ந்த கலை நூல்களின் சாயல்கள் பலவும் ஆங்காங்கே நிழலாடித் திகழும் வண்ணம், பரஞ்சோதி முனிவர் தமது நூலைப் பாடியுள்ளார்! அதனால், அவர் தம் பாடல்கள் சொற் பொருட் செறிவும் சுவையும் மிகுந்து, பயில்வார்க்கு நாவூறலை விளக்கும் நலங்கெழுமிச் சுடர் விட்டொளிர்கின்றன!

பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள், பரஞ்சோதி முனிவரின் பாடல் நலங்களிற் பெரிதும் ஈடுபாடு கொண்டு, அதன்கண் ஒரு சில பாடல்களையேனும் நாள் தோறும் ஓதி மகிழும் பழக்கத்தினைப் பல ஆண்டுகளாகத் தாம் கடைப்பிடித்து வருவ தாகக் குறிப்பிட்டுள்ளார்(1). இங்ஙனம் பேரறி ஞர்கள் பற்பலரின் உள்ளங்கவர்ந்த பாடற் றிறனுடையவர் பரஞ்சோதி முனிவர்! சிறந்த கவிதைகளை இயற்றும் திறம் பெற விழைவோர், பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணப் பாடல்களைப் பலகாற் பயின்றோதி வந்தால், அத்திறத்தினை எளிதிற் கைவரப் பெறலாம் எனப் பெரியவர்கள் பலர் கூறுவதுண்டு. அத் தகைய பெருஞ் சிறப்பினராகிய பரஞ்சோதி முனிவரின் பாடல்களில் ஒரு சிலவற்றை ஈண்டுக் கண்டு சுவைத்தின்புறுவோம்.

---

(1) "It is not possible in this connection to open an explicit discussion on the historical value of the Tiruvilaiyadal Purana . . . I mean no disparagement to the purana as a literary work. So charming is its diction and so great its powers of clear description that for years together I have been in the habit of reading a few stanzas of it every day."

—Prof. P. Sundaram Pillai, M.A.

# அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில்

இராமேசுவரம்

*இமயம் முதல் சேது வரை பாவம் போக்கி மக்களுக்குப் பேரின்பமும், பெரு வாழ்வும் அளிக்கும் பல புண்ணியத் தலங்களைத் தன்னகத்தே தாங்கித் திகழும் பாரத நாட்டின் வேதங்கள் இதிகாசம், புராணங்கள் முதலியவற்றால் புகழப்படும் பெருமை வாய்ந்த புண்ணியத் தலங்களில் இராமேசுவரம் மிக முக்கியமானதாகும்.

*திருக்கோயில் நாடி வரும் பக்தர்களின் வசதிக்காகச் சகல வசதிகளுடன் கூடிய சிற்றில்களும், ஓய்வு விடுதிகளும் கோவிலைச் சுற்றியும், எதிர்ப் புறங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

*சுமார் 150 மாணவிகளுடன் இத்திருக்கோயிலில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்மன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, இன்று ஆல் போல் தழைத்து 500 மாணவிகள் பயிலும் சிறந்த உயர்நிலைப் பள்ளியாகத் திகழ்கிறது. சுமார் ஐந்து இலட்ச ரூபாய் செலவில் பெண்கள் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டுச் சிறந்த ஒரு பள்ளியாகத் திகழ்கிறது.

*சமஸ்கிருதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் அபிவிருத்திக்காக இராமேசுவரம் திருக்கோயில் பாடசாலை, இராமேசுவரம் திருக்கோயில் கல்லூரியாக மாற்றப்பட்டு, பட்டப் படிப்பு வழங்கும் வகையில் கல்லூரியின் தகுதி உயர்த்தப்பட்டுள்ளது.

*திருக்கோயிலால் நடத்தப்பட்டு வரும் மாபெரும் திருப்பணிக்குத் தங்களுடைய காணிக்கையாக வாரி வழங்க வேண்டப்படுகிறது.

*திருக்கோயிலுக்கு வருகை தரக்கூடிய பக்தர்களின் வசதிக்காக ஆயுர்வேத மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

*பக்தர்கள் எடுத்துச் செல்வதற்கு வசதியாகத் திருக்கோயில் பெயர் பொறிக்கப்பட்ட அழகிய பிளாஸ்டிக் பாட்டில்களில் கோடி தீர்த்தம் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தேவையான அசல் சுத்தமான கோடி தீர்த்தத்தைத் திருக்கோயிலுக்குள்ளேயே வாங்கிக் கொள்ளக் கோரப்படுகிறது.

*பல வர்ணங்களில் பொறிக்கப்பட்ட ஸ்ரீ இராமலிங்கப் பிரதிஷ்டை படத்துடன் கூடிய டப்பாக்களில் கும்பாபிஷேகப் பிரசாதமாக விபூதி, குங்குமம், செந்தூரம் மற்றும் கோடி தீர்த்தம் உள்பட டப்பா ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வழங்கப்படுகிறது.

*இராமலிங்கப் பிரதிஷ்டை பொறிக்கப்பட்ட வெள்ளி டாலர்கள், பிளாஸ்டிக் மோதிரங்கள், டாலர்கள் ஆகியவை முறையே ரூ. 12, ரூ. 5 வீதம் வழங்கப்படுகிறது.

தர்மகர்த்தாக் குழுவினர்

திரு. ஏ. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியார், தேவகோட்டை.

திரு. டி. கே. சிறைமீட்டான், எம். எல். ஏ., பரமக்குடி.

திரு. ஆர். எச். முருகப்ப செட்டியார், நடராஜபுரம்.

திரு. ஏ. டி. எம். இராமநாதன் தேவர், அஞ்சுக்கோட்டை.

**திரு. எஸ். இராமநாத சேதுபதி,**
தர்மகர்த்தாக் குழுத் தலைவர்.

**திரு. எஸ். பி. முனுசாமி,**
உதவி ஆணையர், நிர்வாக அதிகாரி

**இயற்கைப் புனைவு :**

ஒரு நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை அளந்தறிந்து சுவைத்து மகிழ்தற்குப் பல வழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் எங்ஙனம் திறம்படப் புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக்கண்டறிவதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும், அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும் கவிஞர்கள்பாற் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும். ''கவிஞனின் கண்ணானது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல்புகளைக் கவிஞனின் எழுதுகோல், எழில் கனிந்த கலையோவியங்களாக இனிதுவடித்துக் கொடுக்கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப்படாமையின் இல்லனவாய் விளங்குவனவற்றிற்குக் கவிஞனின்கற்பனையுணர்வு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது.''

வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லதோன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றே?(2)

—ந.ரா.மு.

எனச் செகப்பிரியர், கவிஞர்களின் இயல்பினை இனி தெடுத்து விளக்குகின்றார். அதனால், கவிஞர்களின் கவித் திறனுக்கும் இயற்கைப் புனைவுக்கும் மிக்க பெருந் தொடர்புண்மை இனிது பெறப்படும்.

**(1) மேகங்கள் திரண்டெழுதல் :**

பரஞ்சோதி முனிவர் இயற்கை நலனைப் புனைந்து பாடுதலிற் சிறந்து திகழ்கின்றார். பண்டைச் சங்க காலப் புலவர்கள் எங்ஙனம் இயற்கைப் பொருள்களில் மிக்க ஈடுபாடு உடையராய் விளங்கி, அவற்றைத் தமது பாடல்களில் இனிதெடுத்துப் பாடினரோ, அங்ஙனமே பரஞ்சோதி முனிவரும் பாடுகின்றார். பிற்காலப் புலவர் என்னும் காரணம் பற்றிப் பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறனை, நாம் எளிதாக எண்ணி விடுதற்கில்லை. 'ஒரு பொருளை அவர் புனைந்து பாடும்போது, நாம் அதனை நேரே காண்பதைவிடக் கூட மிக விளக்கமாகக் காண்கின்றோம்; அது மட்டுமன்று, உற்றுந்தொட்டுங் கூட உணரப் பெறுகின்றோம்!(3)

ஒவ்வொரு புராணத்தின் தொடக்கத்திலும் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்பன பற்றிப் பாடுவது கவிஞர்களின் மரபு. அங்ஙனம் நாட்டுச் சிறப்பைப் பாடுங்கால் மேகங்கள் திரளுதல், மழை பொழிதல், வெள்ளம் பெருகி ஆறுகளும் கால்வாய்களுமாகப் பாய்தல் போல் வனவற்றை, அழகுற வருணனை செய்து பாடுவது கவிஞர்களின் வழக்கம். அம்முறையில், மேகங்கள் கடலுக்குச் சென்று நீரை முகந்து மழை பொழிவதனைப் பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சிவபிரானின் திருநீறு அணிந்த மேனியைப் போல வெண்மையான மேகங்கள் கடலுக்குச் சென்றன; கடலில் நீரைப் பருகி, உமா தேவியைப் போலக் கருமை நிறம் அடைகின்றன; உயிர்களின் துன்பங்களைப் போக்குவதற்காக இறைவன் பொழிகின்ற திருவருளைப் போன்று, கோடை காலத்தின் வெப்பம் தணியும்படி மழையைப் பொழிய எழுந்தன.

''தெய்வ நாயகன் நீறணி மேனிபோற் சென்று,
பௌவம் மேய்ந்து உமை மேனிபோற்பசந்து, பல்
உயிர்க்கும்
எவ்வம் ஆற்றுவான் சுரந்திடும் இன்னருள் என்னக்,
கௌவை நீர்சுரந்து எழுந்தன கனைகுரல் மேகம்.''

**(2) கோடைமேற் பெரும்போர் :**

இங்ஙனம் திரண்டெழுந்த மேகங்கள் இடி இடித்து, மின்னலை மின்னி, வானவில் இட்டு, மழை பெய்யத் தலைப்படுகின்றன. அக்காட்சி, இடியிடித்தல் ஆகிய வீரப் பெரு முழக்கம் செய்து கொண்டு, மின்னலாகிய வாட்படையை விதிர்த்து, இந்திர வில்லை ஏந்தி, நீராகிய அம்பினைச் சொரிந்து, கோடை வெப்பமாகிய பகைவனை எதிர்த்து அடக்கி வெற்றி கொள்வதற்காக, மேகங்களாகிய வீரர்கள் திரண்டமை போலக் காணப்படுகின்றது.

''இடித்து வாய்திறந்து, ஒல்லென எல்ஒளி மழுங்கத்
தடித்து வாள்புடை விதிர்த்துநின்று, அந்திர சாபம்
பிடித்து, நீள் அம்பு கோடைமேற்பெய்து, வெம்
பெரும்போர்
முடித்தும், நாம்என வருதல்போல் மொய்த்தன
கொண்மூ''.

**(3) பால் அருவி :**

மேகம் மழை பொழிவதனால் மலைகளில் அருவிகள் பெருக்கெடுத்து ஓடி வருகின்றன. இக்காட்சியானது, கடலாகிய மேகலையை உடுத்துள்ள நிலம் என்னும் பெண்ணானவள், தன்னிடத்தில் தோன்றிய உயிர்களாகிய குழந்தைகளின்பால் இரக்கம் கொண்டு, தன் தனங்கள் ஆகிய மலைகளில் இருந்து, பால் ஆகிய அருவி வெள்ளம் பெருகச் செய்தலைப் போன்றுள்ளது.

---

2. "The poet's eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name."

—SHAKESPEARE,
"*A Midsummer Night's Dream.*"

3. "He was the man who of all modern, and perhaps ancient poets, had the largest and most comprehensive soul. All the images of nature were still present to him, and he drew them, not laboriously, but luckily ; when he describes anything, You more than see it, you feel it too . . .

—JOHN DRYDEN, SHAKESPEARE.

''உடுத்த தெண்கடல் மேகலை யுடைய பார்மகள், தன்
இடத்து உதித்த பல் உயிர்க்கெலாம் இரங்கித் தன் கொங்கைத்
தடத்து நின்றிழி பால்எனத் தடவரை முகடு
தொடுத்து வீழ்வன, இமும்எனத் தூங்குவெள் அருவி''.

## (4) பொருநை என்னும் பெண் மகவு :

பொதிய மலையிலிருந்து பொருநையாறு தோன்றுகின்றது என்னும் செய்தியினைப் பரஞ்சோதியார் எத்துணைச் சுவையமையவும், அழகு திகழவும் பாடுகின்றார். பார்மின்கள்!

கருநிற மேகம் என்னும்
கச்சுஅணி சிகரக் கொங்கை,
அருவியாம் தீம்பால் சோர,
அகன்சுனை என்னும் கொப்பூழ்ப்
பொருவில்வேய் என்னும் மென்தோட்
பொதியமாம் சைலப்பாவை
பெருகுதண் பொருநை என்னும்
பெண்மகப் பெற்றாள் அன்றே.

பொதிய மலை ஒரு பெண். அதன் சிகரங்கள் கொங்கைகள். மலைச் சிகரங்களில் மேகம் படிதல், அப்பெண் கச்சு அணிந்திருத்தல் போலக் காணப்படுகின்றது. மலையினின்று அருவிகள் பெருகுதல், தீம்பால் பெருகுதலை ஒத்துத் திகழ்கின்றது. சுனைகள் கொப்பூழை நினைவூட்டுகின்றன. மூங்கில்கள் தோள்களைப் போன்றுள்ளன. இத்தகைய மலையினின்று ஆறு தோன்றுதல், ஒரு தாய் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுப்பது போன்றுள்ளது!

## (5) பொருநைப் பெண் வளர்ச்சி :

இங்ஙனம் பொதியமலை பெற்ற பொருநை நதி என்னும் பெண் குழந்தையானது, 'கல்' என்ற ஒலியுடன் கரைந்து விழுந்து, காடுகளில் மெல்லெனத் தவழ்ந்து, இடையர்களின் தீம் பாலை உண்டு, உழவர்கள் தெழிக்கும் பம்பைப் பறையின் இனிய குரலைச் செவிமடுத்துக் கொண்டு, கால்வாய்களாக நடந்து, பயிர்ப் பண்ணைகள்தோறும் பாய்ந்து, விளையாடி மகிழ்கின்றது. தான் அடித்துக் கொண்டு வரும் வாழை மரங்கள் தொடைகளாகவும், மாந் தளிர்கள் தன் மேனியின் நிறமாகவும், தென்னம் குரும்பைகள் அழகிய முலைகளாகவும், வஞ்சிக் கொடி இடையாகவும், கூந்தற் பனையின் மடல் தலைமயிராகவும், தாமரை மலர் முகமாகவும், அமைய, மங்கைப் பருவம் நிரம்பிச் சிறந்து, நெய்தல் நிலத்தைச் சேர்ந்த சோலைகளில் சென்று, பொருநை நதிப் பெண் தங்குகின்றாள்!

''கல்லெனக் கரைந்து வீழும்
கடும்புனற் குழவி, கானத்து
ஒல்லெனத் தவழ்ந்து, தீம்பால்
உண்டொரீஇத், திண்தோள் மள்ளர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத்
தீங்குரல் செவிவாய்த் தேக்கி,
மெல்லெனக் காலிற் போகிப்
பணைதோறும் விளையாட் டெய்தும்

''அரம்பை மென் குறங்கா, மாவின்
அவிர்தளிர் நிறமாத், தெங்கின்
குரும்பைவெம் முலையா, வஞ்சிக்
கொடிஇறும் நுகப்பாக், கூந்தல்
சுரும்பவிழ் குழலாக், கஞ்சம்
சுடர்மதி முகமாக் கொண்டு,
நிரம்பிநீள் கைகை வேலி
நெய்தல்சூழ் காவில் வைகும்!''

## (6) கடலிற் கலத்தல் :

இங்ஙனமே, பொருநையாறு கடலில் சென்று கலக்கின்றது என்னும் சுருங்கிய கருத்தினை, மிகவும் சுவை பொருந்தும்படி பரஞ்சோதியார் பாடியருள்கின்றார் :

பன்மலர் மாலை வேய்ந்து,
பால்நுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைத் தோய்ந்த சாந்தம்
மான்மதச் சேறு பூசிப்,
பொன்மணி ஆரம் தாங்கிப்
பொருநையாம் கன்னி, முந்நீர்த்
தன்மகிழ் கிழவன் ஆகம்
தழீஇக்கொடு கலந்த தன்றே.

கணவனை மணந்து புணரும் கன்னிப் பெண்கள், அழகுக்காக மலர் மாலைகள் சூடுவர்; நாணத்தால் முகம் மறையத் தலையிற்போர்வைபோர்ப்பர்; சந்தனம் களபம் முதலிய நறுமணப் பொருள்களை உடலிற் பூசுவர்; பொன்னும் மணியும் முதலியவற்றால் இயன்ற பல வகை விலையுயர்ந்த அணி வகைகளைப் பூண்டு கொள்வர். இம் முறையே, பொருநை ஆறாகிய கன்னிப் பெண்ணும், மாலை வேய்ந்து, நுரை ஆகிய போர்வை போர்த்துக் கொண்டு, சந்தனம் முதலியன பூசிப், பொன்மணி ஆரம் தாங்கிச் சென்று, கடலாகிய தன் கணவனின் மார்பினைத் தழுவிக் கலந்து இன்புற்றது எனப் பரஞ்சோதியார் கூறும் திறம் எத்துணை அழகியதாக உள்ளது!

## (7) சிவபிரான் வழிபாடு :

இங்ஙனம் பொருநை நதியானது வெள்ள மிட்டுப் பெருகி, தனது இரு கரைகளிலும் விளங்கும் சிவாலயங்களை நெருங்கி, முல்லை நிலத்தினின்று தான் கொணர்ந்த பால் தயிர் நெய் கோமயம் கோசலம் தேன் ஆகியவற்றை, அலைகளாகிய கைகளால் முகந்து வீசியும், சந்தனத்தை அப்பியும், மணமிக்க மலர்களைத் தூவியும் செல்லுகின்றது. இக்காட்சி சிவபிரானை வழிபடுகின்ற சிவனடியார்களின் செயலை ஒத்துள்ளது.

''வல்லைதாய் இருபால் வைகும்
சிவாலய மருங்கில் ஈண்டி,
முல்லை ஆனைந்தும் தேனும்
திரைக்கையால் முகந்து வீசி,
நல்ல மான்மதம் சாந்து அப்பி,
நறுவிரை மலர்தூய், நீத்தம்
செல்லலாற் பூசைத் தொண்டின்
செயல்வினை மாக்கள் போலும்!''

### (8) செவிலித் தாயும் மகளும் :

பொருநை நதி பாய்ந்து, மருத நிலத்தினைச் செழிப்புடையதாக வளர்க்கின்றது. அம்முறையில் பொருநையாறு செவிலித்தாயாகவும், மருத நிலம் அவளால் வளர்க்கப்படும் அழகிய கன்னிப் பெண்ணாகவும் அமைகின்றது. பெண்ணுக்குத் தாய் பல அணிகலன்களைப் பூட்டி, நறுமணப் பொருள்களைப் பூசி, சுவை மிக்க உணவுகளை உண்பித்து, அன்புடன் வளர்ப்பாள். அது போலவே, பொருநையாறும் மலைகளிலிருந்து மணி, பொன், வைரம், குழை, அகில், சந்தனம் ஆகியவற்றை அடித்துக் கொணர்ந்தும், பலவகை உணவுப் பொருள்களை விளைவித்தும், மருத நிலத்தினை வளம் படுத்து கின்றது.

''வரைபடு மணியும் பொன்னும்
வைரமும் குழையும் பூட்டி,
அரைபடும் அகிலும் சாந்தும்,
அப்பி, இன்னமுதம் ஊட்டிக்,
கரைபடு மருதம் என்னும்
கன்னியைப் பருவம் நோக்கித்,
திரைபடு பொருநை நீத்தம்
செவிலிபோல் வளர்க்கும் மாதோ!''

### (9) கலக்கமும் தெளிவும் :

இவ்வாறு பெருகி ஓடும் பொருநை நதியானது, முதலில் மிகவும் கலங்கலாக இருந்தது; பின்னர் படிப்படியே கலங்கலின்றித் தெளிவு அடைந்தது. முதலில் கலங்கி இருந்த தன்மை, வேதாகமங்க ளெல்லாம் சிவபிரானே முழு முதல்வன், திருநீறு சிவமணி திருவைந்தெழுத்து என்பனவே வீடு பேறு அடைவதற்குரிய சாதனங்கள் என்று முழங்குவதை ஓதி உணர்ந்தும், அவற்றில் தெளிவு பெருதவர்களின் அறிவைப் போல இருந்தது. பின்னர் அதுவே கலங்கல் இன்றித் தெளிவடைந்தமை, வேதாகமங்களை ஓதி வீடு பேற்றுக்குரிய மெய்யுணர்வைப் பெற்ற ஞானிகளின் தெளிந்த உள்ளம் போலத் திகழ்ந்து சிறந்தது.

''மறைமுதற் கலைகள் எல்லாம்
மணிமிடற் றவனே, எங்கும்
நிறைபரம் என்றும், பூதி
சாதன நெறி வீடு என்றும்,
அறைகுவது அறிந்தும் தேறா
அறிவுஎனக் கலங்கி, அந்த
முறையின் வீடு உணர்ந்தார் போலத்
தெளிந்தது மூரி வெள்ளம்!''

### (10) யோகியர் கைப்படும் பொருள் :

கடலின் உவர்ப்பு நீரை உண்டு, அவ்வுவர்ப்பை நீக்கித் தூய்மை செய்து, மேகங்கள் பொழிந்த மழையானது, பொருநை நதியாகப் பெருகி, யாவரும் பருகி மகிழும் அமுதமாகப் பயன்பட்டது. எதுபோல எனில், இழிந்த மாந்தரின் கைப்பொருளும், சிவஞானியர்களின் கையிற் சென்ருல் குற்றம் நீங்கித் தூய்மை அடைந்து, பெரும் பயனை விளைவிப்பது போல!

''இழிந்த மாந்தர்கைப் பொருள்களும்
இகபரத்து ஆசை
கழிந்த யோகியர் கைப்படில்,
தூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறு போல், உவரியுண்டு
உவர்கெடுத்து எழிலி
பொழிந்த நீர் அமுது ஆயின,
புவிக்கும் வானவர்க்கும்!''

### (11) அம்பிகையின் செயல் :

இவ்வாறு கடல் நீர் ஒன்றே, மேகமாக மாறி மழையாகப் பொழிந்து, பொருநை நதியாகப் பெருகிப் பல சிறிய ஆறு கால்வாய் குளம் கிணறு குட்டை அகழி கிடங்கு என வேறு வேறு பெயர் பெற்றுப் பயிர்களை எல்லாம் வளர்க்கின்றது. அதன் செயல் எது போல உள்ளது எனில், ஈடிலாதவளாகிய அம்பிகை ஒருத்தியே பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி எனப் பல நிலைகளில் விளங்கி, ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களை இயற்றி உயிர்களை எல்லாம் காப்பதைப் போல உள்ளது.

''ஈறு இலாதவள் ஒருத்தியே,
ஐந்தொழில் இயற்ற
வேறு வேறு பேர் பெற்றென,
வேலைநீர் ஒன்றே
ஆறுகால்குளம் கூவல்
குண்டகழ் கிடங்கு எனப்பேர்
மாறி, ஈறில் வான் பயிர் எலாம்
வளர்ப்பது மாதோ!''

### (12) மரங்கள் மலர்தல் :

இளவேனிற் காலத்தின் இயல்புகளைப்பரஞ்சோதியார் பாடுவதற்குரிய ஓர் இடம் நேர்கின்றது. அங்கே தமது புலமை நலம் முற்றும் பொலிந்து திகழும்படி, பரஞ்சோதியார் பல பாடல்களால் இளவேனிற்கால நிகழ்ச்சிகளை இனிது பாடுகின்ருர்; இளவேனிற் காலத்தில் மாமரம் தளிர்க்கும்; பலாசம், காஞ்சி, மரவம், காயா, ஞாழல், புன்னை முதலிய மரங்கள் மலரும். இவ்வியற்கைத் திறனைப் பரஞ்சோதி முனிவர் பின்வரும் கருத்தமைய எழிலுறப் பாடுகின்ருர்.

தேவருலகிலுள்ள கற்பக மரத்தினையே சீறிச் சிவந்தெழுதல் போல, இனிய தேமா மரங்கள் சிவந்த தளிர்களை ஈன்று வானளாவ ஓங்கி உயர்ந்தன. பொற்காசுகள் கொண்டு பதித்துச் செய்த குண்டலத்தை அணிந்த மகளிரைப் போல அழகாகச் செருந்தி மரங்கள் பூத்துப் பொலிந்தன. பலாச (முள்முருக்க) மரங்கள் சூரியனைப் போலச் செந்நிறமாகவும், காஞ்சி மரங்கள் இந்திரனைப் போலக் கருமைநிறமாகவும், மரவ மரங்கள் சந்திரனைப் போல வெண்ணிறமாகவும், காயாஞ் செடிகள் திருமாலைப் போல நீல நிறமாகவும் பூக்களை மலர்ந்தன. வையையாற்றங் கரை ஆகிய பெண், மணல் மேடாகிய தனது அல்குலில், மேகலையினை அணிந்தது போல், ஞாழல் மரங்கள் மலர்ந்து மகரந்

தத்தைச் சிந்தின. புன்னை மரங்கள் மரகதம் போலத் தழைத்து, வெண் முத்துப்போல அரும்பி, பொன் போல மலர்ந்து, பவளக்காடு போல மகரந்தம் தூவின.

''அண்டர்வான் தருமேற் சிறிச்
சிவந்தெழுந் தாங்குத், தேமாத்
தண்டளிர் ஈன்று வானந்
தைவர, நிவந்த; காசு
கொண்டிடை அழுத்திச் செய்த
குழையணி மகளிர் போல,
வண்டிறை கொள்ளப் பூத்து
மலர்ந்தன செருந்தி யெல்லாம்.'' (1)

''செங்கதிர் மேனி யான்போல்
அவிழ்ந்தன செழும் பலாசம்;
மங்குலூர் செல்வன் போல
மலர்ந்தன காஞ்சி; திங்கட்
புங்கவன் போலப் பூத்த
பூஞ்சினை மரவம்; செங்கை
அங்கதிர் ஆழி யான்போல்
அலர்ந்தன விரிந்த காயா. (2)

தரைகிழித் தெழுநீர் வைகைத்
தடங்கரை எக்கர் அல்குல்,
அரவமே கலைசூழ்ந்த தென்ன,
அலர்ந்துதா துகுப்ப ஞாழல்;
மரகதம் தழைந்து, வெண்முத்து
அரும்பிப், பொன் மலர்ந்து, வாங்கும்
திரைகடற் பவளக் காடு
செய்வன, கன்னிப் புன்னை.'' (3)

## (13) உலகியல் உவமைகள் :

இளவேனிற் காலம் தோன்றுவதற்கு முன்னே மரங்கள் இலையை உதிர்க்கும். இலையுதிர்ந்த பின்னரே மரங்கள் புதிதாகத் தளிர் விடும்; பசுமை நிறம் அடைந்து தழைக்கும் ; தேன் மிக்க மலர்களைப் பூக்கும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பரஞ்சோதியார் உலகியல் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உவமை காட்டிச் சுவை துளும்பப் பாடுகின்றார் :

கணவர்பால் ஊடல் கொண்ட பெண்கள், தம் அணிகலன்களை யெல்லாம் சினந்து கழற்றி எறிவர்; அது போல மரங்கள் இலை யுதிர்க்கின்றன. இலையுதிர்ந்த மரங்கள் பின்னர்க் குழைவரத் தழைக்கும்; அச்செயல், மகளிர் தமது கணவனை ஊடல் நீங்கிய பின்னர்க் குழைந்து புல்லி உவகையால் உடல் பூரிப்பது போன்றுள்ளது. கணவனைப் பிரிந்த பெண்கள் கண்ணீர் பெருக உடலிற் பசலையுற்று நிற்பர்; அதுபோல் மரங்கள் கள்நீர் பெருகப் பசுமை நிறம் எய்தித் திகழ்கின்றன. களவொழுக்கத்திற் காதல் கைம்மிக்குத் திளைக்கும் மகளிர் ஊரவரால் அலர் தூற்றப்படுவர்; அதுபோல மரங்கள் யாவும் இளவேனிலில் அலர் பூத்து நெருங்கி அடர்ந்துள்ளன.

''ஊடினர் போல வெம்பி
இலையுதிர்ந்து; உயிர்அன் னாரைக்
கூடினர் போல எங்கும்
குழைவரத் தழைந்து; நீங்கி
வாடினர் போலக் கண்ணீர்
வாரமெய் பசந்து; மையல்
நீடினர் அலர்போற் பூத்து,
நெருங்கின மரங்கள் எல்லாம்.''

## (14) கற்புடை மகளிர் :

கோடை வெப்பத்தால் மரங்கள் இலையுதிர்ந்து வாடுகின்றன. பின்னர்த் தழைக்கின்றன. அச்சமயங்களில் மரங்களைச் சுற்றிப் படர்ந்துள்ள கொடிகளும் முறையே வாடியும் தழைத்தும் நிற்கின்றன. இக்காட்சி, கணவன் துன்புறுங்கால் தாமும் துன்புற்று, கணவன் மகிழுங்கால் தாமும் மகிழ்ந்து நிற்கின்ற கற்புடைய மகளிரின் செயலைப் போன்றுள்ளது.

விழைதரு காத லார்தாம்
மெலிவுற மெலிந்து, நெஞ்சம்
குழைவுறக் குழைந்து நிற்கும்
கோதிலாக் கற்பி னார்போல்,
மழையறும் கோடை தீப்ப
மரந்தலை வாட, வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற;
தழீஇயபைங் கொடிகள் எல்லாம்.

## (15) நடனக் காட்சி :

இள வேனிலில் தென்றல் வீசுகின்றது. மலர்களில் தேன் நிறைந்து சிதறுகின்றது. தும்பிகள் தேனையுண்டு இசை முரல்கின்றன. தென்றல் காற்று வீசுதலால் பூங்கொம்புகள் அசைந்து ஆடுகின்றன. இக்காட்சியானது, நடன ஆசிரியர் ஆட்டுவிக்க, முகத்தினின்று வியர்வைத் துளிகள் சிந்துமாறு, இசைபாடிக் கொண்டு, அழகிய பெண்கள் அசைந்தாடும் நடனக் காட்சியை நினைவூட்டுகின்றது.

சேட்டிகைத் தென்கால் தள்ளத்,
தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா
நின்று, பூங் கொம்பர் ஆடல்,
நாட்டியப் புலவன் ஆட்ட,
நகைமுகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற
பாவைமார் போன்ற அன்றே.

## (16) நல்லோர் வள்ளன்மை :

செவ்வந்தி மலர்களும், மகிழம் பூக்களும் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. ஆயினும், அவற்றில் இருக்கும் சிறிதளவு தேனை விரும்பி வந்து, வண்டுகள் உண்டு களிக்கின்றன. அக்காட்சி, நல்லவர் செல்வம் குறைந்து வறுமை அடைந்தாலும், தமது வள்ளன்மையிற் குறைய மாட்டார்கள் என்னும் உண்மையைப் புலப்படுத்துகின்றது.

''மலர்ந்தசெவ் வந்திப் போதும்
வகுளமும் உதிர்ந்து, வாடி
உலர்ந்து மொய்த் தளிதேன் நக்கக்
கிடப்பன; உள்ளம் மிக்க
குலந்தரு நல்லோர் செல்வம்
குன்றினும், தம்பால் இல்லென்று
அலந்தவர்க் குயிரை மாறி
யாயினும், கொடுப்பர் அன்றோ?''

## (17) கலைகள் தேரும் அறிவன் :

சோலைகளில் தென்றல் வீசுகின்றது. அஃது அங்குள்ள பொய்கைகளில் மலர்ந்து திகழும் தாமரையைத் துழாவுகின்றது. இருவாட்சி முல்லை மல்லிகை முதலிய பூப்பந்தர்களிற் சென்று தாவி, அம்மலர்களின் மணத்தினுற் குளிர்ச்சியுற்று, மெல்லென்று இனிமையாக

வீசி இயங்குகின்றது தென்றல்! தென்றலின் இந்தச் செய்கையானது, எங்கெங்கே அறிவு நூற் கலைகள் வளர்கின்றனவோ, அங்கங்கெல்லாம் சென்று அவற்றை ஆராய்ந்து கற்று மகிழும் ஒரு சிறந்த மாணவனின் செயல்போலக் காணப்படுகின்றது.

''பொங்கரின் நுழைந்து, வாவி
புகுந்து, பங் கயம்து ழாவிப்,
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்,
கொங்கலர் மணம்கூட் டுண்டு,
குளிர்ந்துமெல் லென்று, தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல், இயங்கும் அன்றே''.

## (18) வேனிற் கோமகன் :

இத்தகைய இயற்கை நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறுதற்குக் காரணமாகத் திகழும் இளவேனிற் காலத்தின் சிறப்பை என்னென்பது? அதனை ஓர் அரசனுக்கு ஒப்பிட்டுச் சிறப்பித்து உரைத்தலே பொருத்தமாகும். இளவேனிற் காலமாகிய அரசன் முடிசூடி வீற்றிருக்கும் திருவோலக்க மண்டபம், சோலைகளே எனலாம். அரசனின் திருவோலக்க மண்டபத்தில் ஏவலர் சிலர் களாஞ்சி ஏந்தி நிற்பர். முழவம் முதலிய இசைக் கருவிகள் ஒலிக்கும். பெண்கள் மங்கலப் பாடல்கள் பாடி வாழ்த்தெடுப்பர். வீரர்கள் வாளேந்தி நின்று காவல் புரிவர். அங்ஙனமே, இளவேனில் ஆகிய அரசனுக்குச் சோலையாகிய ஓலக்க மண்டபத்தில், தாமரைகள் களாஞ்சி தாங்குகின்றன. குயில்கள் முழவம் முதலியன போல ஒலிக்கின்றன. கிளிகள் மங்கலம் இயம்புகின்றன. தும்பிகள் இசை பாடுகின்றன. தாழை மலர்கள் மெய்காப்பாளர்களைப் போல வாளேந்தி நிற்கின்றன.

''தாமரை களாஞ்சி தாங்கத்,
தண்குயில் முழவம் ஏங்க,
மாமருது அமருங் கிள்ளை
மங்கலம் இயம்பத், தும்பி
காமரம் இசைப்ப, முள்வாய்க்
கைதைவாள் எடுப்ப, வேனிற்
கோமகன் மகுடம் சூடி,
இருப்பதக் குளிர்ப்பூஞ் சோலை.''

## கவிதை யின்பம் :

உலக இயற்கைப் பொருள்களிற் காணப்படும் பல திற அமைதியின்ப அழகினை ஆழ்ந்து ஆராய்ந்துணரும் சான்றோர்களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண் பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும், சமயத் துறையிலும் தத்துவ நெறியிலும் உயர்ந்து உயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர்களுக்கும், ஒழுக்கத் தூய்மையிலும் இறையருள் உணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் அருளாளர்களுக்கும், நிலைத்த அழகுடையதாய், நெஞ்சம் கவரும் சிறப்பும் பயனும் வாய்ந்து, மிகவும் பேரின்பத்தினை விளைவிக்கும் செயல், நலம் நிறைந்த சிறந்த கவிதைகளைப் படித்து மகிழ்தலை விட இன்பம் தருவது வேறு பிறிதொன்றில்லை. (மறைமலையடிகள்)

## முடிவுரை :

அம்முறையில் ஆராய்ந்தால், பரஞ்சோதியாரின் பாடற்றிறன் நம்மனோர்க்குப் பேரின்பம் பயக்க வல்ல தென்பதில் ஐயமில்லை. அவரனைய சிறந்த பெருங் கவிஞர்களின் பாடல்களையெல்லாம் பயின்று ஓதி, நாம் அனைவரும் நலம் பெற்றுய்ய முயலுவோமாக!


ஓம்

# அருள்திரு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

செங்குந்த கோட்டம், சைதாப்பேட்டை, சென்னை-600015.

இத்திருக்கோயிலின் பிரதான வடக்கு வாயிலில் தற்போது புதியதாக எழில் மிக்க இராச கோபுரம் அமைக்கப்பட்டும், பழைய விமானங்கள் புதுப்பிக்கப்பட்டும், சுமார் இரண்டு இலட்ச ரூபாய் அளவில், திருப்பணி வேலைகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. மேற்படி வேலைகள் சீரிய முறையில் முடிக்கப்பட்டு இராட்சச ஆண்டு, ஆனி மாதம், 11-ஆம் தேதி (25—6—75) அன்று, புதன் கிழமை காலை 9—10½ மணியளவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெற இருக்கிறது.

அன்பர்கள் அனைவரும், இந்தப் புனிதத் தெய்வத் திருப்பணியில் பங்கு கொண்டு, தங்கள் தங்களால் இயன்ற வகைகளில் எல்லாம், பெரிய அளவில் உதவிகள் பல புரிந்து, திருக்குடமுழுக்கு விழா, சிறப்புற நிறைவு பெறச் செய்து, திருமுருகப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு, பெரிதும் அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

திருப்பணிக் குழுவினர்

# அருள்திரு

# பெரியமாரியம்மன் திருக்கோயில்

## திருவில்லிபுத்தூர்

### இராமநாதபுரம் வட்டம்

எந்நாட்டவர்க்கும் இறைவனை சிவபெருமான், அருள்திரு வைத்தியநாதன் என்னும் திருப்பெயருடன், போற்றற்கரிய பல திருவிளையாடல்களைப் புரிந்து கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளதும், சூடிக் கொடுத்த நாச்சியார் திருஅவதாரம் செய்ததுமான புண்ணியத் தலமாகிய திருவில்லிபுத்தூர் நகரின் மையத்தில், பேருந்து நிலையத்திற்கு அருகில், மதுரை —தென்காசி செல்லும் பெருவழியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ஆலயம், சுற்றிலும் தென்னை மரங்களும், நிழல்தரும் மரங்களும், பசுமை மிக்க செடிகளும் கொடிகளும் மண்டிக் கிடக்கும் ஓர் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது.

அருள்திரு பெரிய மாரியம்மன் வேண்டுவோருக்கு வேண்டுவன இனிது நல்கி, அருள் மாரி பொழிந்து, கருணையாட்சி புரிந்து வருவதால், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்பிறை போன்று வளர்ந்தோங்கி வருகின்றது. நவ ராத்திரி, பங்குனி பூக்குழி போன்ற திருவிழாக்கள், குறிப்பிடத் தக்கவையாயினும், பூக்குழித் திருவிழாவே மிகவும் தலையாயது. தமிழகம் முழுவதும் ஆங்காங்கு, பூ (தீ) மிதித்தல் திருவிழா நடைபெற்றுவரினும், இங்கு நடைபெறுகின்ற பூ (தீ)க்குழித் திருவிழா முதன்மையானது எனலாம். அத்திருவிழாவில் இளையர் முதல் முதியோர் வரை வருடந் தோறும் நோன்பு நோற்று, ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ள பூ (தீ)க்குழியில் இறங்கி அனல் கக்கும் நெருப்பு மீது நடந்து, அன்னையின் அருளைப் பெறும் காட்சியின் மகிமையை என்னவென்று சொல்வது! கடந்த 1380, 1381, 1382, 1383, 1384-ஆம் பசலி வருடங்களில் முறையே 2,711; 3,148; 3,419; 3,542; 3,597 அன்பர்கள் தீக்குழி இறங்கியுள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, அதைக் காணக் கூடுகின்ற கூட்டத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இத்திருக்கோயிலின் முகப்பு மண்டபத்தில் சுமார் 7 அடி உயரத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள 'ஆவுடை பார்வதி' என்றழைக்கப்படும் பாம்புப் புற்று மிகவும் காணத் தக்கது.

மேலும் பல அற்புதங்கள் நிகழ்ந்து வரும் இத்திருக்கோயிலில், பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில், திருப்பணி செய்து, குடமுழுக்கு விழாவும் நடத்த வேண்டுமென்று கருதி, திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. அப்புனிதப் பணி ஈடேற மெய்யன்பர்களின் உதவி மிகவும் இன்றியமையாதது. ஆலயத்தின் நிதியி லிருந்து வீடுகள் கட்டி, வாடகைக்குக் கொடுப்பதன் மூலம், சமுதாயத்திற்கும் முடிந்த அளவிற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தைச் செயல் வடிவாக்க நிர்வாகம் முனைந்துள்ளது.

ஆகவே, மெய்யன்பர்கள், குறிப்பாக திருவில்லிபுத்தூருக்குச் சுற்றுலா வரும் அன்பர்கள், அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தந்து, அம்மனின் பேரருளுக்கு இலக்காகி ஈடில்லா இன்பம் பெற்றுச் செல்லுமாறு விரும்பி வேண்டி அன்புடன் அனைவரையும் வரவேற்கின்றோம்.

நடைபெற்று வரும் திருப்பணிக்கு வாரி வழங்குங்கள்.

திரு. கே.எஸ். என். சங்கரநாராயணன்தரகனர், **எம். இராமச்சந்திரன்,** பி. ஏ.,
திரு. கே. குருநாதன் பண்டாரம்.
*அறங்காவலர்கள்.* *செயல் அலுவலர்*

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



### தட்சன் யாகம் புரிய சாலை யமைத்தது :

பிரமதேவருடைய யாகம் பாதியில் தடை பட்டபின், நந்தியம் பெருமானுடைய வெஞ் சாபத்துக்கு அஞ்சி, தேவர்களும் முனிவர்களும், அந்தணர்களும் யாகம் புரியாதிருந்தார்கள். தட்சன் பண்டைத் தீவினைப் பயனால் ஒரு நாள் தன் முன் இருந்த தேவர்களைப் பார்த்து ''தேவர்களே! நீங்கள் பல காலமாக யாகம் செய்யாது இருப்பதன் காரணம் யாது?'' என்று கேட்டான்.

தேவர்கள் ''பிரம குமாரரே! முன்னாள் பிரமதேவர் செய்த வேள்வியில்சிவமூர்த்திக்குத் தரும் அவிப் பாகத்தைத் தடுத்தீர். அதனாலும், நந்தி தேவருடைய சாப மொழியாலும் அஞ்சி நாங்கள் வேள்வி செய்வதில்லை'' என்றார்கள்.

இதனைக் கேட்ட தட்சன் நகைத்து ''நான் ஒரு பெரிய யாகம் செய்வேன். அது நன்கு முடியுமானால் பின்னர் நீங்கள் அதைப் பின் பற்றிச் செய்யுங்கள்'' என்று கூறினான். விச்சுவ கன்மனை யழைத்து ஒரு சிறந்த யாகசாலை அமைக்குமாறு கட்டளையிட்டான்.

கனகலம் என்ற இடத்தில் கங்கைக் கரையில் ஆயிரம் யோசனை பரப்புள்ளதாக ஒரு அழகிய யாக சாலை அமைத்தான். நாலு திசைகளில் நான்கு கோபுரங்களும், உணவுப் பொருள்கள் வைக்கப் பண்டக சாலைகளும், பெண்கள் இருக்கத் தனியிடங்களும், சமையற் கூடங்களும், உணவருந்தும் மண்டபங்களும், நடுவில் பெரிய அளவில் சதுரம், வட்டம், கோணம் என்ற மூன்று வடிவில் ஓம குண்டங்களும், ஓவியங்களும், மாலும் அயனும் திசைப் பாலகர்களும் இருக்கும் ஆசனங்களும், தட்சன் இருக்கும் ஆசனமும் ஏனையோர் இருக்கும் பீடங்களும் உண்டாக்கினான்.

தட்சன் யாகசாலையின் அழகைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தான். யாகத்துக்கு வேண்டிய சமித்து முதலிய சாதனங்களைக் கொணருமாறு முனிவர்களுக்குக் கட்டளையிட்டான். காமதேனு சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, கற்பகம் இவைகளைப் பார்த்து எல்லாப் பொருள்களையும் படைத்துத் தருமாறு பணித்தான். உணவு படைக்க முப்பதினாயிரம் வேதியரை ஏற்படுத்தினான். தேவர்கள், முனிவர்கள், வேதியர்களை அழைத்து வருமாறு தூதுவரை ஏவினான். தூதர்கள் திருமால், திசைமுகன், இந்திரன், திசைபாலகர்கள், முனிவர்கள், நவகோள்கள், அந்தணர்கள் முதலிய அனைவர்களையும் அழைக்க, எல்லோரும் தட்சனுடைய ஆணைக்கு அஞ்சி அலைகடல் போல் வந்து கூடினார்கள். இலட்சுமி, சரசுவதி, இந்திராணி, அரம்பையர்கள் ஆகிய பெண்மணிகளும், ஆதித்தர்கள், உருத்திரர்கள், வசுக்கள், மருத்தர் முதலியோர்களும் கனகலத்தில் குழுமினார்கள்.

தட்சன் எல்லோரையும் வரவேற்புச் செய்தான். பிரமதேவரையும் நாராயணரையும் சிறந்த பீடத்தில் இருத்தினான். இந்திரன் முதலிய இமையவர்கள் வரிசையாக அமர்ந்தார்கள். தட்சனுடைய வேள்விக்குச் சென்று நல் லுணவு உண்டு வருவோம் என்று பூவுலகில் உள்ள வேதியர்கள் அங்குச் சென்று மொய்த்திருந்தார்கள்.

தட்சன் தன் தூதரைப் பார்த்து, ''நீங்கள் அழைத்தவர்களில் மறுத்தவர் உளரோ?'' என்று கேட்டான்.

### யாகத்துக்கு வர மறுத்தவர்கள் :

''அகத்தியர், சனகர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாசர், பராசரர் என்பவர்கள் உமது யாகத்துக்கு வர மறுத்தார்கள்'' என்று தூதுவர் கூறினார்கள். தட்சன் கேட்டு, ''இவர்கள் சிவனுடைய பக்தர்கள் போலும். அவர்கள் வராமையால் நமக்கு என்ன குறைவு'' என்று ஏளனமாகச் சிரித்தான்.

### ததீசி முனிவரின் வருகை :

ததீசி முனிவர் மிகவும் சிறந்தவர். திருமாலையும் வென்றவர். வச்சிர யாக்கையுடையவர்.

*கனகலம் என்ற இடம் ஹரித்துவாரத்துக்கு அருகில் இருக்கிறது.

ததீசி முனிவரும் குபன் என்ற அரசனும் நண்பர்கள். ஒரு நாள் ததீசி அந்தணரே சிறந்தவர் என்றார். குபன் அரசரே சிறந்தவர் என்றான். இந்த வாக்குவாதத்தால் ததீசி சினங் கொண்டு அரசனை அடித்தார். குபனுங் கோபித்து வச்சிரப் படையால் ததீசியின் உடலைப் பிளந்தான். சுக்கிரரைத் தியானித்து ததீசி முனிவர் நிலத்தில் வீழ்ந்தார். சுக்கிரர் அங்கு வந்து பிளந்த உடலைப் பொருத்தி எழுப்பினர். சுக்கிராச்சாரியார் காஞ்சிபுரத்தில் இட்டசித்தி தீர்த்தத்தில் முழுகி இட்டசித்தி ஈசரை வழிபடுமாறு ததீசியிடம் கூறினர். அதுபடி ததீசி முனிவர் வழிபட்டு வச்சிர யாக்கை பெற்று வந்தார். குபனைத் தன் இடக் காலால் உதைத்தார். குபனுக்காகத் திருமால் வந்து ததீசியுடன் போர் புரிந்தார். திருமால் தோல்வியுற்றார். ததீசி முனிவர் வெற்றி பெற்றார். இத்தகைய வித்தகராகிய ததீசி முனிவர் தமது சீடர்கள் புடைசூழத் தட்சனுடைய யாக சாலைக்கு வந்தார். தட்சன் அவரை அன்புடன் வரவேற்று அமர்த்தினன். இவர் சிவனிடம் உள்ள அன்பை விடுத்து நமது வேள்வியைக் காணவந்தார் போலும் என்று தட்சன் மனதுக்குள் நினைத்தான்.

ததீசி முனிவர் ''தட்சனே! என்னை அழைத்த காரணம் யாது?'' என்று வினவினர். தட்சன் கூறுகின்றான்.

''முனிவரரே! சிவன் என் புதல்வியை மணந்து கொண்டு மறைந்து போயினன். பின்னர் எனக்குத் தெரியாமல் என் மகளை விடையில் மீது வைத்துக் கொண்டு சென்றான். மாயை செய்து என் மகளை மயக்கி வசஞ் செய்தான். நான் அவர்களைக் காணும் பொருட்டுக் கயிலை சென்றேன். அந்த நக்கன் தன் காவல் பூதர்களைக் கொண்டு என்னை உள் புகுதாவண்ணம் தடுத்தனன். அதனல் நான் சிவனை வெறுத்து, என் தந்தை செய்த வேள்வியில் சிவனுக்கு அவியைத் தரக் கூடாது என்று தடுத்தேன். மத்தளம் வாசிக்கும் நந்தி அங்கு வந்து சாபங் கொடுத்தான். அதனல் என் பிதாவின் யாகம் தடைப்பட்டது. நான் இப்போது சிவனை மறுத்து வேள்வி செய்கின்றேன். இந்த வேள்வியைக் காண உம்மை அழைத்தேன்'' என்றான்.

**ததீசி உரை :**

தட்சனுடைய சொல்லைக் கேட்ட ததீசி முனிவர் வடவைத் தீயைப்போல்சீற்றமுற்றார். ''தட்சனே! உன் மதிப்பிருந்தவாறு என்னே? ''தட்சனே! உன் மதியிருந்தவாறு என்னே? உன் போக்கு நன்றாக இல்லை. மாலயனதி வானவர்களுக்கும் அகில உலகங்கட்கும் தாதையாகிய சிவபெருமானை விலக்கி நீ வேள்வி செய்கின்றனையோ? பேஷ். உன் திறம் நன்று நன்று. வேள்வியும், வேள்வித் தீயும், வேள்வியின் அவியைப் பெறுவானும் சிவபெருமானே என்று வேதம் விளம்புவதை நீ அறியாயோ?

தேவதேவன்; மாதேவன்; சிறப்புடை
ஈசன் எங்கோன்
மூவரின் முதல்வன்; ஏகன்; முடிவிற்கு முடி
வாய் நின்றோன் ;
ஆவியுள் ஆவியானோன்; அந்தணன்; ஆதி
என்றே
ஏவரை இசைத்த அம்மா எல்லையில் மறை
கள் எல்லாம்.

பேதையே! நீ மதி மயக்கமடைந்துள்ளாய் ; சிவமே பரம் என்று விளம்பும் வேத வாதியை மறுத்து நீ வேள்வி செய்யத் தொடங்கியுள்ளாய். இவ்வேள்வி நிறைவு பெறாது. இது சிவபிரான் ஆணை. இம்மகத்தில் சேர்ந்தோர் அனைவரும் மாய்ந்து ஒழிவார்கள்'' என்றார்.

தட்சன் ''நான் சிவனுக்குரிய அவிப் பாகத்தை மாதவனுக்குத் தருவேன்''. ததீசியே! உன்னுடைய உருத்திரனையொப்பார் பதினொரு உருத்திரர்களும், திசைப் பாலகருள் சிறந்த ஈசானரும் இங்கே இருக்கின்றார்கள். அவர்கட்கு முதல் அவியைத் தருவேன்'' என்றான்.

ததீசி முனிவர் ''தட்சனே! உருத்திரன் என்று பேர் பெற்றதனல் இவர்களை நீ விடத்துக்கு நிகராக நினைத்தனை போலும். இவர்கள் பலகாலம் தவஞ் செய்து சிவனருளால் சிவ பெருமானுடைய உருவமும் அவருடைய திருப் பெயரும் பெற்றவர்கள்.''

இன்னலங் கடவுள் பட்டோர் யாரையும் எடுக்கும்
நீரால்
உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் எனும்பேர்
பெற்றான்
அன்னவன் தரவந்தோர்க்கும் அடியடைந்தோர்க்
கும் அன்னான்
தன்னுரு வெய்தி னோர்கட்கும் சார்ந்ததால் அவன்
தனிப்பேர்.

''அக்கினி தேவனுக்கும் உருத்திரன் என்ற பேருண்டு. ஒரு சமயம் தேவர்கள் தங்கள் நிதியை அக்கினியிடம் வைத்து விட்டு அசுரர்கள்மீது போருக்குச் சென்றார்கள். போர் முடிந்த பின் தேவர்களிடம் நிதியைத் தராது அக்கினி ஓடினன். தேவர்கள் தொடர்ந்து அவனைச் சூழ்ந்தார்கள். அக்கினி ரோதனம் (அழுது) செய்தான். அதனல் அவன் அப்பேர் பெற்றான். இந்தப் பேர் ஒற்றுமையால் மயங்கக் கூடாது. தட்சனே! சிவபெருமான் ஒருவரே பதி. ஏனையோர் அனைவரும் பசுக்கள். உனக்குப் பிரமதேவர் சிவனே பரம் என உபதேசிக்க, தவஞ் செய்து சிவனருளால் இச்செல்வமும் ஆட்சியும் பெற்றனை. அதை மறந்து அவச் செயல் புரிகின்றாய். இங்குக் கூடியுள்ளார் அனைவரும் மாயை வசப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தனை பேர்களும் உய்ய வேண்டும் என்று நீ நினைப்பாயாகில் சிவ பெருமானுக்கு அவிர்ப்பாகம் வழங்கி வேள்வியைச் செய்க. இல்லையேல் உனக்கு முடிவு உண்டாகும். இது சரதம்'' என்று ததீசி முனிவர் கூறினர்.

**தட்சன் வினவும் ததீசி விடையும் :**

தட்சன் ததீசி முனிவரைப் பார்த்து ''நீர் கூறிய சிவன், பரம் பொருள் என்றால் சுடலையின் எலும்பையும் அணியுமோ? வெந்த சாம்பலைப் பூசுமோ?'' என்று கேட்டான்.

ததீசி முனிவர் புன்னகை புரிந்து, ''மதியிலாதவனே! உன்னுடன் உரையாடுவதும் பிழை. எனினும் இங்குள்ள அனைவரும் கேட்டுத் தெளிந்து உய்யும்பொருட்டு உரைக்கின்றேன்''.

சிவபெருமான் பிரமாவை அதிட்டித்துப் படைக்கின்றார். திருமாலை அதிட்டித்துக் காக்கின்றார். முடிவில் சர்வ சங்காரம்புரிகின்றார். முடிவில் தம் அடியார்களாகிய மாலயனாதி வானவரின் எலும்பை அணிகின்றார். அவர்களின்சிரங்களைத் தொடுத்துத் தரிக்கின்றார். அவர்களுடைய சிகையைப் பூணூலாகப் புனைகின்றார். அவர்கள் உடல் வெந்த சாம்பரையும் அவர்களின் நலம் பொருட்டுப் பூசிக் கொள்கின்றார். இது அப்பெருமானுடைய அளவிலா ஆற்றலையும் அருள் திறத்தையும் அறிவிக்கும்.''

(2) தட்சன் ''நீர் கூறிய சிவன் பன்றிக் கொம்பையும் ஆமை ஓட்டையும் அணிவது சிறப்போ?''

ததீசி : இரணியாட்சன் மிக்க வலியுடன் இப் பூவுலகை நீரில் அழுத்தி உலகுக்கு இடர் புரிந்தான். தேவர்கள் வேண்டத் திருமால் வராக வடிவெடுத்து அவனைக் கொன்று பூமியைப் பந்து போல் நீரில் இருந்து எடுத்து உதவினார். தன் ஆற்றலை மதித்து அந்த வராகம் ஆரவாரித்துக் கடலைக் கலக்கி உலகத்தை நடுங்க வைத்தது. அப்போது சிவமூர்த்தி அதனை அடக்கி அதன் கொம்பைப் பறித்துத் திருமார்பில் அணிந்து கொண்டார். வராகம் அடங்கியது.

பாற்கடல் கடைந்தபோது திருமால்ஆமை வடிவு கொண்டு மந்தரகிரியைத் தாங்கினார். பின்னர்த் தமது ஆற்றலை நினைத்து அகந்தை கொண்டு கடலைக் கலக்கித் துயரம் செய்தது. ஈசன் அங்கு வந்து ஆமையை அடக்கி அதன் ஓட்டைப் பறித்து அணிகலனாக அணிந்து கொண்டார். இதுவே சிவமூர்த்தியின் ஆற்றலையும் அருளையும் தெரிவிக்கும்.

(3) தட்சன் : சிவம்—புலித்தோல் உடுக்குமோ? மழுவையும் மானையும் சிந்துமோ? பிச்சையெடுத்து உழலுமோ? கூத்தாடுமோ? பாம்புகளைப் பூணுமோ? ஆடையின்றி நக்கன் ஆகுமோ?

ததீசி : தாருக வனத்தில் வாழ்ந்த நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள், கன்மமே பயனைத் தரும். பயன் தரக் கர்த்தா வேண்டியதில்லை என்ற பூர்வ மீமாம்சக் கொள்கையுடையவர்களாகிச் சிவத்தைப் புறக்கணித்துத் தவத்தைச் செய்தார்கள்.

அவர்கட்கு அறிவு கொளுத்தும்பொருட்டு, திருமாலை மோகினியாக வருமாறு செய்து சிவபெருமான் திசைகளே ஆடையாகத் திகம்பரனாகி, தாருக வனத்தில் பலியேற்கச் சென்றருளினார். தாருக வனத்து முனிவர்கள் மோகினியின் ஒப்பற்ற அழகைக் கண்டு திடங் குலைந்து மோகினி பின் உழன்றார்கள். அவர்களுடைய மனைவியர்கள் பிட்சாடன மூர்த்தியின் எழிலால் உறுதி குலைந்து மையலைக் கொண்டு அலைந்தார்கள். தாருக வனத்து இருடிகள் இது கண்டு மிகவும் நாணினார்கள். வெகுண்டார்கள். அரனாரை அழிக்க வேண்டி அபிசார ஓமம் செய்து கொடும் புலியை உண்டாக்கிச் சிவபெருமான் மீது ஏவினார்கள். கடுந் தொழிலுடன் வந்த கொடும் புலியை உரித்து அரனார் ஆடையாக உடுத்துக் கொண்டார். சூலத்தை உண்டாக்கி அனுப்பினார்கள். அதனை ஐயன் ஆயுதமாக ஏந்திக் கொண்டார். மழுவையும், மானையும் ஏவினார்கள். அவற்றை இறைவர் செங்கையில் ஏந்திக் கொண்டார். ஓமத் தீயில் பாம்புகளைத் தோற்றுவித்து ஏவினார்கள். பரமன் அப்பாம்புகளை ஆபரணமாக அணிந்து கொண்டார். பூத வேள்விகளை உண்டாக்கி அனுப்பினார்கள். ஈசன் அவைகளைத் தன் பரிவாரங்களாக ஆக்கிக் கொண்டார். வெண்டலையை உண்டாக்கி அனுப்பினார்கள். அது உலகங்கள் செவிடுபடச் சிரித்துச் சென்றது. சிவபெருமான் அதைச் சென்னியில் சூடிக் கொண்டார். மந்திரங்களை ஏவினார்கள். அவைகள் உடுக்கையாகி உருத்துச் சென்றது. அதனை அரனார் அங்கையில் பற்றிக் கொண்டார். முனிவர்கள் பின்னும் முனிந்து முயலகன் என்ற பூதத்தை உற்பத்தி செய்து உய்த்தார்கள். இறைவன் அவனைக் கீழே தள்ளி அவன் முதுகின் மீது திருநடனம் புரிந்தார். கோபம் கொண்டு பல சாபங்களைப் புகன்றார்கள். அவை யாவும் பயனற்றன. பின்னர் அவர்கள் சிவபெருமானுடைய பெருமையை அறிந்து, திருந்தி, தாம் செய்தபிழைகளை நினைந்து வருந்தி, இறைவனைப் பொருந்தி உய்வு பெற்றார்கள்.

(4) தட்சன் : சிவம், பரம் பொருளாயின், யானைத் தோல் போர்க்குமோ?

ததீசி : கயாசுரன் என்ற கொடிய அரக்கன் பிரம தேவரிடம் வரம் பெற்று, தேவர்கட்கும் முனிவர்கட்கும் பெருந்துன்பத்தைச் செய்தான். அமரர்கள் அஞ்சிக் காசிக்குச் சென்று மணிகர்ணிகைத் துறையில் ஈசனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். கயாசுரன் அங்கும் சென்றான். விசுவநாதர் பேரொளி வடிவாகத் தோன்றி அக்கயாசுரனைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார்.

(5) தட்சன் : சிவன் கபாலம் ஏந்துமோ?

ததீசி : திருமாலும் பிரமதேவரும் ஒரு சமயம் பொன்மேரு கிரியின் சிகரத்தில் அமர்ந்திருந்தார்கள். அமரர்களும் முனிவர்களும் அங்குச் சென்று, ''பரம் பொருளாகி நின்ற தலைவர் யார்?'' என்று கேட்டார்கள். ''நானே பரம்பொருள்'' என்று பிரமனும் திருமாலும் கூறித் தருக்கமிட்டு மலைந்தார்கள். வேதமும் பிரணவ மந்திரமும் உருவந் தாங்கி வந்து ''சிவமே பரம்பொருள்'' என்று கூறியும் அவர்கள் அமைதியடையாது போர் புரிந்தார்கள்.

இடையே ஒரு பெருஞ்சோதி தோன்றியது. திருமால் உள்ளந் தெளிந்து அச்சோதியைச் சோதிக்காது சிவமென உணர்ந்து பணிந்து சென்ருர்.

பிரமன் மாயையால் மருண்டு உச்சியில் உள்ள சென்னியால் அச்சோதியைஇகழ்ந்தான். அப்போது சிவபெருமான் தமது திருவுள்ளத்தி லிருந்து பயிரவக் கடவுளைத் தோற்றுவித்தார்.

நீலறு சுடரின் மெய்யும்; ஞெகிழிகள் அரற்றுந் தாளும்
ஆலம துயிர்க்கும் செங்கேழ் அரவவெற்றரையும்; சென்னி
மாலைகள் அநந்த கோடி வயின்வயின் பெயருமார்பும்:
சூலமும் பரசுநாளும் துடியும் ஏந்திய பொற்ரேளும்.

ஆகிய திருவுடன் வயிரவர் விளங்கினர். இகழ்ந்த பிரமதேவரின் உச்சிச் சிரத்தை நகத்தால் கிள்ளிக் கையில் ஏந்தினர். அக் கபாலத்தில் திருமால் இந்திரன் முதலிய எல்லா இமையவர்களின் உதிரத்தையும் பலியாக ஏற்ருர்.

பிரமன் வயிரவரைத் தொழுது வாழ்வு பெற்ருன். வேதங்கள் நாய்வடிவாக வந்து பயிரவரை அடைந்தன.

*(6) தட்சன் : உங்கள் சிவன் வேற்றுருக் கொள்ளுமோ?*

*ததீசி :* இந்திரன் ஒரு சமயம் நாம் தேவர் கோமான் என்று செருக்குடன் திருக்கயிலை மலை சென்ருன். புரமெரித்த பரமன் பூதவடி வுடன் வாயிலில் இருந்தார். இந்திரன் பூதத்தைப் பார்த்து ''சம்புவைச் சேவிக்க இது சமயந்தானே?'' என்று கேட்டான். பூதம் பதில் புகலாது இருந்தது. இந்திரன் வெகுண்டு அதன் மீது வச்ராயுதத்தை ஏவினன். பூதமா யிருந்த சிவ மூர்த்தி மீது பட்டு வச்ராயுதம் பொடியாகியது. அப்போது சிவமூர்த்தியின் கோபாக்கினி இந்திரனை வாட்டியது. அவன் பணிந்து தணிந்தான். சிவபெருமான் அக் கோபக் கனலைக் கடலில் விடுத்தார். அது மக வாகத் தோன்றியது.

வருண தேவன் தனக்கு மகவாக வந்த அப்பாலகனைத் தழுவி உச்சி மோந்து வாழ்த் தினன்.

ஊழி பேரினும் உலகம் பேரினும்
வாழி வாழி என் மைந்தன் நீயெனக்
கேழில் ஆசிகள் கிளர்த்திப் போற்றினன்
ஆழிமால் கடற் கரசன் என்பவே.

குன்றவில்லியின் கோபாக்கினியால் உதித்த குழந்தையாதலால் எல்லையில்லாத வல்லபத் துடன் அது விளங்கியது. அக்குழந்தை சிறிது அழுததனல் மண்ணும் விண்ணும் செவிடு பட்டன. அப்பேரொலி கேட்டு அங்குப் பிரம தேவர் வந்தார். வருணன் தன் குழந்தையை அவருடைய கரத்தில் தந்து ஆசி கூறச் சொன் னன். அச்சிறுவன் பிரம தேவனுடைய நான்கு தாடிகளையும் பிடித்து ஈர்த்து இடர் புரிந்தான். பிரமதேவர் மெல்ல விடுவித்து, இச்சிறுவன் சிவகோபத்தில் வந்தவன். இவனுக்கு வேறு வர பலம் தேவையில்லை. இவனைக் கண்டு

நானும் அஞ்சுவன்; நளினை காவலன்
தானும் அஞ்சுவன்; தவறில் வேள்செய்
கோனும் அஞ்சுவன்; கூற்றும் அஞ்சும்; அவ்
வானும் அஞ்சும்; இம்மண்ணும் அஞ்சுமே.

என்று கூறித் தண்ணீரில் பிறந்ததனல் ''சலந் தரன்'' என்று பேர் சூட்டிச் சென்ருர்.

இவன் வளர்ந்து கிளர்ந்தெழுந்து போர் புரிந்து இந்திரனை வென்று அவனுடைய செல் வங்களைக் கவர்ந்தான். காலநேமி என்ற அசுர வேந்தனுடைய புதல்வியாகிய பிருந்தையை மணந்து கொண்டான். அவள் அருந்ததியினும் மேம்பட்ட கற்புடையவள். தேவர்களின் முறையீட்டுக்கு இரங்கிய கரியமால் கருடன் மீது வந்து கடும் போர் புரிந்தார். இருபதாயி ரம் ஆண்டுகள் போர் புரிந்தும் வெல்ல மாட்டா மல் அவனைப் புகழ்ந்து போயினர்.

சலந்தரன் தேடித் தேடி அமரரை வாட்டி னன். புரந்தரன் முதலியோர் வேறு புகலிடம் காணது கயிலைக்குச் சென்று முக்கண்ணரிடம் முறையிட்டார்கள். சலந்தரன்கயிலையைநாடிப் புறப்பட்டான். அவனுடைய மனைவியாகிய பிருந்தை மதி நலம் படைத்தவள். ''பிராண பதியே! நீர் கயிலை போக வேண்டாம்; பகை வேண்டாம். அங்குச் சிவமூர்த்தியைப் பகைத் தால் உம் வாழ்வு முடியும்'' என்று அறிவுரை கூறித் தடுத்தாள். சீற்றத்தால் ஊற்றம் பெற்ற அவன் மனைவியின் வார்த்தையைக் கேளாது திருக்கயிலை சென்ருன்.

சிவபெருமான் முதிய மறையோனய்க் கயிலையில் ஒரு புறம் இருந்தார். அங்குப் பொங்கும் கோபத்துடன் வந்த சலந்தரனைப் பார்த்து ''எங்கு வந்தனை?'' என்று கேட்டார். ''பெரியவரே! அரிய வலி படைத்த நான் சலந்தரன். புராரியுடன் போர் புரிய வந் தேன்'' என்ருன்.

''அப்பா! இப்போரில் என் கால்விரலால் கீறிய இதனை எடுப்பாயேல் உன்னை நான் மதிப் பேன்'' என்று கூறிக் காற் பெரு விரலால் நிலத் தில் வட்டமாகக் கீறினர் இறைவன். சலந்தரன் அதனைப் பெயர்த்தான். பாரம் தாங்காது சிரத்தில் வைத்தான். அது சக்கராயுதமாகி அவனைப் பிளந்து மாய்த்தது. அமரர் துயர்கள் தீர்ந்தது. சக்கரப் படை கண்ணுதல் கரத்தில் வந்து அமர்ந்தது.

திருமால் பிருந்தையை விரும்பி அங்கு ஒரு அழகிய சோலையில் முனிவராய் அமர்ந்திருந் தார். கற்பு மிகுந்த பிருந்தை கயிலை சென்ற கணவன் வராமையால் வருந்தி அச்சோலைக்கு வந்தாள். அவள் அளவற்ற துன்பத்தால் வாடி வருந்தினள். வைகுண்டத்தின் துவாரபாலகர் களாகிய ஜயவிசயர்கள் இரு சிங்கங்களாகி அவளை அஞ்சுமாறு விரட்டினர்கள்.

அங்கு முனிவராயிருந்த திருமால் அவளை அஞ்சேல் என்று அபயமளித்தார். சிங்கமாக வந்தவர்கள் விலகிச் சென்றூர்கள்.

பிருந்தை அம்முனிவரைத் தொழுது, ''எந்தையே! என் கணவனுர் கயிலை சென்றூர். இன்னும் வரக் காணேன். அவர் மாய்ந்த னரோ? அவர் நிலைமை யாதோ? நீர் அறிந்து கூறும்'' என்று அழுத கண்ணுடன் கேட்டாள். அது சமயம் விஷ்ணுவின் சேனைத் தலைவர்கள் இருவர் குரங்கு வடிவுடன் சலந்தரனுடைய பிளந்த உடலைக் கொணர்ந்து அங்கு இட்டார் கள். பிருந்தை அது கண்டு ''அந்தோ!'' என்று அலறி அழுதாள். முனிவர் ''பெண் மணியே! நீ வருந்தாதே. உன் கணவனை எழுப்பித் தருவேன்'' என்று கூறி, சலந்தரன் உடம்பைப் பொருந்த வைத்தார். அவ்வுடலில் தான் நுழைந்து மறைந்து விட்டார். சலந்தர னுகத் தான் நடித்தார். கணவன் என்று அக் கற்புடையவள் களித்தாள். திருமால் அவ ளுடன் பலகாலம் கூடி மகிழ்ந்தார். ஒரு நாள் தூங்கும்போது மாயம் அழிந்தது. பிருந்தை அவரை மாயன் என்று அறிந்து வெகுண்டாள்.

'ஏ மாயனே! என்னை மயக்கி என் கற்பைப் பங்கப்படுத்தினுய். உனக்குத் துணை புரிந்த ஜயவிசயர்கள் உனக்குப் பகைவர்களாகப் பிறக்கக்கடவது; உனக்குக் குரங்குகள் துணை செய்தன. அவற்றையே துணையாகக் கொள்ளு வாயாக. உன் மனைவியை அரக்கர் கவர நீ பழியும் துயரும் எய்துவாயாக'' என்று சாபம் தந்து எரியில் மூழ்கி இறந்தாள்.

திருமால் பிருந்தை எரிந்த சாம்பலில் புரண்டு வருந்தினுர். தேவர்கள் கயிலை சென்று மாயன் செயலைத் தூய சிவமூர்த்தியிடம் கூறி ஞர்கள். அம்பிகை கருணை கூர்ந்து ஒரு விதையைத் தந்து அங்கு விதைக்குமாறு விளம் பினுள். பிரமன் அதனைக் கொணர்ந்துபிருந்தை எரிந்த சாம்பலில் நட்டு அமுதத்தை வார்த் தார். அது துளசிச் செடியாக முளைத்தது. பின்னர் அது ஒரு பெண்ணுமாயிற்று. திருமால் அவளைக் கண்டு பிருந்தை மீதுள்ள காதலைத் துறந்து அவளை மணந்து கொண்டார். அத் துளசியையும் தரித்துக் கொண்டார்.

பின்னர்த் திருவீழிமிழலையில் தினம் ஓரா யிரம் தாமரைப் பூவால் சிவபிரானை வழிபட்டு, ஒரு நாள் குறைந்த பங்கயத்துக்குப் பதில் செங் கதிர்களை எடுத்துச் சிவன் திருவடியில் அர்ச்சித்து ஆழிப் படையைப் பெற்றூர்.

இதுதான் சிவபெருமான் வேற்றுருக் கொண்ட விந்தை. இதனுல் பெருமானுடைய பெருமை குன்றிலிட்ட தீபம் போல் தெளிவாக விளங்குகின்றதல்லவா?

*


## அருள்திரு முத்துமாரியம்மன் திருக்கோயில்

### சோமரசன் பேட்டை : : திருச்சிராப்பள்ளி வட்டம்

தன்னை சரணடையும் மண்ணுலகின் மாந்தரை எந்நாளும் காத்திடுவாள் அன்னை முத்து மாரியம்மன்!

திருச்சிராப்பள்ளி நகரிலிருந்து 7 கல் தொலைவில் உள்ளது சோமரசன்பேட்டை. இவ்வழகிய ஊரில் காவிரியாற்றின் கிளை நதியாக வற்ருத ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் உய்ய கொண்டான் ஆற்றின் கரையில் வளமிக்க தென்னஞ்சோலை சூழ்ந்த அமைதியான சூழ்நிலையிலுள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னை முத்துமாரியம்மனை அனைவரும் வந்து வழிபட்டு, இவ்வூருக்கும் மேற்கே ஒரு கல் தொலைவிலுள்ள சைவப் பெரியார் அருண கிரிநாதரால் பாடல் பெற்ற குமாரவயலூர் முருகப் பெருமானை வணங்குவோருக்கு, எல்லா நன்மையும் உண்டென்பர்.

அருள்திரு முத்து மாரியம்மன் ஆலயத் திருப்பணி சீரிய முறையில் செயல்பட்டு வருவதற்கு அனைவரும் பொருளுதவி செய்து அன்னை முத்து மாரியம்மனை வழிபட்டு நற் பேறு நாளும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றேம்.

இங்ஙனம்,

ஆர். எம். பாலகிருஷ்ணன்,
அறக்குழுத் தலைவர்.

பொ. போதராசன்,
செயல் அலுவலர், (கூட்டுப் பொறுப்பு)

எஸ். ராஜ சந்திரசேகரன்,
ஆர். முத்துசாமி பிள்ளை,
எம். கோவிந்தசாமி பிள்ளை,
ப. முருகன்,
அறங்காவலர்கள்.

# அருள்மிகு திருக்குற்ருலநாதசுவாமி திருக்கோயில்

## குற்ருலம், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

சுற்ருத வூர்தோறுஞ் சுற்ற வேண்டாம் புலவீர்
குற்ருல மென்ருெருகாற் கூறினுல்—வற்ரு
வடவருவியான் மறுபிறவிச் சேற்றில்
நடவருவி யானே நமை.

—திரிகூடராசப்பக் கவிராயர்.

உற்ருர் ஆருளரோ—உயிர்
கொண்டு போம் பொழுது
குற்ருலத்துறை கூத்தனல் லால்நமக்கு
உற்ருராருளரோ.

—அப்பர்.

இத்தலம் தென்காசி புகைவண்டி நிலையத்திலிருந்து தென்மேற்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையினடி வாரத்தில் உள்ளது. வடக்கே மதுரையிலிருந்தும், கிழக்கே திருநெல்வேலி, திருச்செந்தூர் முதலிய தலங்களிலிருந்தும், தெற்கே பாவநாசத்திலிருந்தும், மேற்கே செங்கோட்டை, கொல்லம் முதலிய இடங்களிலிருந்தும் குற்ருலத்திற்குப் பேருந்து வசதிகள் உண்டு. இத்திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்ருலும் இயற்கை அன்னையின் எழில் நலன்களாலும், வந்து தங்குபவர்களுக்கு உடல் நலமும், மனநலமும், கொடுக்கும் பான்மையினுலும், தொன்மையினுலும் சிறந்து விளங்குகிறது. அகத்தியர் காலத்திற்கு முன்பே தோன்றி, நாயன்மார்களால் பாடல் பெற்ற தலமாகும். ஆடவல்லானின் ஐம்பெரும் சபைகளில் ஒன்ருகிய சித்திர சபை இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

மார்கழித் திருவாதிரை அன்று நடைபெறும் ஆருத்திரா தரிசனம், மற்ற தலங்களை விட வெகு சிறப்பாக உள்ளது. தொன்மை வாய்ந்த இத்தலத்தில் திருக்குட முழுக்கு விழா நடந்து 11 ஆண்டுகள் பூர்த்தியாகி 12-வது ஆண்டு நடைபெற்று வருவதால், அடுத்த ஆண்டில் திருக்குடமுழுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டுத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைக் காணும் அன்பர்கள் திருப்பணிக்கும், திருக்குடமுழுக்கு விழாவிற்கும் தாராளமாக நன்கொடை வழங்குமாறு வேண்டப்படுகிருர்கள்.

இத்தலத்தைப் பற்றி மகாகவி திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட திருக்குற்ருலத் தலபுராணம், திருக்குற்ருலக் குறவஞ்சி, யமகவந்தாதி, உலா, சிலேடைவெண்பா, பரம்பொருள் மாலை, திருக்குற்ருலக் கோவை ஆகிய நூல்கள் திருக்கோயில் அலுவலகத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

இத்தலத்தில் சாரல் காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், மற்றும் பௌர்ணமி அன்றும், சாரலல்லாத காலத்தில் (அக்டோபர் முதல் மே முடிய) பௌர்ணமி அன்றும், திருவிளக்கு வழிபாடு பூசை நடத்தத் திட்டமிடப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. திருவிளக்கு நன்கொடை வழங்க விரும்புவோர் செயல் அலுவலரைத் தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

**திரு. பி. கே. எஸ். சங்கர முதலியார்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**அ. சீத்தாராமன்,** பி.ஏ., பி.எல்.,
செயல் அலுவலர்.

திரு. ஜி. பிச்சையாப் பிள்ளை,
திரு. எச். நவநீத கிருஷ்ண மருதப்ப பாண்டியன்,
திரு. பி. பொன்னையா பாண்டியன்,
திரு. எம். குட்டி மூப்பனர்,


அறங்காவலர்கள்.

# திருவாசகத்தின் பெருமை

**நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில்**

வேறு தலத்துக்கும், திருப்பெருந்துறைக்கும் இடையே இருக்கும் வேற்றுமை தனித்தன்மை வாய்ந்தது. இந்தத் தலம் தான் திருவாசகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த தலம். மாணிக்கவாசகர் உள்ளம் உருகி உருகி இறைவனைப் பாடியதால் தான் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற முதுமொழி பிறந்தது. திருவாசகத்தில் காணப்படும் மணிவாசகரின் உருக்கம், படிப்பவர்—அனைவரையும் உருக்கக் கூடியதால் தான், நம் நாட்டவரேயன்றிப் பிற நாட்டாரும் அதன் அருமையை யுணர்ந்து பிறமொழிகளில் பெயர்த்தார்கள். எத்தனையோ பக்திப் பாடல்கள் உண்டு. இருந்தாலும் திருவாசகத்தின் உருக்கம் அவற்றிலிருப்பதாகச் சொல்லி விட முடியாது. பரம்பொருளான இறைவனைச் சொல்லால் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக, எப்படி எப்படியோ வெல்லாம் அந்தப் பரம்பொருளை அழைக்கின்றார்கள். சோதியே! சுடரே! ஆதியே அருளே! முதலே! முடிவே! மூலமே! என்றெல்லாம் குறிப்பிட்டும் மனநிறைவு பெறாமல் தத்தளிக்கிறார். இந்தத் தலத்துக்கு வேறொரு பெருமையுண்டு. ஒவ்வொரு ஊரிலிருக்கும் கோயிலில் இருக்கும் சுவாமிக்கு ஒவ்வொரு குறிப்பிட்ட பெயர் உண்டு. இந்தக் கோயிலுக்கு ஆத்மநாதர் ஆலயம் என்று பெயர் இருப்பது எல்லோருடைய ஆத்மாவுக்கும் நாதனாக இருக்கின்ற பரம்பொருளுடைய தலம் என்று சொல்லுமாப்போல் பொதுப்படையாக அமைந்திருக்கிறது. மேலும், பிற கோயில்களிலிருப்பதுபோல் இந்தக் கோயிலில் மூலவராக எந்த விக்கிரகமும் இல்லை. ஒரு வெறும் மேடையே இந்தக் கோயிலின் புனித மையமாக அமைந்திருக்கிறது. இவற்றின் சிறப்புக்களையெல்லாம் உணர்வதற்கு இறைத் தன்மை பற்றிய ஞானம் வேண்டும். சம்பிரதாயமாகச் செய்யும் சடங்குகள் அந்த ஞானத்தை மறைத்து விடக் கூடும்.

**ஆவுடையார்கோவில் என வழங்கும் திருப்பெருந்துறைக் திருக்கோயில் முகப்பு மண்டபத்தில் தமிழ்நாடு உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஜஸ்டிஸ் மு. மு. இஸ்மாயில் அவர்கள் 23-2-75-ல் திருவாசகப் பெருமை பற்றி ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் சுருக்கம்.]**



சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலின் தெப்பக் குளத்தில் சென்னைமாவட்டச் சீரணியினர் தூர் எடுக்கும் காட்சி.

158602
JL
Q2m211,N58
N75.17.8

# அருள்மிகு திருமலைக் குமாரசாமி திருக்கோயில்

## பண்பொழி, தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

திருக்குற்றாலத்தின் வடமேற்குத் திசையில், தென்காசி செங்கோட்டை ரயில் நிலையங்களிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் 450 அடி உயரத்தில் திருமலைக் கோயில் அமைந்து இருக்கிறது. கலியுக வரதனாகிய கந்தப் பெருமான் தனது குன்றுதோறும் ஆடல் விளையாட்டில் திருமலைக் கோயிலையும் ஒரு நிலையாகக் கொண்டு பக்தர்களைக் காத்துக் கருணை புரியும் குமரனாய் விளங்குகிறான்.

பழந்தமிழ் நூல்களில் காவிமலை என்று போற்றப்படும் இத்திருமலையில் அகத்திய முனிவரும், சப்த கன்னிகைகளும் முருகப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்றனர் என்பது வரலாறு. பந்தள அரசனால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் பிற்காலத்தில் சிவகாமி பரதேசி அம்மையாரால் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்தலம் அருணகிரிநாதர் மற்றும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் பாடல் பெற்றது.

இத்திருக்கோயில் சார்பில் குற்றாலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், பண்பொழியில் சிறுவர் இல்லம், சித்த வைத்தியசாலை முதலியனவும் நடைபெற்று வருகின்றன. ஏழைகளுக்கு இலவசத் திருமணம் நடத்தப்படுகிறது. கல்யாண மண்டபமும், பயணிகள் தங்கும் அறைகளும் கட்டப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு மாதக் கிருத்திகையும், கடைசி வெள்ளிக்கிழமையும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. தைப் பூசத் திருவிழா, சித்திரை வசந்த விழா மிகவும் பிரபலமானவை.

குமரன் கருணைக்கு ஆளாகித் திருவருள் பெற்று மனக் குறைகள் நீங்கப் பெற்றவர்கள் கணக்கிலடங்கார்.

**“வாழ்க திருமலையாதிபன் திருவடி”**

**சு. பரமசிவனுத் தேவர்**
**சோ. கோவிந்தராசன்**
அறங்காவலர்கள்.

**ஜி. சோமசுந்தரம்**, பி.எஸ்சி.,
செயல் அலுவலர்.

TAMIL NADU ARCHIVES
LIBRARY
30 JUN 1975
MADRAS-8


# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.




தொலைபேசி சென்னை 29684, 81954 திருச்சி 3814 கோவை 35051

கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.